www.padippakam.com

கே. பாலகோபால்



ஆக்கப்பூர்வமான வன்முறை என்று ஒன்றில்லை

www.dalithmurasu.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
மார்ச் 2006 Vol : 3 - Iss : 5
ரூ. 6

# இடங்களைக் கைப்பற்றுவோம் !

படிப்பகம்

www.padippakam.com

பாபாசாகேப் பேசுகிறார்

# தாழ்த்தப்பட்ட மக்களை அரசியலிலிருந்து துடைத்தெறிவதற்கான முதல் முயற்சியல்ல இது!



தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரதி நிதித்துவம் அளிப்பதற்குச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து, திரு. காந்தி தெரிவித்துள்ள அச்சம் முற்றிலும் கற்பனையானது என்பது என் கருத்து. முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனி வாக்காளர் தொகுதிகள் அளிப்பதால், நாடு பிளவுபடப் போவதில்லை என்ற நிலையில் - தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குத் தனிவாக்காளர் தொகுதிகள் வழங்குவதால், இந்து சமுதாயம் பிளவுபட்டு விடும் என்று கூற முடியாது...

பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, சுயாட்சி அரசியலமைப்பின்படி சிறப்பு அரசியல் உரிமைகள் பெறுவதற்குத் தகுதிபெற்ற ஒரு வகுப்பினர் எவரேனும் இருப்பார்களேயானால், அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்தான் என்பதைப் பலரும் உணர்ந்திருக்கிறார்கள் என்பது உறுதி. இவர்கள் உயிர் வாழும் போராட்டத்தில், தாக்குப்பிடித்து நிற்க முடியாத நிலையில் உள்ளனர். அவர்கள் பிணைக்கப்பட்டுள்ள மதம் அவர்களுக்கு ஒரு கவுரவமான இடத்தை அளிப்பதற்குப் பதில், அவர்களைத் தொழுநோயாளிகள் போல் நடத்துகிறது; இயல்பான சமூகத் தொடர்புக்கு அருகதையற்றவர்கள் என்று அவர்களுக்கு முத்திரை குத்துகிறது. பொருளாதார ரீதியில் பார்த்தால், தங்களின் அன்றாட வாழ்க்கைக்கு, சாதி இந்துக்களை முழுவதுமாக சார்ந்திருக்க வேண்டிய ஒரு வகுப்பாக அது இருந்து வருகிறது. சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்கு, அதற்கு எந்த வழியும் இல்லை.

இந்துக்களின் எதிர்ச்சார்பான மனோபாவத்தால், அவர்களுக்குப் பல்வேறு வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன. அது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழ்க்கையில் முன்னேறி விடாதபடி தடுப்பதற்கு, இந்து மதத்தின் எல்லா கதவுகளையும் அவர்களுக்கு மூடிவிடுவதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்களில் சாதாரண இந்தியக் குடிமக்களாக சிதறுண்டு, ஒரு சிறு அமைப்பாக இருந்துவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேற்கொள்ளும் எந்த முயற்சியையும் - ஈவு இரக்கமின்றி ஒடுக்குவதற்கு சாதி இந்துக்கள், அவர்கள் என்னதான் தங்களுக்குள் பிளவுபட்டிருந்தாலும், எப்போதும் சதி செய்தே வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில், திட்டமிட்ட கொடுங்கோன்மையை எதிர்த்து நடத்தப்பட்டு வரும் வாழ்க்கைப் போராட்டத்தில், வெற்றிபெறும் பாதையில் எத்தனை எத்தனையோ இடர்ப்பாடுகளை சந்தித்து வரும் ஒரு வகுப்பினர் - தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குள்ள ஒரே வழி, அரசியல் அதிகாரத்தில் ஓரளவு பங்குபெறுவதுதான் என்பதை நியாய உள்ளம் கொண்ட எல்லோருமே ஏற்றுக் கொள்வர்...

**“இத்தகைய சூழ்நிலையில், திட்டமிட்ட கொடுங்கோன்மையை எதிர்த்து நடத்தப்பட்டு வரும் வாழ்க்கைப் போராட்டத்தில், வெற்றிபெறும் பாதையில் - எத்தனை எத்தனையோ இடர்ப்பாடுகளை சந்தித்து வரும் ஒரு வகுப்பினர் - தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குள்ள ஒரே வழி, அரசியல் அதிகாரத்தில் ஓரளவு பங்குபெறுவதுதான் என்பதை நியாய உள்ளம் படைத்த எல்லோருமே ஏற்றுக் கொள்வர்.”**

தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் விரும்பும் ஒருவர், புதிய அரசியலமைப்பில் அவர்களுக்கு எவ்வளவு முடியுமோ, அவ்வளவு அதிகாரத்தைப் பெற்றுத் தருவதற்கு திரு. காந்தி சற்றும் விட்டுக் கொடுக்காமல் போராடுவார் என்றுதான் நினைத்தேன். ஆனால், மகாத்மாவின் சிந்தனைப் போக்குகள் விந்தையாக இருக்கின்றன; புரிந்து கொள்வதற்கு முடியாதவையாக இருக்கின்றன. வகுப்புத் தீர்ப்பின்படி, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பெறும் அற்பமான அரசியல் அதிகாரத்தை அதிகப்படுத்துவதற்கு அவர் முயற்சி மேற்கொள்ளவில்லை. அது மட்டுமன்றி, அவர்கள் பெறக்கூடிய சிறிதளவு அதிகாரத்தையும் அவர்களிடமிருந்து தட்டிப்பறிப்பதற்கு, தமது உயிரையே பலியிட முன்வந்திருக்கிறார். அரசியல் வாழ்விலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களை அறவே துடைத்தெறிவதற்கு, மகாத்மா செய்யும் முதல் முயற்சி அல்ல இது...

மகத்திலும் நாசிக்கிலும் நடைபெற்ற சச்சரவுகளில், இந்து சீர்திருத்தவாதிகள் எனப்படுவோர் எந்த லட்சணத்தில் நடந்து கொண்டனர் என்ற அனுபவம் எனக்கு உண்டு. தாழ்த்தப்பட்டோரின் நலனில் உண்மையிலேயே அக்கறை கொண்டவரும், தாழ்த்தப்பட்ட மக்களை கைதூக்கிவிடும் பொறுப்பை, மேம்பாடடையச் செய்யும் சீரிய பணியை இத்தகைய நம்பிக்கை துரோகிகளிடம் ஒப்படைக்க - ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள் என்பதை இந்த அனுபவத்தைக் கொண்டு துணிந்து கூறுவேன். நெருக்கடி வேளையில், தங்கள் இனத்தவரின் உணர்ச்சிகளைப் புண்படுத்துவதைவிட, தங்கள் கோட்பாடுகளை உதறித் தள்ளிவிடத் தயாராக இருக்கும் சீர்திருத்தவாதிகளால் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எந்தப் பயனும் இல்லை...

இந்து அரவணைப்பிலிருந்து விடுபடுவதற்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தீர்மானித்துவிட்டால் - இவ்வகையான எத்தகைய நிர்ப்பந்தமும் கொண்டு அவர்களை அந்த அரவணைப்பில் நீடிக்கச் செய்ய முடியாது. இந்து மதம் அல்லது அரசியல் அதிகாரம் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி தீண்டத்தகாதவர்களை மகாத்மா கேட்டுக் கொண்டால், அவர்கள் அரசியல் அதிகாரத்தைதான் தேர்ந்தெடுப்பார்கள். இதன் மூலம் மரணத்தின் பிடியிலிருந்து மகாத்மாவை காப்பாற்றுவார்கள்... ஆனால், மகாத்மாவின் உயிரா அல்லது என் மக்களின் உரிமைகளா? இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் நிலைக்கு அவர் என்னைத் தள்ளமாட்டார் என்று நம்புகிறேன். ஏனென்றால் என் மக்களைக் குண்டுகட்டாகக் கட்டி, தலைமுறை காலத்துக்கு சாதி இந்துக்களிடம் ஒப்படைக்க, நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டேன்.



---

*பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு - 9, பக்கங்கள் : 311 - 317*




படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி



சிரிப்பின் எக்காளத்தில்
அமிழ்கிறது
உள்ளங்களில் கிடக்கும்
வெஞ்சினம்

இடங்களின் மீது நடக்கும்
அரசியலின் சூதில்
ஏமாற்றுவதற்காய் காலியாக்கப்படுகின்றன
இல்லாத இதயத்தில் இடங்கள்

எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு
செரித்துக் கிளம்புகின்றனர்
கோரிக்கைகளின் கைகளை

சுருண்டு குழையும் வாலென
புறந்தள்ளி


ஒட்டிய மண்ணை
உதறிவிட்டு எழுகிறது
அழிக்க விம்மும் தடைகளை
மோதி உடைக்க
எளிய மக்களின்
புறக்கணிக்கப்பட்ட அரசியல்

புதிய விடியலாய்
புதிய விருட்சமாய்
புதிய விடுதலையாய்



படிப்பகம்

www.padippakam.com




8 மண் மீட்புப் போர் - பொன்னி வளவன்

10 மீள்கோணம் - அழகிய பெரியவன்

14 எட்டாத எட்டுத் துறைகள் - கிருத்துதாசு காந்தி

18 இடங்களைக் கைப்பற்றுவோம் - கனகமுத்து

22 "ஆக்கப்பூர்வமான வன்முறை என்று ஒன்றில்லை" - கே. பாலகோபால்

26 சாதி = அரசு = ஆட்சி - யாக்கன்

30 அத்துமீறுவது எப்போது? - பூவிழியன்

32 அம்பேத்கரின் ஆசான் புத்தர் ஏபி. வள்ளிநாயகம்

38 மிதந்து வரும் அபாயம் அ. முத்துக்கிருஷ்ணன்

43 கீழ்வெண்மணி : பெரியார் விடுத்த அறிக்கை

- அட்டைப்பட வடிவமைப்பு : யாக்கன்
- இதழ் வடிவமைப்பு : பிரேமா, ஜெமிமா ஆலிஸ்
- அலுவலக ஒருங்கிணைப்பு : ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார், சி. ராமன்



படிப்பகம்

www.padippakam.com

# தலித் அரசியல் x தேர்தல் அரசியல்

''அகில இந்திய பட்டியல் இனக் கூட்டமைப்பின் செயற்குழு, கடந்த தேர்தலில் சந்தித்த தோல்வியை மறந்துவிடவில்லை. இத்தோல்வியால் இச்செயற்குழு சோர்வடைந்துவிடவில்லை. இத்தகைய தோல்விகள் சாதாரணமானதே. ஓர் அரசியல் கட்சி, மக்களைக் கற்பிக்கவும், கிளர்ந்தெழுந்து போராடவும், அவர்களை ஒன்றிணைக்கவுமே இருக்கிறதே ஒழிய - தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மட்டுமே அது நடத்தப்படுவதில்லை. தீண்டாமைக் கொடுமைகளுக்குத் தீர்வு காணாதவரை, 'பட்டியல் இனக் கூட்டமைப்பை'க் கலைக்க முடியாது.''

- டாக்டர் அம்பேத்கர்

'தேர்தலைப் புறக்கணிக்கப் போகிறோம்' - அண்மையில் ஏற்பட்ட தற்காலிக அரசியல் நெருக்கடியின்போது, விடுதலைச் சிறுத்தைகள் இவ்வாறு அறிவித்தனர். அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும், தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்ல முற்படாத தொரு சூழலில், ஒரு தலித் கட்சி மட்டும் - இப்படிச் சொல்ல வேண்டிய கட்டாயம் என்ன? மக்கள் நலனில் அக்கறையுடையோர் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தருணம் இது.

திராவிடக் கட்சிகளுக்குரிய கொள்கைக் கோட்பாடுகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு, வர்ணாசிரமக் கட்சியான பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து, 'தீண்டத்தகாத கட்சி என்று எதுவுமில்லை' என்று முழங்கிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, விடுதலைச் சிறுத்தைகளை மட்டும் தீண்ட மறுத்தது ஏன்? அக்கூட்டணியில் இருக்கும் வேறு எந்தக் கட்சிகளும், இதை ஒரு முக்கியப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் வெட்கக் கேடானது. இந்த அநீதி குறித்து மறந்தும் வாய் திறக்காத 'தீக்கதிர்' ஏடு, பார்ப்பன 'தினமலர்' போல செய்தி வெளியிடுகிறது : ''விடுதலைச் சிறுத்தைகள் அ.தி.மு.க. அணியில் ''செட்டிலானது''. இவர்கள் ஜெயலலிதாவுடன் இணைந்தால் அது கூட்டணி; தலித் இயக்கம் இணைந்தால் மட்டும் அது 'செட்டில்மெண்ட்'. பூணூல்களின் புதிய இலக்கணம் இது. ஏகாதிபத்திய எதிர்ப்பைச் சுரண்டிப் பார்த்தால், அதிலும் ஜாதியம் ஜொலிப்பதை என்னவென்று சொல்வது!

2004 ஆம் ஆண்டில், பா.ம.க.வும் - விடுதலைச் சிறுத்தைகளும் இணைந்து, தமிழ்த் தேசிய உருவாக்கம் குறித்து முழங்கியபோது, 'முரண்படும் தேசியம்' என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். தற்பொழுது அந்த முரண்பாடுதான் ஏற்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களின் துயர் துடைக்கவும், தமிழ் மொழியைப் பாதுகாக்கவும், தமிழ்ப் பெயர்களைச் சூட்டவும், குஷ்புவுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் - பாட்டாளி மக்கள் கட்சியும், பிற தமிழ்த் தேசிய அமைப்புகளும், சிறுத்தைகளுடன் இணைந்து மேடையைப் பகிர்ந்து கொண்டனர். ஆனால், விடுதலைச் சிறுத்தைகளின் அடிநாதமான கொள்கையான 'அடித்தட்டு மக்களுக்கு அரசியல் அதிகாரம் வேண்டும்' என்பதை வலியுறுத்தியதும் - முரண்பட்டு - அவர்களை எதிர்த்திசை நோக்கித் தள்ளி விட்டனரே! இது கடைந்தெடுத்த தீண்டாமை அன்றி வேறென்ன?

பொதுவான எல்லா பிரச்சினைகளிலும் இணையத் தயாராக இருப்பவர்கள், சாதி ஒழிப்புக்கும் - அதிகாரப் பங்கீட்டுக்கும் தயாராக இருக்கும்போதுதான் - தமிழ்த் தேசியக் கோட்பாடு முழுமை பெறும். இல்லை எனில், அது சாதித் தேசியமாக, தமிழ்த் தேசியக் கருத்தியலை கருவறுக்கும். 'எங்கே போனார்கள் தமிழ்த் தேசியவாதிகள்?' - சேரி மக்கள் கேட்கிறார்கள். இதற்கு நியாயமான பதில் சொல்ல வேண்டிய தமிழ்த் தேசியவாதிகள், கருணாநிதியைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முடியாது.

அறிவுஜீவிகளின் எகத்தாளத்தை எதைக் கொண்டும் கட்டுப்படுத்த முடியாது. திருமாவளவனை எப்போது பழி வாங்கலாம் என்று காத்துக் கிடந்தவர்களுக்கு, தற்காலிகமாக ஓர் வாய்ப்பு கிடைத்தது. தலித் அரசியல் இனி உயிர் பிழைக்காது என அவர்கள் கொக்கரிக்கிறார்கள். தேர்தல் அரசியலை மட்டுமே ஒட்டுமொத்த தலித் அரசியலாகப் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள், வேறு எப்படி சிந்திப்பார்கள்? சமூகத் தளங்களில் நிலவும் சாதிக் கொடுமைகளைக் கண்டு முகிழ்த்தெழுந்த தலித் இயக்கத்தின் தேவை - சாதி ஒழியும் வரை இருக்கவே செய்யும். தலித் விடுதலை அரசியலின் ஒரு பகுதியே தேர்தல் அரசியல். அத்தளத்தில் பங்காற்றுபவர்கள், தேர்தல் அரசியலுக்குரிய சமரசங்களுடனேயே செயல்பட வேண்டியிருக்கிறது. ஆனால், அதை பூதாகரமாக்கி ஒட்டுமொத்த சாதி ஒழிப்பு அரசியலையே கொச்சைப்படுத்துவது, சாதியத்திற்கு ஆதரவாகவே முடியும்.

ஒரு தலித் இயக்கத்திற்கு, தேர்தலைப் புறக்கணித்தாக வேண்டிய சூழல் எழுவது இயல்புதான். ஏனெனில், இந்து சமூக வாழ்வியலில் தீண்டாமை, எந்நேரமும் தீப்பற்றக் கூடிய ஆபத்து உள்ளது. அரசியல் களத்திலும் அது தலித்துகளை வழிமறிக்கும். சமூகப் புரட்சியைக் கையிலெடுத்தாக வேண்டிய நிர்பந்தத்தை அது நம்மீது திணிக்கும். ஏனெனில், 'தலித் அரசியல்' என்று சொல்லப்படும் சாதி ஒழிப்பு அரசியல், 'தேர்தல் அரசியல்' என்று சொல்லப்படும் சாதிய, மதவாத அரசியலுக்கு நேர் எதிரானது. •


தலித் முரசு

Volume : 3 Issue : 5

மார்ச், 2006

10 - 2

•

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்

அழகிய பெரியவன்

யாக்கன்

காவ்யா

விழி.பா. இதயவேந்தன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-

நூலகக் கட்டணம் : ரூ. 200/-

வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்

9, சூளைமேடு நெடுஞ்சாலை

சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in

www.dalithmurasu.com




படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

"முகமது நபிகளை மோசமாகச் சித்தரித்து கேலிச்சித்திரம் வரைந்த டென்மார்க் ஓவியரைக் கொல்பவர்களுக்கு 51 கோடி ரூபாய் வழங்குவதாக உத்திரப் பிரதேச அமைச்சர் யாகூப் குரேஷி அறிக்கை விடுத்திருந்தார். இது, கொலை செய்யத் தூண்டும் கிரிமினல் குற்றமாகும். மதவெறிக் கிருமி தீவிரமாகப் பரவக் கூடியது. 'இந்து சட்ட வாரியம்' என்று சொல்லிக் கொள்ளும் ஓர் அமைப்பு, ஓவியர் உசேன் இந்து கடவுள் சரஸ்வதியை நிர்வாணமாக வரைந்ததற்காக எதிர்ப்புத் தெரிவித்து, அவரது தலைக்கு 101 கோடி ரூபாய் அளிப்பதாக அறிவித்துள்ளது. இத்தகைய அறிவிப்புகள், விலங்காண்டித்தனமான சமூகங்களிலேயே கொண்டாடப்படும். இத்தகைய செயல்களை எந்தவொரு தயக்கமும் இன்றி வெளிப்படையாக அனைத்துக் கட்சிகளும், மக்களும் - எவ்வித அரசியல், மத மற்றும் கொள்கைப் பாகுபாடின்றி கண்டிக்காதது வெட்கக்கேடானது. எந்தவொரு சமூகத்தின் மத உணர்வுகளைப் புண்படுத்தினாலும், நம்முடைய சட்டத்தில் கடுமையான தண்டனைகள் வழங்க வழி இருக்கிறது. உசேன் சட்டத்தை மீறியிருந்தால், அவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, அவர் குற்றவாளி என்பது நிருபணமானால் - அவர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், ஒரு நாகரீகமான நாட்டில், எந்தவொரு தனி நபரும் அல்லது அமைப்பும் தாங்களாகவே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு - நீதிபதியாக, நீதிமன்றமாக, தூக்குத் தண்டனை வழங்குபவராக மாறிவிட முடியாது. இத்தகைய ஆபத்தான போக்குகளை, மூர்க்கத்தனமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

**சோலி சொராப்ஜி**, மய்ய அரசின் முன்னாள் தலைமை வழக்கறிஞர், 26.2.2006 நாளிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில்




இவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல; கார்ட்டூனிஸ்டுகள், ஓவியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், பாடகர்கள்...

'டெக்கான் கிரானிக்கல்'

கடந்த அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் சிங்களப் பேரினவாத அரசின் இனவெறி அடக்குமுறைகளால் - கணக்கிலடங்கா உயிர்ச் சேதங்களுக்கும், உடைமைச் சேதங்களுக்கும் ஆளாக்கப்பட்டு, லட்சக்கணக்கான தமிழர்கள் உலக நாடுகளெங்கும் அகதிகளாய்ப் புலம் பெயர்ந்து வாழும் கேடான நிலையில், மென் மேலும் ஈழத்தில் தலைவிரித்தாடும் சிங்கள ராணுவ வெறியாட்டத்தால், அண்மைக்காலமாக நூற்றுக்கணக்கான தமிழர்கள் - தமிழகத்தை நோக்கி அகதிகளாக வெளியேறும் கொடுமைகளும் அதிகரித்துள்ளன. இந்நிலையில், ஈழத் தமிழ் மக்களின் மறுவாழ்வுக்கு 'தமிழ் ஈழமே தீர்வு' என்னும் அடிப்படையில் இந்தியப் பேரரசும், சர்வதேச சனநாயகச் சக்திகளும் - தமிழ் ஈழத்தை உடனடியாக அங்கீகரிக்க வேண்டும்.


**14.2.2006** அன்று சென்னையில் நடைபெற்ற ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் நிறைவேற்றிய தீர்மானம்




'சகாரா டைம்'

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் தனது தவறான கொள்கையால், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஈராக்கியர்களைப் படுகொலை செய்துள்ளார். அவர் கியூபாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை விதித்ததோடு மட்டுமின்றி, தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதும் பல்வேறு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறார். தான் பிற நாடுகள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று கடவுள்தான் தன்னை இயக்குகிறார் என்று அவர் வெளிப்படையாகவே சொல்கிறார். இத்தகையதொரு மனிதரை, இந்தியாவின் விருந்தாளியாக நாம் எப்படி வரவேற்க முடியும்?"

பிரகாஷ் காரத், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர், 'தி வீக்' ஏட்டுக்கு அளித்துள்ள பேட்டியில்




'இந்து'



படிப்பகம்

www.padippakam.com

# இப்போது கிடைக்கிறது...

## தெற்காசிய மொழிகளில் முதல் முறையாக
# தமிழில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்

அறிமுக நூல்கள், புதிய துறைகளை அறிந்திட ஆர்வத்தைத் தூண்டும் இலகுவான வழி; முக்கியமான விஷயங்களைக் கற்க விரும்பும் எல்லோருக்கும் தேவைப்படும் அடிப்படையான நூல்கள்; துறை வல்லுநர்களால் எழுதப்பட்டு, உலகம் முழுவதும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போது தமிழில் கிடைக்கும் சுருக்கமான அறிமுகங்கள் :

இலக்கியக் கோட்பாடு
ஜானதன் கல்லர்
தமிழில்: ஆர். சிவகுமார்

பௌத்தம் தாமியென் கோவ்ன்
தமிழில்: சி. மணி

இந்துமதம் கிம் நாட்
தமிழில்: டி.கே. ரகுநாதன்

உலகமயமாக்கல்
மான்ஃப்ரட் பி.ஸ்டெகர்
தமிழில்: க. பூரணச்சந்திரன்

புத்தர் மைக்கேல் கே.தர்ஸ்
தமிழில்: சி. மணி

வரலாறு ஜான் எச். அர்னால்டு
தமிழில்: பிரேம்

தத்துவம் எட்வர்டு கிரெய்க்
தமிழில்: சே. கோச்சடை

ஃப்ராய்ட் அந்தோனி ஸ்டோர்
தமிழில்: சி. மணி

சமூக-பண்பாட்டு மானிடவியல்
ஜான் மோனகன், பீட்டர் ஜஸ்ட்
தமிழில்: பக்தவத்சல பாரதி

பாசிசம் கெவின் பாஸ்மோர்
தமிழில்: அ. மங்கை

அரசியல் கென்னத் மினோக்
தமிழில்: ஆனந்தராஜ்

கலைக் கோட்பாடு
சிந்தியா ஃப்ரீலேண்ட்
தமிழில்: செ. பாபு ராஜேந்திரன்

இறையியல்*
டேவிட் எஃப். ஃபர்ட்
தமிழில்: சூசைமாணிக்கம்

உளவியல்*
கில்லியன் பட்லர்,
ஃபி.தா மெக்மெனஸ்
தமிழில்: டி.ஐ. ரவீந்திரன்

பின் நவீனத்துவம்*
கிறிஸ்தோஃபர் பட்லர்
தமிழில்: பிரேம்

ஜனநாயகம்* பேனட் க்.க்
தமிழில்: த. ஜெயராமன்

பின் அமைப்பியல்*
கேதரின் பெல்ஸி
தமிழில்: அழகரசன்

பின் காலனியம்* யூங்
தமிழில்: அ. மங்கை

தொல்லியல்* பவுல் பாஹ்ன்
தமிழில்: சு. ராஜவேலு

பயங்கரவாதம்*
சார்லஸ் டவுன்சென்ட்
தமிழில்: ஞாநி

**தொண்ணூறு ரூபாயில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்...**
**கையடக்கமாய்... சிறு பையடக்கமாய்... கருத்தை ஈர்க்கும் தமிழ் நடையில்...**

* ஜூலை 2006 வெளியீடுகள்

வெளியீடு
அடையாளம்
1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310. ✆ 04332 273444 email:admin@adaiyalam.com

கிடைக்குமிடங்கள்: சென்னை: திலீப் குமார் 044 24952217, ஹிக்கின்பாதம்ஸ் 28520640, நியூ புக்லேண்ட்ஸ் 28158171, கீழைக்காற்று 28412367 கோவை: விஜயா புக்ஸ் 0422 2394614 சேலம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 0427 245081 திருச்சி: 0431 2700885 தஞ்சை: 04362 231371 மதுரை: 0452 2350271 திருநெல்வேலி: ஈகிள் புக்ஸ் 0462 2578899, நாகர்கோவில்: சுதர்சன் புக்ஸ் 04652 228445, இலங்கை: பூபால சிங்கம் புத்தக சாலை, கொழும்பு 11

படிப்பகம்

www.padippakam.com






# மக்கள் நடத்திய மண் மீட்புப் போர்!



படிப்பகம்

www.padippakam.com

■ பொன்னிவளவன்

பூட்டிய ஏர் கலப்பைகள், மாட்டு வண்டிகள் அணிவகுக்க - கடப்பாறை, மண்வெட்டி, கதிரறுக்கும் அறுவாள் சகிதமாக - நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களும் அய்நூறுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் திரண்டு, நிலத் திருடர்களை விரட்டியடித்த புரட்சி - கள்ளக்குறிச்சி அருகேயுள்ள கரடிச்சித்தூரில் நிகழ்ந்துள்ளது. 3.2.2006 அன்று முதற்கட்டமாகவும், 13.2.2006 அன்று முடிவாகவும் நடைபெற்ற இந்த நேரடி நில மீட்புப் போரைத் தடுக்க - வழக்கம் போல் காவல் துறையும், வருவாய் நிர்வாகமும் மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்து மக்கள் வெற்றி கண்டனர்.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சிக்கு மேற்கே கல்வராயன் மலையடிவாரத்தில், கோமுகி நதி பாசன முகப்பில் அமைந்துள்ளது கரடிச்சித்தூர். ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் மூன்றிலொரு பங்கு வசிக்கின்றனர். இருப்பினும், விவசாய நிலங்கள் ரெட்டியார், பிள்ளைமார், நாயுடுகள் போன்ற ஆதிக்க சாதியினர் வசமே பெருமளவில் உள்ளது.

கருப்பன், செயராமன் இருவரும் கரடிச்சித்தூர் வாழ் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த அண்ணன் தம்பிகள். 1935 முதல் இவர்களது அனுபவத்திலும், பட்டா பாத்தியதையிலும் நான்கு ஏக்கர் பத்து சென்ட் பஞ்சமி நிலம் (சர்வே எண். 90இல்) இருந்தது. மூத்தவர் கருப்பன் நோயுற்று 1979இல் மரணமடைந்தார். இவரது மனைவி சோலையம்மாளையும் தம்பி செயராமனையும் அரசு கடன் பெற்றுத் தர அவர்களுடைய கை நாட்டு வேண்டும் என்று ஏமாற்றி அவர்களது நிலத்தை தாவப்பிள்ளை, பெரியநாயகம் ஆகிய சாதி இந்துக்கள் தங்கள் பெயரில் கிரயம் செய்து கொண்டனர். வருவாய் நிர்வாகத்திற்கு கையூட்டு கொடுத்து, பட்டாவையும் தங்கள் பெயரில் மாற்றிக் கொண்டனர்.

பஞ்சமி நிலத்திற்குள் - அந்நிலத்தின் உண்மையான சொந்தக்காரர்களான கருப்பனும், செயராமனும், அவர்களது வாரிசுகளும் நுழையக் கூடாது என சாதி இந்துக்களுக்கு ஆதரவாக, கள்ளக்குறிச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், தடையாணை வழங்கியது. 2001இல்தான் கருப்பன் மனைவி சோலையம்மாள், செயராமன் குடும்பத்தின் வாரிசுகள் தாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தனர். இப்புகார் மனு தீர விசாரிக்கப்பட்டு, வருவாய் கோட்டாட்சியர் பட்டா மாற்றத்தை ரத்து செய்தார். மீண்டும் நிலத்தின் உரிமையாளர்களான கருப்பன், செயராமன், பெயரில் பட்டா வழங்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீட்டுக்குச் சென்றபோது, அங்கும் இத்தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால், சாதி இந்துக்கள் இறுதியாக மாநில அரசின் நில நிர்வாக ஆணையரிடம் முறையிட, இப்பிரச்சனையை விசாரித்த ஆணையர், நில ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டாலும், பஞ்சமி நிலத்தை விற்று விட்டதால் கருப்பனும் செயராமனும் விதி மீறல் செய்துள்ளனர்; எனவே அவர்களுக்கு நிலத்தை வழங்க வேண்டியதில்லை என்றும், நிலமற்ற வேறு தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கவும் ஆணை பிறப்பித்தார். இந்த ஆணை தந்த அவகாசத்தில் மீண்டும் இவ்வழக்கை உயர் நீதிமன்றத்திற்கு நிலத்திருடர்கள் கொண்டு சென்றுள்ளனர். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போன கதையாக மாறிய நிலையில், விடுதலைச் சிறுத்தைகளின் தலைமையில் மக்களே நேரடி மண் மீட்புப் போராட்டத்தை நடத்துவது என முடிவெடுத்தனர்.

நிலத்திருடர்களை நிலத்தை விட்டு வெளியேற்றவும், நிலத்தை உண்மை வாரிசுகளின் அனுபவத்திற்குக் கொண்டு வரவும் முடிவு செய்து களம் இறங்கினர். விடுதலைச் சிறுத்தைகளின் துணைப் பொதுச் செயலர் செஞ்சுடர் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் சீராளன், தனபால், நந்தன், வெற்றி நிலவன் ஆகியோர் வழி நடத்த - வழக்கறிஞர் தாமரைச் செல்வனும், வெற்றிச் செல்வனும், கிட்டுவும் பங்கேற்க - இந்த மண் மீட்புப் போராட்டம் தொடங்கியது.

முதற்கட்டமாக பிப்ரவரி 3 அன்று மக்களுடன் நிலத்திற்குள் நுழைந்து, விடுதலைச் சிறுத்தைகளின் கொடியை நிலத்தின் மய்யத்தில் நிறுவினர். மாவட்ட வருவாய் நிர்வாகமும், காவல் நிர்வாகமும் தலையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தி, பத்து நாட்களில் நல்ல முடிவு எடுப்பதாக அளித்த வாக்குறுதியை ஏற்றுத் திரும்பினர். பத்து நாட்களில் எந்த மாற்றமும் இல்லை. நிலத்திருடர்கள் நிலத்தை விட்டு வெளியேறவில்லை. இனியும் பொறுக்க முடியாது என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். பிப்ரவரி 13 அன்று, மீண்டும் 500க்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டிக் கொண்டு நிலத்திற்குள் நுழைந்தனர். காவல் துறை தடுத்துப் பார்த்தது; வழக்குப் போடுவதாக மிரட்டியது. வருவாய் நிர்வாகமும் காவல் துறையும் ஏற்படுத்திய தடைகளை உடைத்துக் கொண்டு, நான்கு திசைகளில் இருந்தும் மக்கள் நிலத்திற்குள் நுழைந்தனர். இத்தனை நாளாய் ஆண்டைகளுக்கு உழைத்துக் கொடுக்கப் பயன்பட்ட அறுவடைக்கான கதிரறுவாளும், விவசாயத்திற்கான மண்வெட்டி, கடப்பாரையும், ஏரும் மாடும், மாட்டு வண்டியும் விடுதலைக்கான ஆயுதங்களாக மாறின.

**வருவாய் நிர்வாகமும் காவல் துறையும் ஏற்படுத்திய தடைகளை உடைத்துக் கொண்டு, நான்கு திசைகளில் இருந்தும் மக்கள் நிலத்திற்குள் நுழைந்தனர். இத்தனை நாளாய் ஆண்டைகளுக்கு உழைத்துக் கொடுக்க பயன்பட்ட கதிரறுவாளும், மண்வெட்டி, கடப்பாரையும், ஏரும் மாடும், மாட்டு வண்டியும் - விடுதலைக்கான ஆயுதங்களாக மாறின.**

உயிர் போனாலும் அது இந்த மண்ணில் போகட்டும், மண் மீட்புக்காகப் போகட்டும் என அணி அணியாய் திரண்ட பெண்களையும், இளைஞர்களையும் சமாளிக்க முடியாத காவல் நிர்வாகம் பின்வாங்கியது; மாவட்ட வருவாய் நிர்வாகம் வெளியேறியது. மக்கள் நடத்திய மண் மீட்புப் போராட்டம், மகத்தான வெற்றியைப் பெற்றது. விடுதலைச்சிறுத்தைகளின் கொடி கல்வராயன் மலையடிவாரத்தில், கோமுகி நதி தீரத்தில் நஞ்சை வயலில் பஞ்சமி நில மீட்புக்கான நம்பிக்கையின் சின்னமாய் கரடிச்சித்தூரில் பறந்து கொண்டிருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

# அழகிய பெரியவன்

தருமபுரி 'புத்தா வழிகாட்டி மய்யம், மூன்று நாள் முகாம் ஒன்றினை ஒருமுறை சித்தூரில் நடத்தியது. அந்த முகாமில்தான் Lesser Humans என்கிற கண்களில் நீரையும், நெஞ்சில் ரத்தத்தை யும் கசியச் செய்கிற படத்தைப் பார்த்ததாக ஞாபகம். அன்றிலிருந்தே அப்படத்தைத் தயாரித்த மார்ட்டின் மெக்வானைப் பற்றி அறிந்து கொள்வதற்கான எண்ணம் என் னுள் பெருகியிருந்தது. கிரிக்கெட்டிலோ, டென்னிசிலோ, திரைப்படத்திலோ திடீரென புகழ் பெற்றுவிடும் மனிதர்களைப் பற்றி உடனடியாக நமக்குக் கிடைத்துவிடும் ஊடகச் செய்திகளைப் போலவோ, நூல் களைப் போலவோ, எல்லா மனிதர்களைப் பற்றியும் நமக்குச் செய்திகள் கிடைத்துவிடு வதில்லை. அதுவும் அம்மனிதர்கள் சமூகப் புரட்சியாளர்களாக இருந்துவிடுவார்களே யானால், நிலைமை இன்னும் மோசம்தான்!

அண்மையில் படிக்கக் கிடைத்த ஒரு நூலின் வழியே மார்ட்டின் மெக்வானைப் பற்றி சற்று விரிவாக அறிந்து கொள்ள முடிந்தது. (Endless Filth, Books for Change, Bangalore - 2002). ஆக்ஸ்போர்டு பல் கலைக் கழகத்தில் ஆய்வாளராக இருக்கும் ஜூடித் ஹைய்யரை அண்மையில் சென்னை யிலே சந்தித்தபோது, இந்த நூலைப் படிக் கத் தந்தார். காந்திய சிந்தனையோடு எழுதப்




பட்டிருக்கும் இந்த நூல், பல அரிய தகவல் களைக் கொண்டிருக்கிறது. இந்த நூலை எழுதியுள்ள மேரி மார்ச்சல் தீகேகரா, குஜ ராத்தை மய்யமாகக் கொண்டு தூய்மைத் தொழிலாளர்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்.

'பங்கி' என்றும், 'பக்கி' என்றும், அருந்த தியர் என்றும் இந்தியா முழுமைக்குமாக நூற்றுக்கும் மேற்பட்டப் பெயர்களோடு அழைக்கப்படும் தூய்மைத் தொழிலாளர்களை அக்கறையோடு அணுகுகிறது இந்த நூல்.

கையால் மனிதக் கழிவுகளை அள்ளுகிற, மனித மாண்பையே இழிவுக்குள்ளாக்கும், இத்தொழிலை ஒழிப்பதற்கு உழைத்தவர் களான பசவலிங்கப்பா, ஈஸ்வர்பாய் படேல், பெசவாடா வில்சன் போன்றோரின் வரிசை யில் மிகவும் முக்கியமானவராக மார்ட்டின் மெக்வான் கருதப்படுகிறார்.

ஒரு தலித் சிறுவனுக்குரிய அத்தனை இழிவுகளையும், கொடுமைகளையும் அனுபவித்து வளர்ந்த மெக்வான், அம் மக்களுக்காகப் பணியாற்ற விரும்பி சட்டம் படித்திருக்கிறார். கொலையுண்ட தலித் மக்களுக்குச் சரியான நீதி கிடைக்க உதவ வேண்டும் என்கிற விருப்பத்தில், தடய அறிவியல் பற்றி படிப்பதுவரை அவரின் ஆர்வம் நீண்டிருக்கிறது.

1986 இல் மார்ட்டினின் கண்முன் நடந்த கொலைகள் அவரின் வேகத்தை மேலும் விசையூட்டியிருக்கின்றன. கோலா னாவில் நான்கு தலித் இளைஞர்கள் தர்பார் இனப் பண்ணையார்களால் சுட்டுக் கொல் லப்பட்டிருக்கிறார்கள். கிராமங்கள் தீக் கிரையாக்கப்பட்டிருக்கின்றன. காயங் களோடு தப்பிய மார்ட்டின், சுடப்பட்ட தன் நண்பர்களின் உடல் மீது விழுந்து கதறி யிருக்கிறார். ''உங்களின் மரணம் ஒரு போதும் வீணாய்ப் போகாது'' - அவர் மனம் சூளுரைத்திருக்கிறது. எட்டு ஆண்டுகள் கழித்து அவரின் முயற்சியால் குஜராத்திலிருக்கும் ரான்பூரில் நவசார் ஜன் அறக்கட்டளை உருவாகிறது. இன்று அது அகமதாபாத்தை மய்யமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

குஜராத்தின் தந்தூகா வட்டத்தில் உள்ள ரான்பூர் நகராட்சியில், தலையிலே மனிதக் கழிவுகளை சுமந்து செல்லும் நிலை ஒழியாமல் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்திருக்கிறார் மார்ட்டின். ஓராண்டுக்கு பதிமூன்று லட்சம் ரூபாய் அளவில் வருவாய் வருகின்ற அந்த நக ராட்சியில், தேய்ந்துபோன துடைப்பத்தை மாற்றித்தர வேண்டி - தூய்மைப் பணி யாளார்கள் ஒரு போராட்டத்தை மேற் கொண்டிருக்கிறார்கள். நிதி ஒதுக்கீடு இல்லை என்று நகராட்சி நிர்வாகம் அதைக்கூட மறுத்துவிட்டிருக்கிறது.

தூய்மைத் தொழிலாளர்கள் பற்றிய அவலங்களை ஏற்கனவே செய்தித்தாள் கள் மூலம் வெளிக்கொண்டு வந்திருந் தும், வருகின்ற அமைச்சர்களும், அதிகாரி களும் 'அந்த மக்களுக்கு கையுறைகளை யும், துடைப்பங்களையும், தள்ளுவண்டி களையும் வழங்கலாம்' என்று சொல் கிறார்களே ஒழிய, இந்த இழிதொழிலை ஒழிக்க வேண்டும் என்று சொல்வதில்லை என்பதில் எரிச்சலோடு இருந்த மார்ட்டி னுக்கு உள்ளூர கோபம் புகையும்.



**" ஆண்கள் எழுதாத அசிங்கம் இல்லை; ஆண்கள் எழுதாத ஆபாசம் இல்லை. ஆனால், ஆண்களை நோக்கி யாரும் - ஏன் 'பச்சை பச்சை'யாக எழுதுகிறீர்கள் என்று கேட்பதில்லை. "**



படிப்பகம்

www.padippakam.com

''துப்புரவுத் தொழிலை ஒழி. தலையில் மலம் சுமக்க முடியாது. உலர் கழிப்பறைகளை ஒழி. அங்கிருப்பது பணக்காரர்களின் மலம். நாற்றம் தாங்க முடியாதபடி ஆகிறபோதுதான் அரசு ஏதாவது செய்ய வருகிறது. 'பங்கி'களின் மீதுள்ள கருணையினால் அல்ல'' – என்று சொல்லிக் கொண்டிருந்த மார்ட்டின், துப்புரவுத் தொழிலாளர்களின் போராட்டத்தை வாய்ப்பாகக் கொண்டு, 1995 இல் ஒரு வழக்கினைத் தொடர்ந்தார். அதுவரை அங்கிருந்த தூய்மைத் தொழிலாளர்களுக்கு, உலர் கழிப்பறைகள் கட்டுவதும், மலத்தைத் தலையில் சுமப்பதும் அரசால் 1993 சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. இப்படி ஒரு கொடுமை இன்னமும் நீடிக்கிறது என்பது பொது சமூகத்துக்கும் தெரியவில்லை.

வழக்குத் தொடர்ந்த பிறகு எல்லாம் வழக்கம் போலவே நடந்தேறின. உலர் கழிப்பறைகள் கட்டுதல் தடைச் சட்டம் - 1993 ஐ ஏற்றுக் கொள்ளாமல் இருந்த குஜராத் அரசு, குற்றச் சாட்டை மறுத்தது. ரான்பூர் நகராட்சி தனது வழக்கறிஞர் மூலம் 'தலையில் மலம் சுமக்கிற நடைமுறை இங்கில்லை. நவசார்ஜன் ஆட்கள் துப்புரவுப் பெண்களுக்கு காசு கொடுத்து, அவர்களைத் தலையில் மலம் சுமப்பது போல் படம் எடுத்து ஏமாற்றுகிறார்கள்' என்று வாதிட்டது.


பொய் வழக்குத் தொடர்ந்து நீதிமன்றத்தை அவமதிக்கிறார் மார்ட்டின் என்று நீதிபதிகள் கருதும் சூழல் வந்தபோது, தமது வழக்கறிஞரான ஷில்பா ஷாவைக் கொண்டு நீதிமன்றத்தில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார் மார்ட்டின். ''இந்த நீதிமன்றத்தில் இருக்கிற யாராவது ஒருவர் ஒரு கூடை மனித மலத்தை சுமந்து கொண்டு புகைப்படத்துக்கு நின்றால், அவருக்கு நவசார்ஜன் அறக்கட்டளை ஒரு லட்சம் ரூபாயை வெகுமதியாக வழங்க முன்வருகிறது.''

நீதிமன்றம் அப்படி ஒரு அறிவிப்பை எதிர்பார்த்திருக்காது. அங்கு யாரும் வாய் திறக்கவில்லை.

அதன் பிறகு மார்ட்டினின் குழு வேகமாகச் செயல்பட்டு, துப்புரவுப் பணியாளர்களின் சம்பளப் பதிவேடு, கழிப்பறைகளை சுத்தப்படுத்தியதற்காக வழங்கப்பட்ட கூலிச்சான்றுகள், ரான்பூர் நகராட்சியில் இப்பணியாளர்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசிய கூட்டக்குறிப்புகள் என்று முடிந்ததையெல்லாம் ஆதாரமாகச் சேர்த்து நீதிமன்றத்தில் அளித்தது. இன்னும் ஒருபடி மேலேபோய், துப்புரவுப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் உறுப்பினராய் இருந்த ஈஸ்வர்பாய் படேலை தனது சாட்சியாகக் கொண்டு வந்து நிறுத்தியது. இறுதியில் நீதிமன்றம், ரான்பூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களின் நிலையை ஆராய ஒரு குழுவினை அமைத்தது. அரசு கையால் மலம் அள்ளும் தொழிலை குஜராத்தில் தடை செய்வதாக அறிவித்து, அவர்களின் மறுவாழ்வுக்கென நிதியை ஒதுக்கியது.

இந்த நீண்ட போராட்டத்தில் மார்ட்டின் மெக்வான் எதிர்கொண்ட தடைகளைக் காட்டிலும், இந்த அவலத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல கையாண்ட முறைகள் கவனத்துக்குரியவையாகும்.

துப்புரவுப் பணியாளர்களைப் பற்றிய உண்மைச் செய்திகளை பத்திரிகைகளில் கொண்டுவந்தது; Lesser Humans போன்ற படங்களைத் தயாரித்தது. இத்தொழிலில் உழன்று கொண்டிருக்கிறவர்களைத் திரட்டி - பொது விசாரணையை நடத்தியது; இம்மக்களைப் பற்றிய மனதைப் பிழியும் கதைகளை - துண்டறிக்கைகளாகவும், கையேடுகளாகவும் தயாரித்துப் பரப்பியது; இந்த இழிதொழிலை ஒழிப்பதற்கு குஜராத்தில் உள்ள அத்தனை அரசு சாரா நிறுவனங்களையும் ஒன்றாக தமது வழக்குக்கு ஆதரவாகத் திரட்டியது என்று பலவற்றைப் பட்டியலிடலாம். இந்த நடைமுறைகள் இன்றும் இந்த இழிதொழில் நீடித்திருக்கும் பகுதிகளில் செயல்படுத்த உகந்தவை. தொடர்ந்து துப்புரவுப் பணியாளர்களுக்கு மாற்றுத் தொழிலை பயிற்றுவிப்பதிலும், ஆளுமையை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி வரும் மார்ட்டின் மெக்வான், தூய்மைத் தொழிலாளர்களின் குழந்தைகளைக் கற்பிப்பதில் இன்று அதிக அக்கறை செலுத்துகிறார்.



மார்ட்டின் மெக்வான்

**'தலித் மாணவர்கள் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் ஏன் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்?' நிறைவேறாத ஆசைகளுடன் உலவிக் கொண்டிருக்கும் ஆவிகளைப் போலத்தான் இப்படியான கேள்விகள் உலவிக் கொண்டிருக்கின்றன!**

அக்குழந்தைகளுக்கு அம்பேத்கர், ஜோதிபா புலே, சாவித்திரி புலே, பெரியார், நாராயண குரு ஆகியோர்களைப் பற்றிய நூல்களைப் படிக்க வழங்குவதாகச் சொல்கிறார். இளம் வயதிலேயே சுயமரியாதையை வளர்ப்பது, அவர்களின் எதிர்காலத்தை மாற்றும் என்பது அவர் நம்பிக்கை. அது உண்மைதான்.

இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ள 'பங்கி' இன மக்களின் வாழ்க்கை அதிர்ச்சி தரக்கூடியது. அம்மக்கள் மிகக் குறைந்த ஊதியத்துக்கு கழிப்பறைகளை சுத்தப்படுத்துவதோடன்றி, தமது உணவுக்கென இரவிலோ காலையிலோ சாதி இந்துக்களின் வீடுகளுக்கு இரக்கச் செல்வார்கள். பெரும்பாலும் பெண்களும், சிறுவர்களும் சேர்ந்து போவது வழக்கம். இப்படிப் போகும் போது ஒரு 'பங்கி' இனத் தாயின் மிக முக்கிய கடமை, தன் பிள்ளைக்கு ஆதிக்க சாதி ஆட்களிடம் எவ்வளவு தொலைவில் நின்று பேச வேண்டும், எப்படி -



படிப்பகம்


www.padippakam.com

இரக்க வேண்டும், எப்படி - அவர்களைத் தீண்டாமல் இருக்க வேண்டும் என்று கற்பிப்பதே, அவர்கள் இரக்கப் போகும் வீடுகளில் நாய்களுக்கும், அவர்களுக்குமாக அருகருகே 'ராமபாத்திரா' என்ற தட்டுகளை வைத்திருப்பார்கள். நொந்து நாறும் உணவை வழங்கினாலும் அம்மக்கள் முகம் சுளிக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும். அம்மாதிரியான உணவினை வழங்குகிறபோது முகம் சுளிக்கவும், மறுக்கவும் செய்கிற ஒரு பிச்சைக்காரனுக்கு இருக்கும் உரிமைகூட அம்மக்களுக்குக் கிடையாது.

கோதுமையை மிதிக்கடிக்கிறபோது, கதிர்களைத் தின்று மாடுகள் கழியும் சாணத்தை எடுத்துவந்து, அதை நீரில் கரைத்து, செரிக்காத கோதுமை மணிகளைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துகிற கொடூரமான நிலையும்கூட, அம்மக்களிடையே அங்கு நீடிக்கிறது.

ஆதிச் சமூகத்திலிருந்து நவீனச் சமூகம் வரையிலாக, மனிதர்கள் எப்படி மனிதக் கழிவுகளை அகற்றும் வழிமுறைகளை மேற்கொண்டனர் என்பதில் சிலவற்றையும் இந்த நூல் பட்டியலிடுகிறது.

பழைய இந்து புராணங்களான 'நரதிய சம்ஹித்தா'விலும், 'வாஜசனேயி சம்ஹித்தா'விலும் அடிமைகளின் பதினைந்து பணிகளில் ஒன்றாகவும், சண்டாளர்களின் பணிகளில் ஒன்றாகவும் மனிதக் கழிவை அகற்றும் கடமை குறிப்பிடப்பட்டுள்ளது. போரில் சிறைபிடிக்கப்பட்ட அடிமைகள் மலம் அள்ளும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பவுத்தம் மேலோங்கி இருந்த மவுரியர்களின் காலத்தில், துப்புரவுப் பணியாளர்களைக் கண்காணிப்பது நகரத் தலைவர்களின் பணிகளில் ஒன்றாக இருந்திருக்கிறது. வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்டபோது, சமஸ்கிருதப் பண்டிதர்களின் ஆலோசனைக்கு ஏற்ப கழிவறைகளிலே காகிதத்திற்குப் பதிலாக துணியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் துணிகளைத் துவைப்பதற்கு தலித் இன மக்களான பங்கிகளே கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். படையெடுப்பின்போது வெள்ளை அதிகாரிகளின் மலம் கழிக்கும் பெட்டிகளை (கம்மோடுகள்) சுமந்து செல்ல பங்கி இன மக்களையே பயன்படுத்தியிருக்கிறார்கள்.







•

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு கல்லூரிக்குப் பேசப் போயிருந்தேன். பேச்சு முடிந்தவுடன் மாணவர்களிடம் இருந்து நிறைய கேள்விகள் வந்தன.

அதிகம் கேள்விகள் வந்தது மகிழ்ச்சியைத் தந்தது. கேள்விகள் எப்போதுமே வேர்க்கால்களின் கூரிய முனைகளைக் கொண்டிருக்கின்றன. குறுத்தெலும்பின் மென்மையைக் கொண்டிருந்தாலும், அவை பாறைகளையும் துளைக்கக்கூடியவை. இந்த வேர்க்கால்கள் படரும் இடத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு மேலெழவோ, விழாமல் இருக்கவோ முயல்கின்றன. சில நேரங்களில், அவை நீர் ஆதாரத்தை நோக்கிப் பயணம் செய்கின்றன. வெகுசில நேரங்களில் மட்டும், முன்முடிவுகளைக் கொண்ட விடைகளின் முக மூடியைப் பூண்டு கொண்டு வெளிப்படுகின்றன.

மாணவர்களின் கேள்விகளை எதிர்கொண்டபோது, அவர்களிடம் பேசத்தான் ஆட்களில்லை என்று தோன்றியது. மாணவர்களை ஒருங்கிணைக்கும் வலுவான அமைப்புகள் எதுவும் இல்லை. இருக்கின்ற சில அமைப்புகளில் மாணவர்கள் இணைவதைத் தடுக்க நெருக்கடிகளும் தடைகளும் ஏற்படுத்தப்படுகின்றன. வகுப்பறைகளோ, அவற்றின் சுவர்களைப் போலவே வலுவான எல்லைகளைக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களை விதிகளும், கட்டுப்பாடுகளும் நெருக்குகின்றன. மாணவர்களை ஒருங்கிணைத்து, அவர்களுடன் பேசி, விவாதிக்க பரந்த அளவிலான கல்விக் கழக அமைப்புகள் தேவைப்படுகின்றன.

1945 இல் மும்பையில், 'மக்கள் கல்விக் கழகத்தை' அம்பேத்கர் தொடங்கிய போது, அவரின் திட்டம் கற்பிப்பதற்கானதொரு அமைப்பை உருவாக்குவதாகத்தான் இருந்தது. அதன் பலனாகவே சித்தார்த்தா கல்லூரி உருவானது. 1950 இல் அக்கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளிவந்த முதல் அணியினர்தான் - மகாராட்டிரத்தின் இலக்கியத்திலும், சமூகத்திலும், அரசியலிலும் மாற்றங்களைச் செய்தனர்.

மாணவர்களிடமிருந்து வந்த கேள்விகளில் ஒன்று: 'ஏன் தலித் மாணவர்கள் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்?' நிறைவேறாத ஆசைகளுடன் உலவிக் கொண்டிருக்கும் ஆவிகளைப் போலத்தான் இப்படியான கேள்விகள் உலவிக் கொண்டிருக்கின்றன!

இடஒதுக்கீடு பற்றியும் அதன் நியாயங்கள் பற்றியும் பலகாலமாக இங்கே பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீண்ட நெடுங்காலமாக கல்வி கற்கும் உரிமைகளும், அரசு மற்றும் அதிகாரத் துறைகளில் பங்கேற்கும் உரிமைகளும் மறுக்கப்பட்ட ஒரு சமூகம், மறுக்கப்பட்ட தன் உரிமைகளைப் பெற்றிடும் வகையில்தான் மதிப்பெண் வரம்பைத் தளர்த்துதல், வயது வரம்பைத் தளர்த்துதல் போன்றவை வைக்கப்படுகின்றன. ஆனால், இந்த வகையான நடைமுறைகள் யாருடைய உரிமைகளையோ, பங்கையோ பறித்தும், மறுத்தும் செய்யப்படுவதல்ல.

சொல்லப்போனால், மக்கள் தொகை அடிப்படையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமானால், தலித் மக்களுக்கு இருபத்தைந்து விழுக்காட்டு ஒதுக்கீட்டை அளிக்க வேண்டும். ஆனால், அத்தனை விழுக்காடு அளிக்கப்படுவதில்லையே!

கல்வி கற்ற தலித் மற்றும் தலித் அல்லாதவர்களின் எண்ணிக்கை இடைவெளி, எப்போதும் அதிகரித்தேதான் இருக்கிறது. தலித் மக்களில் படிக்காதவர்களின் சதவிகிதம் 63. இதுவே தலித் அல்லாதவர்களிடம் 42 சதவிகிதம். அதிலும் குறிப்பாக 19 சதவிகிதம் பெண்களே படித்திருக்கிறார்கள். ஆனால், இது பிற சமூகங்களில் 30.62 சதவிகிதமாக இருக்கிறது. பள்ளிகளை விட்டு இடையில் நின்றுவிடும் தலித் மாணவர்களின் எண்ணிக்கை கவலைக்குரிய ஒன்று. தொடக்கப்பள்ளி அளவில் 49.35 சதவிகிதமும், நடுநிலைப் பள்ளி அளவில் 67.77 சதவிகிதமும், உயர்நிலைப்பள்ளி அளவில் 77.65 சதவிகிதமுமாக இடைநிற்றல் எண்ணிக்கை இருக்கிறது.




படிப்பகம்

www.padippakam.com

(தலித், பழங்குடியினர் குழந்தைகள் கல்விநிலை - சாரதா பாலகோபாலன் மற்றும் ரம்யா சுப்ரமணியன் ஆய்வு, 2003. HRFDL கையேடு)

'பெண் கவிஞர்கள் தமது அங்கங்களைச் சொல்லி பச்சை பச்சையாக எழுதுகிறார்கள். தங்கள் பிள்ளைகளிடம் தாங்கள் எழுதியதையோ, மஞ்சள் பத்திரிகையையோ கொடுத்துப் படிக்க வைப்பார்களா இவர்கள்? - இப்படி இன்னொரு கேள்வி.

பெண்களின் கவிதைகளை 'பச்சை பச்சையாக' என்று புரிந்து கொள்வது, கவிதையைப் புரிந்து கொள்வதின் இயலாமையைக் காட்டுவதாகும். மாணவர்கள் மட்டுமல்ல, பொது சமூகமும், எழுத்தாளர்களும்கூட, பெருவாரியாக இப்படி நினைக்கிறார்கள். சாதிய அடையாளத்தை ஒழிப்பதற்காக தமது சாதியை விடுதலைக் கருத்தியல் நோக்கில் தலித் மக்கள் பயன்படுத்துவது போலத்தான் - பெண்கள் தம் உடலை கவிதையில் பயன்படுத்துவதும் நேர்கிறது. சனாதனப் பார்வையில் தீட்டானதாகவும், அருவருப்பானதாகவும் (நுகர்வுப் பார்வையில் கவர்ச்சியானவைகளாக அவைகளே முன்வைக்கப்படுகின்றன) கருதப்படும் பெண் உடல்தான் - இங்கே நிலவும் ஆண் மய்ய சிந்தனைக்கு அடிப்படையாக இருக்கிறது. இதை உடைக்க பெண் தனது உடலையே கருவியாகப் பயன்படுத்துவதில் எப்படித் தவறிருக்க முடியும்? இந்த அம்சம் கவிதைகளிலும் வருகிறது. தலித் படைப்பாளிகள் தமது படைப்புகளில் வெளிப்படையான தன்மையுடன் வசவுச் சொற்களையும், எழுத்தில் விலக்கி வைக்கப்பட்ட சொற்களையும் கையாளுவது போலத்தான் - பெண் கவிஞர்களின் சில கவிதைகளில் வரும் சொற்களை நாம் அணுக வேண்டும்.




**" துப்புரவுத் தொழிலை ஒழி. தலையில் மலம் சுமக்க முடியாது. உலர் கழிப்பறைகளை ஒழி. அங்கிருப்பது பணக்காரர்களின் மலம். நாற்றம் தாங்க முடியாதபடி ஆகிறபோதுதான் அரசு ஏதாவது செய்ய வருகிறது. "**

ஆனால், ஒரு ஆண்மனோபாவ வாசிப்புடன் அக்கவிதைகளை அணுகுகிற எல்லாருமே, மிக மலிவானதொரு குற்றச்சாட்டாக அசிங்கம், ஆபாசம் என்று குரல் எழுப்புகின்றனர். ஆண்கள் எழுதாத அசிங்கம் இல்லை; ஆண்கள் எழுதாத ஆபாசம் இல்லை. ஆனால், ஆண்களை நோக்கி யாரும் ஏன் 'பச்சை பச்சை'யாக எழுதுகிறீர்கள் என்று கேட்பதில்லை. திரைப்படங்கள், ஊடகங்கள், அரசியல் மேடைகள், மக்கள் புழங்கும் வெளிகள் இப்படி எல்லாமே ஆபாசமாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவைகளிலேயே மூழ்கி உழன்று கொண்டிருக்கும் ஒரு சமூகத்தினுள்ளிருந்து ஒரு மெல்லிய சத்தமாக ஒலிக்கும் பெண் கவிஞர்களின் குரலை சகிக்கின்ற அளவு இங்கே யாருக்கும் மனம் இல்லை.

நடந்து முடிந்த 'குட்டி ரேவதி' பெயர்பயன்பாட்டு சர்ச்சையில் ஆண் சமூகத்தின் மனநிலையை மிகத் தெளிவாகப் பார்க்க முடியும். 'உயிர்மை' (பிப்-2006) இதழைப் படித்தால் இது மிகத் தெளிவாகப் புரிந்துவிடும்.

'உயிர்மை' (பிப்ரவரி 2006) இதழில் மனுஷ்யப் புத்திரன் எழுதியுள்ள தலையங்கம், பெண் கவிஞர்கள் காட்டிய எதிர்ப்பைப் போல நூறு மடங்கானது. ஆண் வக்கிரம் பிடித்தது. அதில் அவர் பயன்படுத்தும் சொற்கள் - கையாளப்பட்ட முறையும் தொனியும் - மிகுந்த வன்மம் கொண்டவையாகக் கருதக்கூடியவை.

'ஒருவர் தன்னுடைய துப்பட்டாவைக் கழற்றி வீசி ஆபாச சைகை காட்டுவது...'

'இலக்கிய வெளியில் படைப்பாளியின் முகமூடி அணிந்த லும்பன்கள்'

'பெண் 'போராளி'களுக்குத்' துணையாக வந்திருந்த சில ஆண் 'போராளி'கள்...'

'சுகிர்தராணி என்பவர்...'

'சுகிர்தராணியின் கவிதைகள் பெண் மொழி என்ற போர்வையில் எழுதப்படும் கலை உணர்வற்ற, பிளாட்பார பின் அடித்த புத்தகங்களின் மறுவடிவம்...'

ஒரு பெண் கவிஞரின் எதிர்ப்பு செயலை 'தினத்தந்தி' மொழியைவிட கொச்சையாக ஆபாச சைகை என்று எழுதுவதும், பெண் கவிஞர்களுக்கு ஆதரவாக செயல்பட்டவர்களை லும்பன்கள், கோமாளிகள், நிலைப்பாடுகள் ஏதுமற்றவர்கள் என்று இழிவுபடுத்துவதும் மூர்க்கம் கொண்டு திருப்பித் தாக்கும் வெறி.

'அவ மூஞ்சியும் அவ ஆளும், கையில் துப்பட்டாவ எடுத்து சுத்திக்கிட்டு இருக்கா?'

என்ற வசனத்துக்கு எதிர்ப்புக் காட்ட முனைந்தவர்கள் வேறெப்படி - எதிர்ப்பு காட்ட முடியும்? போராட்ட வழிமுறைகளை எப்போதுமே நடந்து முடிந்த எதிர்ச் செயல்பாடுகள்தான் தீர்மானிக்கின்றன. இலக்கியவாதியான ராமகிருஷ்ணன், குட்டி ரேவதி என்ற பெயரை உள்நோக்கமின்றியோ, தவறுதலாகவே ஒரு பாத்திரத்தின் மதிப்பைக் குறைக்கும்படியான இடத்தில் எப்படிப் பயன்படுத்த முடியும்? அப்படியென்றால் 'அரசியலில் மிகப் பிரபலமான பெயர்களை வில்லன் பெயராகவோ, இழிவுபடுத்தும் விதமாகவோ இவர் எழுதுவாரா? பெண்கள் எழுப்பிய கேள்விகளுக்கு எஸ். ராமகிருஷ்ணனும், லிங்குசாமியும் உரிய பதிலைச் சொல்லவில்லை. இந்தப் பெண்களுக்குப் போய் என்ன சொல்வது என்ற நினைப்பின்றி, இதற்கு வேறு பொருளில்லை. இவற்றோடு மனுஷ்ய புத்திரனும் இணைந்து கொண்டு - தனது பதிப்பகத்தின் நூல் வெளியீட்டு விழாவில் நடந்த எதிர்வினையை எவ்வளவு மோசமானதாகக் கருதுகிறாரோ அதே - மோசமான தொனியில் 'உயிர்மை'யில் எழுதியிருக்கிறார். பொது மனிதர்களிடம் மேலெழுந்தவாரியாக செயல்படும் ஆண்மைய்ய சிந்தனை வேறு வேறு வடிவங்களில், தம்மை உயர்ந்த படைப்பாளிகள் என்று கருதிக் கொள்கிறவர்களிடமும் செயல்படுகிறது.

நேற்றுவரை தங்களைத் தாங்களே 'நாயே' என்று திட்டிக் கொண்டும், எழுதிக் கொண்டும் திரிந்த தமிழின் 'உயர்ந்த' படைப்பாளிகள் எல்லாரும் ஓரணியில் நின்று அறம், நுண்ணுணர்வு எனப் பேசுகிறார்கள். அருவருப்பாய் இருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



கிருத்துதாசு காந்தி

# தலித்துகளுக்கு எட்டாத எட்டுத் துறைகள்

மக்கள் தொகையில் கால் பங்காக இருப்பவர்களின் மேன்மைக்கு மேன்மையாகத் தேவைப்படுவது எது? **கல்வி**தான் என்று பட்டியல் இனத்தவர் மீது பரிவு இருப்பது போலப் பாசாங்கு செய்பவரும்கூடச் சொல்வர். பட்டியல் இனத்தவரில் பெரும்பான்மையோர் என்ன தொழிலில் இருக்கின்றனர்? 80 சதவிகித **வேளாண்மைத்** தொழிலில் இருக்கின்றனர் என்று எல்லா புள்ளி விவரங்களும் சொல்லும். பட்டியல் இனத்தவர் பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூக வளப்பத்திற்கும் தடையாக இருப்பது எது? **நிலம் இன்மை** மற்றும் பட்டியல் இனத்தவர் மீதான வன்கொடுமைகளையும், தீண்டாமையையும் களைய வேண்டிய பொறுப்பு எந்தத் துறைகளிடம் இருக்கிறது? **காவல்** துறை மற்றும் **நீதித்** துறையும். பட்டியல் இனத்தவர்க்கான வளர்ச்சித் திட்டங்களை வழங்கும் துறைகளில் பெரும் பங்கு வகிக்கும் துறை எது? **ஊரக வளர்ச்சி**. பட்டியல் இனத்தவரின் உடல் நலம் காக்க வேண்டிய துறை எது? மக்கள் நலம் எனப்படும் **மருத்துவத் துறை**.

தமிழ் நாட்டைப் பொருத்த அளவில், பட்டியல் இனத்தவருக்கு இன்றியமையாத இணக்கமாக இருக்க வேண்டிய இந்த எட்டுத் துறைகளைப் பற்றி உலகத்திற்குத் தெரிய வேண்டிய பெரிய உண்மை ஒன்றுண்டு. அது என்னவெனில், 12 லட்சமாக உள்ள அரசுப் பணியாளர்கள் சற்றொப்ப 150 துறை அலகுகளில் (Departmental Units) உள்ளனர். ஆனால், இவருள் 90 சதவிகித ஊழியர்கள் வெறும் 18 அலகுகளில் பணியாற்றுகின்றனர். இந்த 18 அலகுகளும் எட்டே துறைகளில் அடங்குகின்றன. இந்த எட்டுத்துறைகள் எவை தெரியுமா? இவைதான் பட்டியல் இனத்தவர் முன்னேற்றத்தையும் பாதுகாப்பையும், உடல் நலனையும் காக்க வேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட எட்டுத் துறைகள்.

இந்த எட்டுத்துறைகளும் பட்டியல் இனத்தவர்க்குத் தமது பணியிடங்களில் என்ன பங்கு தந்துள்ளன?

எல்லா துறைகளும் பணியாளர் பட்டியலை (Establishment List) மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையாவது வெளியிட வேண்டும் என்பது நடைமுறை. பல துறைகளில் இது செய்யப்படும்போது, இந்த எட்டுத் துறைகளில் ஒரு சில பதவிகளுக்குத் தவிர இந்தப் பணியாளர் பட்டியல் முறையாக வெளியிடப்படுவதில்லை. எங்கெங்கெல்லாம் பணியாளர் பட்டியல் வெளியிடப்படுவதில்லையோ, அங்கெல்லாம் பட்டியல் இனத்தவர் கண்டிப்பாக இருட்டடிப்புச் செய்யப்படுவர். அதன்படியே இத்துறைகளில் நடந்து வருகிறது.

> **தொண்ணூறு சதவிகிதப் பணியாளர்களைக் கொண்டிருக்கும் எட்டுத் துறைகளில், பட்டியல் இனத்தவர் பங்கேற்பு முழுமை பெறவில்லை; இந்த எட்டுத் துறைகளிலும் பட்டியல் இனப் பணியாளர் அமைப்பே இதுவரை அமைக்கப்படவில்லை. பட்டியல் இனத்தவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தவறியுள்ளனர்.**

இந்த எட்டுத் துறைகளிலும் (காவல் துறை தவிர) பட்டியல் இனப் பணியாளர் பங்கு, 10 சதவிகிதத்திற்குக் கீழ்தான் இருக்கிறது. குத்து மதிப்பாகச் சொல்லுவதானால், 2 லட்சம் பட்டியல் இனத்தவர் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு லட்சத்திற்கும் கீழாகத்தான் பட்டியல் இனத்தவர் இருக்கின்றனர். ஒரு லட்சம் பணியிடங்களுக்கு மேல் இவர்களுக்கு உரிய இடங்கள் மறுக்கப்பட்டு வருகின்றன என்றே கொள்ள வேண்டும்.

கல்வித் துறையில் இன்னும் சரியான புள்ளி விவரங்கள் வெளியிடப்படவில்லை. பல்கலைக் கழகங்களிலும், அரசுக் கல்லூரிகளிலும் விரிவுரையாளர் பணியிடங்கள் நூற்றுக்கணக்கில் இன்னும் பட்டியல் இனத்தவருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளன. 500 விரிவுரையாளர் பணியிடங்களைப் பட்டியல் இனத்தவருக்கு வழங்க ஆணையிடப்பட்டும் - 5 ஆண்டுகளுக்கு மேலாக இன்னும் 400 பணியிடங்களும் வழங்கப்படாமல் மறுக்கப்பட்டு வருகிறது. அரசு உதவி பெறும் பள்ளி/கல்லூரிகளில் 5 சதவிகிதத்திற்குக் கீழாகத்தான் பட்டியல் இனத்தவர் உள்ளனர்.

நில உரிமை தொடர்பான வருவாய்த் துறையில் மாவட்ட வருவாய் அதிகாரி, துணை ஆட்சியர் பதவிகளைத் தவிர்த்த வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி ஆகிய பணியிடங்களில் பட்டியல் இனத்தவர் 10 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். வட்டாட்சியர் போன்ற பணியிடங்களில், 5 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். மதுரை மாவட்டத்தில் 700 பேருக்கும் மேலுள்ள வருவாய்த் துறையில், பட்டியல் இனத்தவர் மொத்தம் 39 பேரே உள்ளனர்.

ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியப் பதவியான வட்டார வளர்ச்சி அதிகாரி, உதவி வட்டார வளர்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

| வ எண் | துறையின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | | | மொத்த சதவிகிதம் | பெருமொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | தற்காலிகம் | மொத்தம் | | |
| 1 | **ஊரக வளர்ச்சித் துறை** | | | 3,97769 | | 32.116 |
| | ஊரக வளர்ச்சி | 7733 | 7986 | 15719 | 1.269 | |
| | உள்ளாட்சி மன்றங்கள் | 97746 | 1840 | 99586 | 8.041 | |
| | மதிய உணவுத் திட்டம் | - | 282464 | 282464 | 22.806 | |
| 2 | **கல்வித் துறை** | | | 3,60268 | | 29.088 |
| | கல்லூரிக் கல்வி | 20706 | 5203 | 25909 | 2.092 | |
| | தொடக்கக் கல்வி | 1,62701 | 23849 | 186550 | 15.062 | |
| | அரசுத் தேர்வுகள் | 331 | 354 | 685 | 0.055 | |
| | மெட்ரிக்குலேசன் | 37 | 38 | 75 | 0.006 | |
| | தேசிய மாணவர் படை | 1105 | 16 | 1121 | 0.091 | |
| | பள்ளி சாரா முதியோர் கல்வி | 1 | 40 | 41 | 0.003 | |
| | பள்ளிக் கல்வி | 1,18010 | 17783 | 135793 | 10.964 | |
| | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி | 132 | 1497 | 1629 | 0.132 | |
| | ஆசிரியர் தேர்வு வாரியம் | 6 | 33 | 39 | 0.003 | |
| | தொழில்நுட்பக் கல்வி | 6337 | 2089 | 8426 | 0.680 | |
| 3 | **காவல் துறை** | | | 1,19364 | | 9.637 |
| | குடிமைப் பாதுகாப்பு | 13 | 3 | 16 | 0.001 | |
| | காவல் ஆணையாளர் | 8375 | 6285 | 14660 | 1.184 | |
| | காவல் துறை இயக்குநர் | 59851 | 30129 | 89980 | 7.265 | |
| | தடய அறிவியல் | 278 | 207 | 485 | 0.039 | |
| | வழங்கு தொடர்வு | 108 | 22 | 130 | 0.010 | |
| | காவலர் பயிற்சிக் கல்லூரி | 238 | 85 | 323 | 0.026 | |
| | வழக்காடல் | 229 | 404 | 633 | 0.051 | |
| | குடியுரிமைப் பாதுகாப்பு | 231 | 64 | 295 | 0.024 | |
| | சிறைச்சாலைகள் | 2973 | 1754 | 4727 | 0.382 | |
| | மதுவிலக்கு, ஆயத்தீர்வை | 182 | 1096 | 1278 | 0.103 | |
| | தீயணைப்புப் பணிகள் | 3661 | 3176 | 6837 | 0.552 | |
| 4 | **வருவாய்த் துறை** | | | 63,483 | | 5.126 |
| | வருவாய் நிருவாகம் | 52954 | 2236 | 55190 | 4.456 | |
| | நில அளவை - நிலவரித் திட்டம் | 4728 | 3565 | 8293 | 0.670 | |
| 5 | **வேளாண் துறை** | | | 21,708 | | 1.753 |
| | வேளாண் பொறியியல் | 2067 | 3612 | 5679 | 0.459 | |
| | வேளாண் வருமான வரி | 24 | 128 | 152 | 0.012 | |
| | வேளாண் விற்பனை - வேளாண் தொழில் | 920 | 1295 | 2215 | 0.179 | |
| | வேளாண்மை | 3190 | 10472 | 13662 | 1.103 | |



படிப்பகம்

www.padippakam.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | மருத்துவம் | | | 1,06966 | | 8.637 |
| | த.நா.சுகா. ஏற்பாட்டுத் திட்டம் | | 13 | 13 | 0.001 | |
| | குடும்ப நலம் | 288 | 4599 | 4887 | 0.395 | |
| | ஓமியோபதி மருத்துவம் | 682 | 2464 | 3146 | 0.254 | |
| | ஊரகச் சுகாதாரப் பணிகள் | 6395 | 9701 | 16096 | 1.300 | |
| | ஊசுப (தொ.மா. ஈட்டுறுதி) | 2828 | 1909 | 4737 | 0.382 | |
| | மருத்துவக் கல்வி | 18098 | 6869 | 24967 | 2.016 | |
| | பொ.சு. நோய் தடுப்பு மருத்துவம் | 12809 | 25387 | 38196 | 3.084 | |
| | பேறுசார் குழந்தை நலத் திட்டம் | | 50 | 50 | 0.004 | |
| | மாநில மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகம் | 202 | 194 | 396 | 0.032 | |
| | மா. சுகாதாரப் போக்குவரத்து | 222 | 444 | 666 | 0.054 | |
| | கால்நடை மருத்துவப் பணிகள் | 5580 | 6175 | 11755 | 0.949 | |
| | கால்நடை மருத்துவப் பணிகள் | 1074 | 983 | 2057 | 0.166 | |
| 7 | பொதுப் பணிகள் | | | 21,548 | | 1.740 |
| | நீராவி கொதிகலன் | 63 | 16 | 79 | 0.006 | |
| | கட்டடங்கள் | 1713 | 3818 | 5531 | 0.447 | |
| | நிலத்தடி நீர் | 90 | 1108 | 1198 | 0.097 | |
| | நீர் ஆய்வுகள் நிறுவனம் | 7 | 89 | 96 | 0.008 | |
| | நீர்வள ஆதார அமைப்பு | 7150 | 7334 | 14484 | 1.169 | |
| | கிருஷ்ணா குடிநீர் திட்டம் | | 160 | 160 | 0.013 | |
| 8 | நீதி நிர்வாகம் | 11791 | 4191 | 15982 | 1.290 | 1.290 |
| | | | | 11,07088 | | 89.387 |

*(தமிழ் நாடு அரசு 2006 - 2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு - செலவுத் திட்ட வெளியீட்டுப் புத்தகத்திலிருந்து)*

அதிகாரி பணியிடங்களில் 3 சதவிகிதத்திற்குக் கீழ்தான் பட்டியல் இனத்தவர் உள்ளனர். 2.82 லட்சம் சத்துணவுப் பணியாளர்களில் பட்டியல் இனத்தவருக்கு உரிய 19 சதவிகிதம் முழுமையாக இன்னும் அளிக்கப்படவில்லை.

மக்கள் நலத்துறையில் உதவி மருத்துவர் பணியிடங்களில் மட்டும் 120 இடங்கள், பட்டியல் இனத்தவருக்கு வராமலுள்ளன.

இப்படியாக இந்த எட்டுத் துறைகள்தாம் 90 சதவிகித பணியாளர்களைக் கொண்டிருக்கிறது என்ற போதிலும், பட்டியல் இனத்தவர் பங்கேற்பு முழுமையாக எய்தப் பெற வில்லை என்ற போதிலும், இந்த எட்டுத் துறைகளிலும் பட்டியல் இனப் பணியாளர் அமைப்பே இதுவரை அமைக்கப்படவில்லை என்பதுதான் - பட்டியல் இனத்தவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தவறியுள்ளனர் என்பதன் சோகமாக இருந்து வந்துள்ளது. இதனால்தான் தமிழ் நாடு அரசு ஊழியர் அமைப்புகளில் பட்டியல் இனத்தவர் விழிப்புணர்வு இல்லாமல் போயிற்று. அரசு நிர்வாகிகளுக்கும் பட்டியல் இனத்தவர் பற்றிய அக்கறையோ, அச்சமோ இல்லாமல் போயிற்று.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, பட்டியல் இன ஊழியர்களுக்குப் பற்றாளர் கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்ற அரசாணையை, இந்த எட்டுத் துறைகளிலும் எந்த வொரு அதிகாரியும் கடைப்பிடிக்க மறுத்து - பட்டியல் இன ஊழியர்களிடமிருந்து விவரங்களை மறைத்து வைத்துள்ளனர். அதிகாரிகளிடம் நிலவரங்களை எடுத்துச் சொல்லும் வாய்ப்பையும் இல்லாமல் செய்து விட்டனர்.

ஆகவே, இந்த எட்டுத் துறைகளிலும் பட்டியல் இன ஊழியர்களும், அதிகாரிகளும் உறுதியான எழுச்சியான அமைப்பு கூட்டி விழிப்பாக இல்லாதவரை, அரசுத் துறைகள் எல்லாவற்றிலும் இவர்கள் உரிமை மறுக்கப்படுவதும், ஏய்க்கப்படுவதும் தொடரும் என்பதைப் பட்டியல் இனத்தவர் ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

*"விழிப்பு இல்லாதவர் விடுதலையைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது."* - அண்ணல் அம்பேத்கர்

---

***இக்கட்டுரையாளர், அம்பேத்கர் அனைத்துலகப் பணியாளர் சங்கக் கூட்டமைப்பின் ('அம்பு') தலைவர்***



படிப்பகம்

www.padippakam.com



## இந்தியப் பொருளாதாரத்தின் உண்மை நிலை : பகுதி - 1

விலை ரூ.30

''அதிகார மாற்றம் (சுதந்திரம்) ஏற்பட்டு 57 ஆண்டுகளுக்குப் பிறகும் பாட்டாளிகளின், விவசாயிகளின், பழங்குடியினரின் நிலையில் பெரிதாக மாற்றம் எதுவும் ஏற்படவில்லை; துயரங்களைத் தவிர. 1991 காங்கிரஸ் ஆட்சிகளில் அனைத்துலக நிதியம், உலக வங்கி வழிகாட்டுதலின்படி, அவர்கள் இந்தியாவில் நிகழ்த்திய பொருளாதாரச் சீர்திருத்தம், அதன்பிறகு பா.ஜ.க. ஆட்சிகளில் நிகழ்ந்த பொருளாதாரச் சீர்திருத்தம் எல்லாம் - மக்களை முன்னைக்காட்டிலும் அதிக வறுமை நிலைக்குத் தள்ளியுள்ளதைப் பற்றி இந்நூல் மிகத் தெளிவாக விளக்குகிறது.''



■ ஆசிரியர் : ரா. நடராசன் ■ வெளியீடு : 'விழுதுகள்' 18, திருநகர் முதல் தெரு, திருவொற்றியூர், சென்னை - 19 ■ பக்கங்கள் : 72

●●

## தீண்டாமைக்குத் தீயிடு

விலை ரூ.100

''இந்து மதத்தவர்கள் கோடிக்கணக்கில் இஸ்லாமிய, கிருத்துவ மற்றும் புத்த மதங்கட்கு மாறுகையில், இந்து மதத்தால் ஈர்க்கப்பட்ட வேறு மதத்தவர்கள், எப்பொழுதாவது இந்து மதத்தில் வந்து சேர்ந்ததுண்டா? அப்படி இந்து மதத்தை நாடிவந்தாலும், மதத்தை மாற்ற விரும்பினாலும், அவர்களை இந்து மதத்திலுள்ள 8000 உப சாதிகளில் எந்தச் சாதியில் சேர்க்க அனுமதிப்பார்கள்? மதம் மாறுபவர்களை, கொடிய சட்டம் கொண்டு தடுக்கலாமே ஒழிய, இந்து மதத்தை ஓர் உன்னத சமரச சன்மார்க்க நெறிபோல் மாற்றியமைத்து, சீர்திருத்தம் செய்து மதம் மாற விரும்புபவர்கள் - இம்மதத்திலிருந்தே உயர்ந்த வாழ்வு பெற வழி செய்வதற்கில்லை.



■ ஆசிரியர் : டாக்டர் ப. சீனிவாசன் ■ வெளியீடு : மங்கை பதிப்பகம், 177, முத்துக்காமாட்சி அம்மன் தோட்டம், சிதம்பரம் - 608 001 ■ பக்கங்கள் : 392

●●

## நல வாழ்வு நமது உரிமை

விலை ரூ.50

''நமது நாட்டில் தான் மருத்துவ நலத்திற்கென 15 சதவிகிதம் மட்டுமே அரசு செலவழிக்கிறது. இதுவும்கூட பெரும்பாலும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கும் தடுப்பு மருந்துகளுக்குமே செலவிடப்படுகிறது. எனினும் சத்துணவு, ஆரோக்கியமான சூழல், நல்ல குடிநீர் ஆகியவற்றின் மூலம் நோய் எதிர்ப்பை உருவாக்குவது என்பதைக் காட்டிலும், வெறும் தடுப்பு மருந்துகள் மூலமாகவே 'போலியோ' முதலான நோய்களைக் கட்டுப்படுத்துவதில் அரசு முனைப்பு காட்டுகிறது.''



■ ஆசிரியர் : சேவியர் செயசிங் ■ வெளியீடு : வான் முகில், டி-7, 27ஆவது குறுக்குத் தெரு, மகாராசா நகர், திருநெல்வேலி - 627 011 ■ பக்கங்கள் : 180

## சார்த்தர் - விடுதலையின் பாதைகள்

விலை ரூ.120



''மனிதனின் இதயத்தில் சுதந்திரம் என்னும் தீப்பந்த ஒளியை ஏற்றிவிட்டால், அவனுக்கு எதிரே கடவுள்கள் சக்தியற்றவர்களாகி விடுவர்' என்பதைத் தனது மகத்தான வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்டியவர் சார்த்தர். இந்த நூல் அந்தப் போராளியின் தத்துவ, அரசியல் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல; இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சிகளினூடான ஓர் அறிவுப் பயணமுமாகும். சோசலிசம் - மே 1968 போராட்டத்தின் தோல்வியாலும், சோவியத்தின் வீழ்ச்சியாலும் அழிந்துவிடவில்லை.''

■ ஆசிரியர் : எஸ்.வி. ராஜதுரை ■ வெளியீடு : அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310 ■ பக்கங்கள் : 224

●●

## குடி அரசு - பெரியாரின் எழுத்தும் பேச்சும்

1926 - II தொகுப்பு : 3

விலை ரூ.150



''கூரத்தாழ்வார் கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அதற்குள் பார்ப்பனரின் காப்பிக் கடை இருக்கிறது. அக்காப்பிக் கடைக்காக ஒரு கக்கூசு இருக்கிறது. அக்கக்கூசு எடுக்க தீண்டப்படாதவர், தினமும் இரண்டு தடவை மல பாண்டங்களுடன் போய் வந்து கொண்டிருக்கிறார். கூரத்தாழ்வார் கோயிலை விட இந்த அய்யங்கார் வீதியும், வியாசராயர் வீதியும், பட்டாச்சாரி வீதியும் - பார்ப்பனருக்கு உயர்ந்ததாய்ப் போய் விட்டது. மல பாண்டத்துடன் கோயிலுக்குள் போய் வருவதை விட, வெறுங்கையுடன் நடப்பது, பார்ப்பனர்களுக்கு அதிக பாவமாய்ப் போய்விட்டது. ஏறக்குறைய வெள்ளைக் காரர்கள் வந்த பிறகே இக்கொடுமைகள் கொஞ்சமாவது மாறுபாடு அடைந்திருக்கின்றன.''

■ வெளியீடு : தந்தை பெரியார் திராவிடர் கழகம், 27, கனகராய மலையப்பன் வீதி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28 ■ பக்கங்கள் : 528

●●



## மனித உரிமை ஆணையங்கள்

விலை ரூ.50

''மாநில மனித உரிமை ஆணையங்களும் குறிப்பாக மாவட்ட மனித உரிமை நீதிமன்றங்களும், தேசிய மனித உரிமை ஆணையத்தைப் போலவே மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருப்பதால், தேசிய மனித உரிமை ஆணையம் பற்றிய இந்நூல், பிறமாநில மனித உரிமை ஆணையங்களைப் பற்றி அறியவும் ஆணையங்கள் மூலமாகத் தலையிடவும் வழிகோலுகிறது. மாநில அளவிலான ஆணையங்களை எளிதாகத் தொடர்பு கொள்ளும் வகையில் - அவைகளின் முகவரியும் தமிழ்ப் பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.''

■ வெளியீடு : மக்கள் கண்காணிப்பகம், 6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை - 625 002 ■ பக்கங்கள் : 60



படிப்பகம்

www.padippakam.com

# இடங்களைக் கைப்பற்றுவோம்!

## அரசியல் கட்சிகளின் நாணயத்தைப் பரிசோதிக்க ஓர் அரிய வாய்ப்பு

■ த. கனகமுத்து

தேர்தல் நெருங்கிவிட்டது. அணி சேர்க்கைகளும் முடிந்துவிட்டன. தேர்தல் அறிக்கைகளை வெளியிடக் கட்சிகள் தயாராகின்றன. ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள ஆளும் கட்சியும், இழந்த ஆட்சியைக் கைப்பற்ற எதிர்க்கட்சியும், ரத்தம் சிந்தவும் தயார்தான். ஆனால், மக்களின் வாக்குகளைக் குறிவைத்து வாக்குறுதிகளை மேடைகளில் அள்ளித் தெளிப்பவர்கள் - தங்களுடைய தேர்தல் அறிக்கைகளில் ஏற்கனவே உறுதியளித்தவற்றை நிறைவேற்றி இருக்கிறார்களா என்றால், இல்லை என்ற பதிலே மேலோங்கி நிற்கிறது. ஆனால், புதிய தேர்தல் வாக்குறுதிகளுக்கு மட்டும் பஞ்சம் இருக்காது.

தலித் இயக்கங்களும் அமைப்புகளும் பல ஆண்டுகளாக தங்களுக்குரிய சட்ட ரீதியான இடஒதுக்கீடு - அரசுப் பணியிடங்களில் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பாத நாட்களே இல்லை. ஆனால், தலித் கட்சிகளுக்கு சில சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைக் கொடுப்பது என்பதைத் தவிர வேறு எதையும் அரசியல் கட்சிகள் செய்வதில்லை. ஜனநாயகத்தின் இன்னொரு முக்கிய தூணாகக் கருதப்படும் அரசு நிர்வாக எந்திரத்தில், போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்போதுதான் அரசியல் அதிகாரம் முழுமை பெறுகிறது. எனவேதான் அரை நூற்றாண்டுக்கும் மேலாக, ஆளும் வகுப்பினர் இத்துறையில் இடஒதுக்கீடு அளிப்பதற்கு - அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இடஒதுக்கீடு கோரிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு - அதுகுறித்த முதன்மையான செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டே வருகின்றன.

இருப்பினும், மக்கள் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுவது இன்றியமையாத கடமையாகின்றது. இந்நாட்டு மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு வகிக்கும் தலித் மக்கள், தங்களுக்கான தனித்த உரிமைகளை - சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் முன்வைக்கப் போதுமான வாய்ப்பு இல்லாத நிலையில், அவர்கள் தங்கள் கோரிக்கைகளை மக்கள் மன்றத்தில் முன்வைக்கின்றனர். தலித்துகள் தனித்த தொரு அரசியல் சக்தியாகப் பரிணாமம் பெறாதவரை - சட்டமன்றம்/ நாடாளுமன்றம் தவிர்த்த அரங்குகளில்தான் உரிமைக் குரல் எழுப்ப முடியும். அரசியல் கட்சிகள் தலித்துகளுக்கு தேர்தலில் இடங்கள் ஒதுக்காததைச் சுட்டிக்காட்டும் பத்திரிகைகள் - அவற்றை முதன்மைச் செய்தியாக்கி கட்சிகளுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் பத்திரிகைகள், அரசு நிர்வாகத்தில் புறக்கணிக்கப்படும் தலித் மக்கள் நிலைகுறித்துப் போதிய கவனம் செலுத்துவதில்லை.

இந்நிலையில், ஒரு முன் முயற்சியாக 'அம்பேத்கர் அனைத்துலகப் பணியாளர் சங்கக் கூட்டமைப்பு' - 'அம்பு', அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஒருங்கிணைத்து - வரலாற்றில் முதல் முறையாக சென்னையில் 25.2.2006 அன்று மாபெரும் மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மு. வீரபாண்டியன், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என். வரதராஜன், ம.தி.மு.க. வைச் சார்ந்த மல்லை சத்யா, பா.ம.க. சார்பில் செங்கை சட்டமன்ற உறுப்பினர் திருக்கச்சூர் கி. ஆறுமுகம், காங்கிரஸ் கட்சியின் சார்பில் கோபண்ணா, தாம்பரம் நாராயணன், ஜெயக்குமார், பா.ஜ.க. சார்பில் ஜி. குமாரவேலு ஆகியோர் பங்கேற்றனர். முக்கிய அரசியல் கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க. வும் இதில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

> “ தலைமைச் செயலகத்திலோ, துறைத் தலைவர் அலுவலகங்களிலோ, ஆதிதிராவிடர் நலச் செயலர்/இயக்குநர் அலுவலகங்களிலோ, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் தவிர்த்த பிற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலோ, அண்ணல் அம்பேத்கர் படத்தை வைக்கக்கூட இசைவளிக்கப்படவில்லை. ”

வரலாற்றுச் சிறப்புமிக்க இம் மாநாட்டை கிறித்துதாசு காந்தி, நெறியாள்கை செய்தார்; அய்.ஏ.எஸ். அதிகாரிகளான ஜி.ஏ. ராஜ்குமார், பி. சிவகாமி, குத்சியா காந்தி, சிவசங்கரன், சிதம்பரம் (அய்.எப்.எஸ்.) சிறப்புரை நிகழ்த்தினர். 'அம்பு' நிர்வாகிகளான ஏ. ஞானசேகரன், ரா. தயாளன், பி. மணிவண்ணன் மற்றும் ஜி. அரவிந்தன் முன்னிலை வகித்தனர்.

இம்மாநாட்டில் பங்கேற்ற அனைத்துக் கட்சியினரும் தலித் மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கையின் நியாயத்தை வெகுவாக ஆதரித்துப் பேசினர். பழைய வரலாறுகளைச் சொல்லி தலித்துகளை சொந்தம் கொண்டாடினர். 'அம்பு' முன்வைத்துள்ள கோரிக்கைகளை தங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக உறுதி அளித்தனர். 'அம்பு' முன்வைத்துள்ள மிக முக்கியமான கோரிக்கைகளை, இக்கூட்டத்தில் பங்கு பெறாத கட்சிகளின் பார்வைக்காகவும், பொதுமக்களின் சீரிய சிந்தனைக்காகவும் - இக்கோரிக்கைகளை முன்வைத்து தலித் இயக்கங்கள் போராடுவதற்காகவும் - அப்படியே வெளியிட்டுள்ளோம்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழக அரசுப் பணியில் நிரப்பப்படாத 17,314 தலித் பணி இடங்களை நிரப்ப வேண்டும் என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது (ஆணை எண்: WP-16087 of 1999 dt. 4.1.2000). ஆனால், ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு முழுவதும் நிரப்புவோம் எனக்கூறி, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது சம்பந்தமாக பணி நிரப்பக் கோரி கேட்டால், பணி நிரப்பும் வேலை தடை செய்யப்பட்டுள்ளது என்ற காரணத்தையே சொல்லி வருகின்றனர். ஆனால் இந்த ஆணை, நிரப்பப்படாத பணிகளுக்குப் பொருந்தாது என்பது, அவர்களுக்கு இன்றளவும் உரைக்கவில்லை.

1. தமிழ் நாட்டில் அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு முழுமையாகச் செய்து தந்த சமூக நீதியைப் போன்று - பட்டியல் இனத்தவருக்கும், பழங்குடியினருக்கும் முழுமையான இடஒதுக்கீடு நீதியைப் பெற்றுத் தர, அரசியல் கட்சிகள் உறுதி அளிக்குமா?

2. அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமையாக வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை - தமிழ் நாட்டில் மட்டும் பட்டியல் இனத்தவர்க்கும், பழங்குடியினருக்கும் வழங்கப்படாத அநீதியை வேரறுத்து, பதவி உயர்வில் ஒதுக்கீடு வழங்குவதற்கு, ஒவ்வொரு கட்சியும் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும்?

3. சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. ஆயினும், இன்னும் தமிழ் நாட்டு அரசுப் பணிகளில் பட்டியல் இனத்தவருக்கும் பழங்குடியினருக்கும் 20 சதவிகித நிறைவு கிட்டவில்லை. பின்னடைவுப் பணியிடங்களுக்குச் சிறப்பு நியமனங்கள் மேற்கொள்ள இதுவரை நான்கு முறை அரசாணைகள் மட்டும் வெளியிடப்பட்டு, 10 - 15 நியமனங்கள்கூட செய்யப்படாமல், பட்டியல் இனத்தவர்/பழங்குடியினர் கடந்த 21 ஆண்டுகளாக ஏமாளியாக்கப்பட்டு வந்துள்ளனர். இனியும் பட்டியல் இனத்தவர்/பழங்குடியினரை ஏமாற்றாமல் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கு, சிறப்பு நியமனங்களை செய்ய கட்சிகள் என்ன உடனடித் திட்டங்களைத் தரும்?

4. பட்டியல் இன அலுவலர் சங்கங்களுக்கு ஏற்பளிப்பை வழங்க மறுத்து, 60 ஆண்டுகளாக நிர்வாகிகள் கடைப்பிடித்து வரும் தீண்டாமையை ஒழித்து, பட்டியல் இன அலுவலர் சங்கங்களுக்கு ஏற்பளிப்பை வழங்க கட்சிகள் உறுதி வழங்குமா?

5. தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தில் கடந்த 10 ஆண்டுகளில் பட்டியல் இன / பழங்குடி இன உறுப்பினர்களே நியமிக்கப்படவில்லை. தமிழ் நாடு வரலாற்றில் இதுவரை பட்டியல் இனத்தவர் நிதிச் செயலராக நியமிக்கப்படவில்லை. கல்வித் துறை இயக்குநராக (பள்ளி, கல்லூரி, தொழில்நுட்ப இயக்குநர்கள் எவரும்) இதுவரை பட்டியல் இனத்தவர் அமர்த்தப்படவில்லை. இதுபோன்ற மறுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் துறைத் தலைமைப் பணியிடங்களில் பட்டியல் இனத்தவரை அமர்த்த, கட்சிகள் எத்தகைய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும்?

6. அண்டை மாநிலமான கர்நாடகாவில் அமைச்சரவையில் 8 பட்டியல் இனத்தவர் அமைச்சராகி உள்ளனர். ஆந்திராவிலும் அப்படியே. உள்துறை, நிதி போன்ற செம்மாந்த அமைச்சர் பதவிகளைப் பட்டியல் இனத்தவர் வகித்து வருகின்றனர். ஆனால், தமிழ் நாட்டு வரலாற்றில் இதுவரை ஒப்புக்கு ஒருவர் இருவர் என்று மட்டுமே பட்டியல் இனத்தவர் அமைச்சராக்கப்படுகின்றனர். தமிழ் நாட்டிலுள்ள, ஆதி திராவிடர், தேவேந்திரர், அருந்ததியர் ஆகிய முப்பெரும் பிரிவினர்க்கிடையே போட்டியையும், பொறாமையையும் உருவாக்கும் வகையில் - ஏதாவது ஒரு பிரிவினருக்கு மட்டும் அமைச்சர் பதவியைத் தருவது ஒரு தந்திரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த முப்பெரும் பிரிவினர்க்கும், இவர்களைச் சாராத பிற பட்டியல் இனப் பிரிவினர்க்கும், பழங்குடியினர்க்கும் ஒவ்வொருவராக 5 பேருக்கும் குறையாமல் பட்டியல் இன/பழங்குடியினரை தமிழக அமைச்சரவையில் அமர்த்தி, பட்டியலினத்தினரிடையே ஒப்புரவை வளர்க்கும் பாங்கை கட்சிகள் தங்களுடைய குறிக்கோளாக அறிவிக்குமா?

7. தமிழ் நாட்டுப் பொறியியற் கல்லூரிகளில் 75,000 இடமுண்டு. ஒவ்வோராண்டும் 70,000 பேருக்கும் மேலான பட்டியல் இனத்தவர் +2 தேறி வருகின்றனர். ஆனால், பொறியியல் கல்லூரியில் 6 சதவிகிதத்திற்குக் குறைவாக, அதாவது 5000 இடங்களுக்குக் குறைவாகவே பட்டியல் இனத்தவருக்கு இடம் கிடைக்கிறது. இதற்கு மூலகாரணமே பட்டியல் இனத்தவருக்கு உரிய உதவித் தொகை கிட்டாமையே. பட்டியல் இனத்தவரின் தொழிற்கல்வி உட்பட, மேல்நிலைக் கல்விக்கு ரூ. 200 கோடிக்கும் குறையாத கல்வி உதவித் திட்டம் கொண்டுவரத் தங்களது கட்சி உறுதியான திட்டம் கொண்டு வருமா?

8. சிறப்பு உட்கூறுத் திட்டத்தையும் (Special Component Plan), பழங்குடியினர் துணைத் திட்டத்தையும் (Tribal Sub Plan), பட்டியல் இன/பழங்குடியினரின் வாழ்க்கை ஆதாரமாக, உயிர் நாடியாகக் கருதுகிறோம். தமிழ் நாட்டிலும் சரி, மய்ய அரசிலும் சரி, சிறப்பு உட்கூறுத் திட்டம் கால் பங்குகூட நிறைவேற்றப்படவில்லை. தமிழ் நாட்டில் சிறப்பு உட்கூறுத் திட்டத்தில் வரவேண்டிய ரூ. 2000 கோடிக்குப் பதிலாக ரூ. 400 கோடிக்குக் கீழாகவும், மய்ய அரசில் வரவேண்டிய ரூ. 40,000 கோடியில் கால் மடங்கிற்குக் கீழாகவும் ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் நலத்துறை உட்பட அனைத்துத் துறை அதிகாரிகளும், திட்டக் குழுவும் சிறப்பு உட்கூறுத் திட்டம் என்பதைப் பற்றி ஏதும் அறியாமலும், அறிந்திருந்தாலும் அறியாதது போலவும் கண்மூடி இருந்து வருகின்றனர். நிதித் துறையும், திட்ட வளர்ச்சித் துறையும் எதிர்மறையாகவே செயல்பட்டு வருகின்றன.

**தற்போது மத்தியிலுள்ள கூட்டணி அரசு, தலித்/பழங்குடியினருக்குச் சிறப்பு நியமனங்கள் வழங்க கொள்கை முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தியும் வருகிறது. ஆனால், கூட்டணியிலுள்ள தமிழ் நாட்டுக் கட்சிகள், தமிழ் நாட்டில் இதை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை வலுவான குரல் கொடுக்கவில்லை.**

பட்டியல் இன/பழங்குடியினரை மதிப்பதற்கு அடையாளமாகச் சிறப்பு உட்கூறுத் திட்டத்தையும்/பழங்குடியினர்



படிப்பகம்

www.padippakam.com

துணைத் திட்டத்தையும் பற்றிய ஆண்டு ஆய்வரங்கத்தையும் அரசியல் கட்சிகள் நடத்துமா? அரசு அளவிலும், திட்டக்குழு அளவிலும் இத்திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் வண்ணம் தொடர்கூட்டங்களை நடத்த, தங்கள் கட்சி அழுத்தம் தருமா? சிறப்பு உட்கூறுத் திட்டத்தில் ஒதுக்கப்படவேண்டிய தொகையை முழுமையாக அளிக்கவும், இந்த சிறப்பு உட்கூறுத் திட்ட ஒதுக்கீடு, பிற துறைகளின் ஒதுக்கீட்டை வெட்டிவிடும் என்ற விதண்டாவாதத்தைக் கைவிடவும் கட்சிகள் பட்டியல் இனத்தவருக்கு வாக்கு அளிக்குமா?

9. பட்டியல் இனத்தாருக்கான பெரும்பாலான திட்டங்கள் சேவகத் தன்மையை பட்டியல் இனத்தார் மீது தொடர்ந்து சுமத்துவதாகவும், அவர்களைக் கையேந்த வைப்பதாகவுமே இருக்கின்றன. அமெரிக்காவில் கருப்பர்களுக்கான திட்டத்தில், அவர்களை நிறுவனங்களின் தலைவராக்குதல், அமைச்சராக்குதல், செல்வக் கோடீஸ்வரராக்குதல், உடைமையாளராக்குதல் போன்ற ஆளுமை செறிந்த அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன. அதுபோல, பட்டியல் இனத்தார் முன்னேற்றத்திற்குத் தற்போதுள்ள திட்டங்களின் அடுத்த முன்னேற்றமாக பெருந்தொழில் முதலீடு, கல்வி நிறுவனத்திற்கான முதலீடு, ஒப்பந்ததாராக்குதல், பேருந்து உரிமம் வழங்கல், வீடு கட்டுமானத் தொழில் முதலீடு போன்ற பெருந்திட்டங்களை வகுக்கத் தங்கள் கட்சி முனைந்து செயல்படுமா?

**தமிழ் நாடு வரலாற்றில் இதுவரை, ஒரு தலித்கூட நிதிச் செயலராக நியமிக்கப்படவில்லை. கல்வித் துறை இயக்குநராக (பள்ளி, கல்லூரி, தொழில்நுட்ப இயக்குநர்கள் எவரும்) இதுவரை தலித்துகள் அமர்த்தப்படவில்லை.**

10. நாடாளுமன்றத்திலுள்ள பட்டியல் இன நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பாகுபாடின்றி பல பொதுச் செயல்பாடுகளுக்காக ஒன்றிணைந்து செயல்படுகின்றனர். டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்கள் குடியரசுத் தலைவராவதற்கு இவர்கள் காட்டிய ஒருங்கிணைப்பைத் தலைமையாகச் சுட்டிக் காட்டலாம். ஆனால், தமிழ் நாட்டுச் சட்டமன்ற பட்டியல் இன உறுப்பினர்கள், ஒரு கருத்தரங்கில்கூட அவ்வாறு ஒன்று கூடுவதைக் கட்சித் தலைமைகள் தடை செய்கின்றன என இக்கட்சி உறுப்பினர்கள் வாய்மொழியாகவே அறிகிறோம். மேலும், சட்டமன்றத்தில் பட்டியல் இனம் பற்றிய கேள்விகளை எழுப்பவோ, உண்மை நிலையை எடுத்துப் பேசவோ இவர்களைக் கட்சிக் கொறடாக்கள் ஊக்குவிப்பதில்லை என்றும் கட்சிப் பொது/செயற்குழுக் கூட்டங்களிலும் இவர்களுக்குப் பேச வாய்ப்புகள் வழங்கப்படுவது இல்லை எனவும் அறிகிறோம்.

கட்சியின் பொதுச் செயலராகவோ, மாவட்டச் செயலராகவோ பட்டியல் இனத்தவரைக் காண்பது, குதிரைக் கொம்பாக இருக்கிறது. இந்நிலைகளை மாற்றி, பட்டியல் இன உறுப்பினர்களை வாய்பேசாத மடந்தையாகவோ, வெறும் வாய்ப் பேச்சாளராகவோ ஆக்காமல் - அவர்களை வாயுள்ளவராக, 'வாய்ஸ்' உள்ளவர்களாகத் தங்கள் கட்சி உருவாக்கி உயர்வு தருமா?

## சில முக்கிய விளக்கக் குறிப்புகள்

**இனம் 1 :** அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோரின் பங்கேற்பு, தற்போதைய ஒதுக்கீட்டு அளவான 50 சதவிகிதத்திற்கு மேல் 90 சதவிகிதம் வரை உள்ளது. அதாவது, பட்டியல் இனம், பழங்குடியினர் பங்கீட்டுக்குப் போக வேண்டிய 19 சதவிகிதத்தைக் கழித்தால், மீந்திருக்க வேண்டிய 81 சதவிகிதப் பணியிடங்களுக்கும் மிகையாகக்கூட பல பணிகளில் பிற்படுத்தப்பட்டோர் நிறைந்துள்ளனர்.

❖ பொதுப்பிரிவிற்கென்று விடப்படும் 31 சதவிகித இடங்களில், 20 சதவிகிதம் முதல் 30 சதவிகிதம் வரை பிற்படுத்தப்பட்டோருக்குப் போகின்றன.

❖ தேர்வாணைய உறுப்பினர், பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள், தேர்தல் ஆணையர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பொறுப்பாளர்கள், பேருந்து உரிமம் பெறுவோர், பற்பல தொழில் வணிக நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள் போன்ற பல்வேறு நிலைகளிலும், துறைகளிலும் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீடு, அளவிற்கு மேல் காணப்படுகின்றனர். ஆனால், ஒதுக்கீட்டு அளவிற்கு உட்பட்டாவது பட்டியல் இனத்தவரையோ, பழங்குடியினரையோ காண முடிவதில்லை.

❖ 50 சதவிகிதத்திற்கு மேல் மொத்த ஒதுக்கீடு கூடாது என உச்ச நீதிமன்றம் உரைத்த பின்னும், பிற்படுத்தப்பட்டோரின் ஒதுக்கீட்டைப் பாதுகாக்க, 60 சதவிகித ஒதுக்கீட்டைச் சட்டமாக்கியது தமிழ் நாட்டு அரசியல். ஆனால், 1990 கணக்கெடுப்பின்படி, பட்டியல் இனத்தாருக்கு 18 சதவிகிதத்திலிருந்து 19 சதவிகிதமாக உயர்த்த வேண்டிய ஒதுக்கீட்டை இதுவரை மறுத்து வருகிறது - தமிழ் நாட்டு அதிகாரி வர்க்கமும், அரசியலும். மத்திய அரசுத் துறைகள் தமிழ் நாட்டில் பட்டியல் இனத்தாருக்கு 19 சதவிகிதம் வழங்கி வருகிறது என்பது அனைவர்க்கும் தெரிந்ததே.

**இனம் 2 :** அனைத்து மத்திய அரசுத் துறைகளிலும், பொது நிறுவனங்களிலும், மேல் மட்டப் பணியிடங்கள் தவிர, பிற எல்லா பணியிடங்களுக்கும் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதவி உயர்வில் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

❖ 1995இல் 16(4அ) அரசியல் சட்டப் பிரிவும், பின்னர் அரசியல் சட்டம் 16 (4ஆ)வும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆயினும் பத்து ஆண்டுகளுக்கு மேல் தமிழ் நாட்டில் இவை கடைப்பிடிக்கப்படுவதில்லை (6 பதவிகள் தவிர).

❖ 1995க்குப் பிறகு பிற்படுத்தப்பட்டோர்க்கு அரசியல் சட்ட வழியாகப் பதவி உயர்வில் ஒதுக்கீடு வழங்க வகையில்லை என்றபோதும், 2004 வரை தமிழ் நாட்டில் பிற்படுத்தப்பட்டோர்க்கு இது சலுகையாக வழங்கப்பட்டது. ஆனால், பட்டியல் இனத்தாருக்கு அரசியல் சட்ட அடிப்படை உரிமையாக அமைந்துள்ள இந்தப் பதவி உயர்வில், இட ஒதுக்கீட்டை அனைத்துத் துறைகளிலும் வழங்க தலைமைச் செயலர் முதற்கொண்டு பல அதிகாரிகள் மறுத்து எதிர்வாதம் செய்து வருகின்றனர்.

❖ 1996இல் ஆட்சியை இழக்கும் முன்னும், 2001இல் மீண்டும் ஆட்சிக்கு வரும் முன்னும் - பதவி உயர்வில்



படிப்பகம்

www.padippakam.com

பட்டியல் இனத்தவர்க்குப் பதவி உயர்வு அளிக்க அ.தி.மு.க. கட்சி தேர்தல் வாக்குறுதி அளித்தது. 1998இல் ஆட்சியில் இருந்த தி.மு.க. கட்சி முதல்வர், இதே உரிமை வழங்கப் படும் என்று வெளியிட்ட அறிவிப்பு செய்தித் தாள்களில் வந்தது. ஆனால், இதுவரை பட்டியல் இனத்தவர் இந்தப் பலனைப் பெற்றாரில்லை.

❖ பிற்படுத்தப்பட்டோர்க்குப் பதவி உயர்வில் ஒதுக் கீடு அளிக்க முடியாது என 2004இல் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டதால், பட்டியல் இன/பழங்குடியினருக்கு மட்டும் இந்த உரிமையை வழங்குவதை - இரண்டு ஆண்டு களாக அரசு நிறுத்தி வைத்துள்ளது (கடித எண். 3624-BCC 2005 - 2 நாள் : 12.4.2005).

**இனம் 3 :** இதுவரை பின்னடைவுப் பணியிடங்களை நிறைவேற்றுவது குறித்து வெளியிடப்பட்டு, அதிகாரிகளால் செயல்படுத்தப்படாத ஆணைகள் : ● 1989இல் அரசு ஆணை 1352 (ஆதிந) நாள் : 27.7.1989 ● 1993இல் அரசு ஆணை 167 (ஆதிந) நாள் : 20.7.1993 ● அரசு ஆணை எண். 2 (ஆதிந) நாள் : 2.1.1997 ● அரசு ஆணை எண். 44 (ஆதிந) நாள் : 20.5.1998 ● அரசு ஆணை எண். 91 ● அரசு ஆணை எண். 1352 (ஆதிந) நாள் : 27.7.1989 ● அரசு ஆணை எண். 162 (ஆதிந) நாள் : 21.9.1999 ● அரசு கடித எண். 56752/R/99-3 நாள் : 28.10.1999

❖ தற்போதைய மத்தியிலுள்ள கூட்டணி அரசு, பட்டியல் இன/பழங்குடியினருக்குச் சிறப்பு நியமனங்கள் வழங்க கொள்கை முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தியும் வருகிறது. ஆனால், கூட்டணியிலுள்ள தமிழ் நாட்டுக் கட்சிகள் தமிழ் நாட்டில் இதை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை வலுவான குரல் கொடுக்கவில்லை.

**இனம் 4 :** மத்திய அரசிலுள்ள பல துறைகளில் பட்டியலினப் பணியாளர் சங்கங்களுக்கு முறையான சங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சங்கமாக ஏற்பளிப்பு வழங்கப்படா இடங்களிலும், இச்சங்கங்கள் முறையாக நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த அழைக்கப்படுகின்றன. பெரும்பாலான துறைகளில் இச்சங்கங்களுக்குக் கட்டட வசதி, விடுப்பு வசதி, பயண வசதி ஆகியவை செய்து தரப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் தமிழ் நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தமிழ் நாடு தகவல் தொகுப்பு விவர மய்யம் ஆகிய இரு துறைகளைத் தவிர, வேறெங்கிலும் பட்டியலினப் பணியாளர் சங்கங்களுக்கு முறையான ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை.

**1996இல் ஆட்சியை இழக்கும் முன்னும், 2001இல் மீண்டும் ஆட்சிக்கு வரும் முன்னும் - பதவி உயர்வில் தலித்துகளுக்கு பதவி உயர்வு அளிக்க அ.தி.மு.க. கட்சி தேர்தல் வாக்குறுதி அளித்தது. 1998இல் ஆட்சியில் இருந்த தி.மு.க. கட்சி முதல்வர், இதே உரிமை வழங்கப்படும் என்று வெளியிட்டார். ஆனால், இதுவரை தலித் மக்கள் இந்தப் பலனை கிஞ்சித்தும் பெறவில்லை.**

பட்டியலினம் என்ற பெயரிலோ, அம்பேத்கர் என்ற பெயரிலோ உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும்,




அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற 'அம்பு' மாநாடு

பதிவு சங்கங்களுக்கும் அந்தப் பெயரில் பதிவு செய்யப்பட மறுக்கப்பட்ட கொடுமைகள், தமிழகத்தில் அரங்கேறியுள்ளன. இன்னும் பல இடங்களில் இது தொடர்கிறது. நூற்றுக்கணக்கில் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பல்வேறு பணியாளர் சங்கங்களுக்கு நிலம், கட்டடம், அலுவலக அறை போன்ற வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், பட்டியல் இனச் சங்கங்களுக்கு என்று எந்த ஒரு துறையிலும் இதுவரை இந்த வசதிகள் அளிக்கப்படவில்லை.

❖ பட்டியல் இனச் சங்கங்கள் நடத்தும் கூட்டங்களுக்கு 1975க்குப் பிறகு எந்தவொரு தலைமைச் செயலரும், பட்டியல் இனம் அல்லாத செயலரும், ஒரு சிலர் தவிர பிற பட்டியல் இனச் செயலரும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலந்து கொண்டதில்லை.

❖ தலைமைச் செயலகத்திலோ, துறைத் தலைவர் அலுவலகங்களிலோ, ஆதி திராவிடர் நலச் செயலர்/இயக்குநர் அலுவலகங்களிலோ, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் தவிர்த்த பிற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலோ, அண்ணல் அம்பேத்கர் படத்தை வைக்கக்கூட இசைவளிக்கப்படவில்லை.

**இனம் 6 :** அமைச்சரவையில் கையாளப்படும் மதிப்புரு வரிசையில், இதுவரை எந்தவொரு பட்டியலின அமைச்சரும் முதல் அய்ந்து இடங்களுக்குள் வந்ததில்லை. கடந்த 25 ஆண்டுகளாக கடைசி மூன்று இடங்களுக்கு மேல் எந்தவொரு பட்டியல் இன அமைச்சருக்கும் இடம் தரப்படவில்லை. இதுவரை எந்தவொரு பழங்குடியினரும் அமைச்சராக்கப்படவில்லை.

**இனம் 7 :** சிறப்பு உட்கூறுத் திட்டம் பற்றி எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரை சிந்தித்து அறிக்கை வெளியிட்டதில்லை. பட்டியல் இனத்தவருடன் எந்தவொரு ஆட்சியும் இதுகுறித்து ஆய்வு நடத்தவோ, கலந்துரையாடவோ, குழு அமைக்கவோ முன்வரவில்லை. ஒரே மாநிலத்தில் மட்டும் ஒரே அய்ந்தாண்டுத் திட்டத்தில் பட்டியல் இனத்தாருக்கு வராமல் போகும் திட்ட ஒதுக்கீடு, சில ஆயிரம் கோடி ரூபாய்களைத் தாண்டும். மத்திய அரசின் ஒதுக்கீட்டு இழப்போ சில லட்சங்களைத் தொடும். ●





படிப்பகம்

www.padippakam.com

# “ஆக்கப்பூர்வமான வன்முறை என்று ஒன்றில்லை”

♦ டாக்டர் கே. பாலகோபால்



**தங்களுடைய குடும்பப் பின்னணி, சமூகப் பின்னணி...**

என்னுடைய குடும்பம், ஆந்திரப் பிரதேசத்தின் ராயல்சீமா பகுதியைச் சேர்ந்தது. இப்பகுதி கடுமையான வறட்சிக்கும், 'குழு' வன்முறைக்கும் புகழ் பெற்ற இடம். என்னுடைய அம்மாவின் தந்தை, பார்ப்பனிய மரபுவழிச் சடங்குகளில் தேர்ந்த பயிற்சி பெற்றவர். இவர் மைசூரில் உள்ள மகாராஜா கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவருக்கு அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள அக்கிரகாரத்தில் பங்கு இருந்தது. இப்பகுதி, ராஜஸ்தானில் உள்ள பாலைவனப் பகுதிகளைப் போல மிகவும் வறண்டு காணப்பட்டது. என்னுடைய தந்தையின் குடும்பம், கடப்பாவில் உள்ள நகர்ப்புறத்தைச் சேர்ந்த கீழ் நடுத்தர வர்க்கமான பார்ப்பனக் குடும்பம். என் தந்தை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கிளை மேலாளராக இருந்து ஓய்வு பெற்றவர். எனது தாய் 14 முறை கருவுற்றுப் பதினோரு குழந்தைகளைப் பெற்றார்; அதில் மூவர் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர். என்னுடைய தாய் எங்கள் எட்டு பேருடைய (4 சகோதரர்கள், 4 சகோதரிகள்) வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்தினார்.

என்னுடைய தந்தை ஒரு சராசரி ஆணாகவே இருந்தார். அவருடைய ஒரே கடமை, எங்களுக்குப் பள்ளி மற்றும் கல்லூரிக் கட்டணங்களைச் செலுத்துவது தவிர வேறில்லை என்று நம்பிக் கொண்டிருந்தார். அதுகூட அந்தக் காலத்தில் நகராட்சிப் பள்ளிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும் எங்களுக்கு நல்ல முறையிலும், இலவசமாகவுமே கற்றுக் கொடுக்கப்பட்டது. என்னுடைய தந்தைக்கு ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறுதல் வந்ததால், மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் நான் படிக்க நேர்ந்தது. என்னுடைய அறிவியல் இளங்கலைப் படிப்பை திருப்பதியில் படித்து 1972 இல் பட்டம் பெற்றேன். என்னுடைய அறிவியல் முதுநிலைப் படிப்பையும், கணிதவியலில் முனைவர் பட்டத்திற்கானப் படிப்பையும், தெலுங்கானா பகுதி - வாரங்கல்லில் உள்ள 'ரீஜினல் பொறியியல் கல்லூரி'யில் (தற்பொழுது அது 'தேசியத் தொழில்நுட்ப நிறுவனம்' என்று அழைக்கப்படுகிறது) படித்தேன். வாரங்கல் பகுதி, 1946 - 57 காலகட்டத்தில் தெலுங்கானாவின் விவசாயிகள் எழுச்சிப் போராட்டத்திற்குப் பெயர் பெற்ற இடமாகும். 1970 களின் மத்தியில் இவ்வியக்கம், சிறீகாகுளத்திலிருந்து தெலுங்கானாவிற்கு மாறியதிலிருந்து இன்னும் பல வழிகளில் குறிப்பாக, நக்சலைட் இயக்கத்திற்கு மய்யமான இடமாக அது விளங்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com

டாக்டர் கே. பாலகோபால், இந்திய அளவில் புகழ்பெற்ற மனித உரிமைப் போராளிகளில் குறிப்பிடத்தகுந்தவர். இவர் 'ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் குழு'வின் பொதுச் செயலாளராக இருந்தவர். தற்பொழுது 'மனித உரிமைக் கழக'த்தின் பொதுச் செயலாளராக செயல்படுகிறார். ஆந்திராவில் வெகு மக்கள் ஆதரவுடன் 18 மாவட்டங்களில் இவ்வமைப்பு செயல்படுகிறது. மனித உரிமை அமைப்புகள் மக்கள் இயக்கமாக செயல் பட முடியாது; சிறிய குழுவாகத்தான் இருக்க முடியும் என்பதை செயலளவில் மாற்றியதில் இவருக்கு முக்கிய பங்குண்டு.

1994 இல் கர்னூலில் நடைபெற்ற 'ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் குழு'வின் மாநில மாநாட்டில் இவரது அறிக்கை, 18 மணி நேரம் விவாதிக்கப்பட்டது. அரசு வன்முறையும், தனி அமைப்பு வன்முறையும் எதிர்க்கப்பட வேண்டும் என்ற இவரது கருத்துகள், அப்போது நீண்ட விவாதத்திற்குள்ளானது. இதன் தொடர்ச்சியாக, மேற்குறிப்பிட்ட நக்சலைட் ஆதரவு மனித உரிமை அமைப்பிலிருந்து விலகி, தனி அமைப்பு உருவாக்க வேண்டிய நிலைக்கு இவர் தள்ளப்பட்டார். ஆந்திர உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகவும் பணியாற்றிவரும் இவர், செயல்தளத்தில் மட்டு மல்லாது எழுத்துத் தளத்திலும் பங்களிப்பு செலுத்தி வருகிறார். காவல் துறையின் அதிகாரம் மேலோங்கி இருக்கும் ஆந்திராவில், உயிருக்கு அச்சுறுத்தலுள்ள சூழலில் - இவருடைய துணிவான மனித உரிமை செயல்பாடு, பலராலும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.



■ நேர்காணல் : **கோ. சுகுமாரன்**

**நீங்கள் ஒரு மனித உரிமைப் போராளியாக எவ்வாறு பணியாற்றத் தொடங்கினீர்கள்?**

நான் முதன் முதலில் வாரங்கல்லில் தான் நக்சலைட்டு இயக்கத்துடன் தொடர்பு கொண்டேன். அதற்கு முன்பு, திருப்பதியில் இளங்கலைப் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தபோது, கணிதம் - இயற் பியல் - வேதியியல் ஆகிய வகுப்புகளைத் தவிர்த்துவிட்டு, பெரும்பாலான கல்லூரி நாட்களை சிறீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் உள்ள நூலகத்தில்தான் செல வழித்து வந்தேன். வரலாறு, தத்துவம், ஆங்கில இலக்கியம், மனோதத்துவம், தர்க் கவியல் மற்றும் வானவியல் குறித்து நிறை யப் படித்தேன். நான் வெகு விரைவில் பெர்ட்ரண்ட் ரசல் மற்றும் அவருடைய இடது சாரி சிந்தனைகளின் பால் ஈர்க்கப்பட்டேன். எனவே, அப்போது எனக்கு கம்யூனிஸ்ட்டு கள் மனதளவில் நல்லவர்களாகவும், சிந்தனை அளவில் இறுக்கமானவர்களா கவும் பட்டார்கள்.

நான் வாரங்கல்லில் இருந்தபோதுதான் நக்சலைட் இயக்கத்துடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. இதற்கு ரீஜினல் பொறியியல் கல்லூரி, ஒரு மய்ய இடமாக அமைந்தது. 1975 சூனில் நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்தபோது, சூரா பனானி ஜனார்த்தனன் என்ற நக்சலைட் போராளிதான் முதல் முறையாகக் கொல் லப்பட்டவர். அவர் இக்கல்லூரியின் மாணவர். மற்றொருவர் செருகுரி ராஜ் குமார். இவர் தற்பொழுது சி.பி. அய். (மாவோயிஸ்ட்) இன் மய்யக் குழு உறுப்பி னராக இருக்கிறார். ராஜ்குமார் அடிக்கடி என்னிடம் அரசியல் பேசுவார். ஆனால், கம்யூனிஸ்டுகள் உள்ளத்தால் நல்லவர் கள்; அவர்களுடைய தத்துவம் பலமற்றது என்ற என்னுடைய சிந்தனையில் எந்த மாற்ற மும் ஏற்படவில்லை. பெர்ட்ரண்ட் ரசலிட மிருந்து பெற்ற ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில், என்னால் 'நெருக்கடி நிலையை'ப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதுதான் எனக்கு வருத்தம்.

கம்யூனிஸ்டுகளிடம் இதற்கு விடை இருப்பதாக எனக்குத் தோன்றியது. இருப் பினும், முன்னேற்றப் பதிப்பகம் வெளி யிட்ட மார்க்சியம் குறித்த நூல்கள், எனக்குச் சிறிதும் உதவவில்லை. நான் தற்செயலாக டி.டி. கோசாம்பியைப் படிக்க நேர்ந்தபோது தான் - மார்க்சியத்தின் சாரத்தைப் புரிந்து கொண்டேன். அதன்பிறகுதான் நான் 'மூல தனம்' மூன்று தொகுப்புகளையும் படித் தேன். இருப்பினும், கணிதத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்ததால், ஒரு போரா ளியாக மாறுவேன் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அங்குள்ள 'இந்திய புள்ளியியல் நிறுவனத்தில்' கணிதத்தில் முனைவர் பட்டத்திற்கான உயர் ஆய்வை மேற்கொள்ள, 1978 இல் டெல்லிக்குச் சென்றேன்.

அங்கு சென்ற ஒன்றரை ஆண்டுகளி லேயே என்னால் அந்தப் பாடத்தின் தன் மையையும், அதில் ஆய்வு செய்பவர்களின் திறமையையும், செயல்பாட்டையும் புரிந்து கொள்ள முடிந்தது. அந்தப் படிப்பு மீது எனக்கிருந்த ஈர்ப்பு குறைந்ததால், கணித வியல் ஆராய்ச்சியாளராக மாறுவதைவிட ஒரு போராளியாக மாறுவது என்று முடிவு செய்தேன். என்னுடைய ஆய்வு முடியும் முன்பே நான் மீண்டும் வாரங்கலுக்கே வந்து விட்டேன். எனக்கு 'ககாட்டியா பல்கலைக் கழக'த்தில் உள்ள கணிதவியல் துறையில் விரிவுரையாளர் வேலை கிடைத்தது. நான் அப்போது 'இயக்கத்திற்காகப் பணியாற்ற' முடிவு செய்தேன். நான் இயக்கம் என்று குறிப்பிடுவது 'நக்சலைட் இயக்கம்'.

அந்தக் காலகட்டத்தில், ஆந்திர மாநி லத்தில் சிவில் உரிமைகளுக்காகப் பணி யாற்றுவது என்பது, மிகவும் மரியாதைக் குரிய ஒன்றாகப் புரிந்து கொள்ளப் பட்டது. அதிலும் குறிப்பாக அறிவுஜீவிகள் நக்சலைட் இயக்கத்திற்கு வேலை செய்வது என்பது, மிகுந்த மரியாதையுடன் பார்க்கப் பட்டது. இந்த வகையில்தான் நான் ஒரு மனித உரிமைப் போராளியாக மாறினேன். மற்றபடி மனித உரிமைகளை முற்றாகப் புரிந்து கொண்டு நான் மாறவில்லை. அறி வாளிகள் நக்சலைட்டுகளுக்குச் செய்யக் கூடிய ஒரே உதவி என்ற முறையில், 'ஆந் திரப் பிரதேச சிவில் உரிமைக் கழக'த்தினர் நக்சலைட்டுகளுக்கு உதவி செய்தனர். நான் 1983ஆம் ஆண்டே இவ்வமைப்பின் பொதுச் செயலாளரானேன். இதன் பின்னணியில்



படிப்பகம்

www.padippakam.com

மிகச் சாதாரணமான காரணங்களே இருந்தன. இடதுசாரி இயக்கங் களுடன் தொடர்புடைய அமைப்பு களில் இப்படிதான் நடக்கும்.

இன்று, என்னைப் பொறுத்த வரையில், மனித உரிமை அமைப்பு களில் இருக்கும் என்னுடைய சகப் போராளிகளைப் பொறுத்தவரை யில், ஓர் ஆரோக்கியமான - முழு மையான மனித உரிமை இயக்கம் என்ற அளவில் எங்களுடைய தொடக்கம் சிறப்பானதாக இல்லை. இதற்காக நாங்கள் வருத்தப்பட வில்லை. எனினும், நாங்கள் அர சுக்கும் நக்சலைட் இயக்கத்திற்கும் இடையில் பணியாற்றுவது - அப் போதும் இப்போதும் பயனுள்ளதாக இருப்பதாகவே உணர்கிறோம். ஆனால், இது தொடக்கப் புள்ளியாக இருந்திருக்கக் கூடாது. இத்தகைய செயல்பாடுகள் அரிதாகவும், உரி மைகள் பற்றிய இருவிதமான விழிப் புணர்வுகளும் கலந்ததாக இருந்தது.

ஒரு மனிதனின் உரிமையை அரசு பறிக்கக்கூடாது என்ற விடு தலைச் சிந்தனை ஒரு புறம், புரட்சி செய்வதற்கான உரிமை வேண்டும் என்ற சிந்தனை மறுபுறம். இது எங்கு போய் முடியும் என்றால், ஒரு தனி மனிதனை எந்த விதத் திலும் மதிக்காத ஓர் அரசை அமைப் பதில் போய் முடியும். மனித உரி மைக் கோட்பாடு என்பது, தனி மனிதனின் உரிமைகளை முழுமை யாக அங்கீகரிப்பதாக இருக்கிறது. அதே சமயத்தில் ஒரு மேம்பட்ட சமூகத்தைத் தீவிரமான வழிகளில் முன்னெடுப்பதையும் அங்கீ கரிக்கிறது. ஆனால், அரசு எந்திரத்திற்கு எதிராக தனி மனிதனின் உரிமைகளை நிலைநிறுத்துவது என்பது மட்டும் - தனி மனிதனின் எல்லாவித உரிமைகளையும் செயல்படுத்துவது என்பதாக அமையாது. மேம்பட்ட சமூகம் என்பது, எல்லா அம்சங்களிலும் இப்போதிருக் கும் சமூகத்தைவிட உரிமைகளை மதிப்பதாக அமைய வேண்டும். உண்மையில், மனித உரிமைக் கோட்பாடு என்பது மேற்குறிப்பிட்ட இரு அம்சங்களை மட்டுமே சார்ந்தது அல்ல. அது மனிதர்கள் அனை வரையும் சமமாகப் பார்க்கிறது. அவர்களுக்கான தகுதிகளையும் வாய்ப்புகளையும் சமமான அளவில் பகிர்ந்தளிக்கிறது. இந்தக் கருத்து தான் இந்தியாவில் புத்தரின் காலத்திலிருந்தே, பார்ப்பன சமூகத் திற்கும் நாகரிகத்திற்கும் எதிராக, மனித உரிமைக் கோட்பாடு என்ப தற்கான உண்மையான அர்த்தத்தையும் உயிர்ப்பையும் தந்திருக்கிறது.




**மக்கள் யுத்தக் குழுவின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்துச் சொல்லுங்கள்.**

மக்கள் யுத்தக் குழுவின் (தற்பொழுது சி.பி.அய். - மாவோ யிஸ்ட் என்று அழைக்கப்படுகிறது) தொடக்கத்தை, அவர்களின் எழுத்துக்களிலிருந்தே கொள்ள முடி யும். எனக்கு இது பற்றி குறைந்த அளவே தெரியும். ஏனெனில், அதைத் தெரிந்து கொள்வதில் எனக்கு ஆர் வம் இருந்ததில்லை. நக்சலைட் இயக்கத்திற்கான என்னுடைய ஆதரவு, பெருமளவு அதனுடைய சமூகத் தாக்கத்தால் ஏற்பட்டதுதான். இந்தப் பொருளில், நக்சலைட் இயக்கத்தின் (மக்கள் யுத்தக் குழு மட்டும் அல்ல) தோற்றம், கிராமத் தில் உள்ள 'ரயத்' - கூலி சங்கத்தை (விவசாயத் தொழிலாளர் சங்கம்) அடிப்படையாகக் கொண்டிருந்தது. இத்தகைய சங்கங்கள், பன்முகத் தன்மை வாய்ந்த போராட்டத்தின் கருவாக இருந்தன: நிலத்திற்கானப் போராட்டம், கூலி உயர்வுக்கானப் போராட்டம், கொத்தடிமை முறைக்கு எதிரானப் போராட்டம், ஏழை / தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களைப் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்கும் நிலச்சுவான்தார்களுக்கு எதிரானப் போராட்டம், தீண்டாமைக்கு எதிரா னப் போராட்டம், தங்களுக்குள் ஏற் படும் சண்டைகளை நிலச்சுவான் தார்களின் பஞ்சாயத்தால் தீர்த்துக் கொள்வதற்குப் பதில் மக்கள் தாங் களாகவே தீர்த்துக் கொள்வது போன்றவற்றை இந்தச் சங்கங்கள் முன்னெடுத்தன.

இத்தகைய செயல்பாடுகளே நக்சலைட் இயக்கத்தின் உயரிய நோக்கமாக இருந்தது. கிராமத்தில் நிலவும் சமூக உறவுகளைத் தலை கீழாக மாற்றுவது என்பதுதான் அத னுடைய அடிப்படையான நோக்க மாக இருந்தது. கணக்கிடக்கூடிய அளவில் நிலப்பங்கீட்டில் பெருமளவு மாற்றங்கள் இல்லை எனினும், கூலி உயர்வு கிடைத்தது; கொத்தடிமை முறை முழுமையாக ஒழிந்தது. கிராமத் தில் நிலவிய அதிகார உறவுகள், முன்பு எப்போதும் இல்லாத வகையில் மாறிவிட்டது.

நக்சலைட் இயக்கத்தின் 'வளர்ச்சி' குறித்து ஒருவர் பேச வேண்டும் எனில், பின்வரும் மய்யப்புள்ளிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 'ரயத்' - கூலி சங்கத்தின் வெற்றிகரமானப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு பயன்படுத்திய கடும் ஒடுக்குமுறை; நக்சலைட்டுகளின் வன்முறை வடிவங்கள் குறிப்பாக மக்கள் யுத்தக் குழுவின் வன்முறை வழிமுறைகள்; இதற்கு எதிராக மேலும் அதிகமான வன்முறையை அரசு ஏவியது; இதற்கெதிராக மேலும் வன்முறையைக் கடைப்பிடித்த மக்கள் யுத்தக் குழு - என ஒன்றிலிருந்து மற்றொன்றாகச் சுழன்று வந்தது. கட்சி ஒரு முழு மையான புரட்சிகர இயக்கமாக முதிர்ச்சி அடைந்து விட்டது என்று அவர்களுடைய வெளியீடுகள் குறிப்பிடலாம். ஆனால், இது விவாதத்திற்குட்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஓர் உண்மையான மக்கள் இயக்கத்தின் சீரழிவுக்கு, ஓரளவு பயிற்சி பெற்ற போராளிகள் அரசுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி ஓடி விடும் தன்மைக்கு - யார் முழு காரணமாக இருந்தாலும், குறிப்பாக மக்கள் யுத்தக் குழுவின் புரட்சிகர இயக்கச் செயல்பாடுகளில் - வெகுமக்களுடைய பங்களிப்பு என்பது, பெருமளவில் குறைந்து விட்டது. இயக்கத்தின் மய்யமான சங்கத்தில் இருந்துதான் ஆயுத மேந்திய குழுக்கள் தேர்வு செய்யப்பட்டனர். காவல் துறை மற்றும் அரசின் பிற நிறுவனங்களுக்கு எதிராகத் தோன்றிய கெரில்லா போராட்டம், கிராமங்களின் சமூக, பொருளாதாரப் போராட்டங் களுக்கு மாற்றாக அமைந்தது. சமூக, பொருளாதாரப் பிரச்சினை களை ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்களாகவே கையிலெடுத்துப் போராடு வதற்குப் பதில், அவை ஆயுதக் குழுக்களாலேயே கையிலெடுக் கப்பட்டன. முன்பு ஒரு போராட்டம் செய்திருக்கக்கூடிய விஷயத்தை நக்சலைட்டுகளால் கிராமத்தில் ஒட்டப்படும் ஒரு சுவரொட்டியே சாதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை மாறியிருந்தது. ஆனால், மறுபுறம் மக்கள் யுத்தக் குழு, ராணுவ ரீதியாக மேலும் மேலும் தேர்ந்து விளங்கியது. காவல் துறை அதிகாரிகளே அவர் களுடைய ஆற்றலைப் பார்த்து வியக்குமளவுக்கு மாறியது.

**இன்றையச் சூழலில், ஆயுதப் போராட்டம், மனித உரிமைகள் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையிலான பிரச்சினை களை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ஒரு மனித உரிமை இயக்கத்திற்கு உள்ளார்ந்த மாண்புகள் இருக்கின்றன. உடலுழைப்பற்ற வர்க்கம் செய்யக்கூடிய ஒரு புரட் சியாக இதைப் பார்க்க முடியாது. ஆயுதப் போராட்டம் என்பது எப்பொழுதுமே சிக்கலுக்குரியது. ஓர் உண்மையான மனித உரிமைப் போராளி, ஒருபோதும் வன்முறையை ஆதரிக்க முடியாது. வன்முறையில் ஈடுபடுகின்றவர்கள் ஒருபோதும் மனித உரிமைப் போராளிகளாக இருக்க முடியாது. வன்முறை தான் பல நேரங்களில் நீதி கிடைக்க வழி செய்கிறது என்றும், வன்முறையை ஆதரிப்பவர்கள் சொல்வது போல் உலகில் பெறப் பட்ட அனைத்து வெற்றிகளுக்கும் வன்முறைதான் காரணம் என் பதும் உண்மையல்ல. பல ஆண்டுகளாகவே இந்த சிக்கலைப் பற்றி நாங்கள் மிகத் தீவிரமாக விவாதித்து வந்திருக்கிறோம். எங்களால் ஒரு தீர்வுக்கும் வர முடிந்தது - பல பிரச்சினைகளும் சிரமங்களும் இருக்கத்தான் செய்தன - ஆனால் பல வழிகளிலும் நடைமுறையில் அனைத்து அம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வாக அது இருந்தது.

சமூகத்தின் கட்டுமானத்தில் எண்ணற்ற வன்முறைகள் நில வும்போது - வறியவர்களை பலம் பொருந்தியவர்கள் தாக்குவது, பசி, வறுமை, கல்வியின்மை, திட்டமிடப்பட்ட பாகுபாடுகள், தீண்டாமை முதலியன... இருப்பினும், அனைத்துவகை அரசியல் வன்முறையையும் கண்டிப்பது என்பது சரியல்ல. மனித உரிமை ஆர்வலர்கள் வன்முறையை ஆதரிப்பவர்கள் அல்ல; ஆனால், சமூகம் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்து கின்றனர். இதைப் 'புரிந்து கொள்ள' வலியுறுத்துவது ஒருவகை யான ஆதரவை வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இது வன்முறையை ஆதரிப்பதைத் தடுக்கிறது (இதுதான் மரண தண்டனைக்கு எதிரான முக்கியமான வாதம்).

இருப்பினும், நாம் முழுமையற்ற ஒரு சமூகத்தில் வாழ் கிறோம். இந்நிலையில் நாம் வெறும் அரசியல் வழிமுறைகளை மட்டுமே கோர முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டும் எனில், மனித உரிமை ஆர்வலர்கள் வன்முறையை ஆதரிப்பதில்லை. ஆனால் ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் ஆகியோருக்கு ஆதரவான அரசியல் வன் முறையின் பின்னணியை - இந்தச் சமூகம் புரிந்து கொள்ள வலி யுறுத்துகின்றனர். வன்முறையைத் தூண்டும் இந்நிலையை மாற்ற அவர்கள் முயலுகின்றனர். அதே நேரத்தில், அவர்கள் அனைத்து வகை அறியாமைகளையும், அநீதிகளையும் புரட்சியாளர்களின் வன்முறையையும் கண்டிக்கின்றனர். இந்தப் புரிதலில்கூட மாறு பட்ட கருத்துகள் இருக்கலாம். என்னைப் பொறுத்த அளவில், 25 ஆண்டுகளாக, விடுதலைக்காகத் தொடர்ச்சியான, திட்டமிட்ட வன் முறையை அருகில் இருந்து பார்த்து வருகின்றவன் என்ற வகையில் - வன்முறை என்பது சில நேரங்களில் ஒரு தேவையான தீமை. ஆனால், அது தேவைப்பட்டாலும் ஒரு தீமையே!



**❝ மனித உரிமை ஆர்வலர்கள் வன்முறையை ஆதரிப்பதில்லை. ஆனால், ஏழைகள் ஒடுக்கப்பட்டவர்கள், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் ஆகியோருக்கு ஆதரவான அரசியல் வன்முறையின் பின்னணியை - இந்தச் சமூகம் புரிந்து கொள்ள வலியுறுத்துகின்றனர். ❞**

ஆக்கப்பூர்வமான முறையில் வன்முறையைப் பயன்படுத்துவது பற்றி இடதுசாரி அறிவுஜீவிகள் பேசுவதை அடிக்கடி கேட்க முடிகிறது. ஆக்கப்பூர்வமான வன்முறை என்று ஒன்று கிடையாது என்பது என்னுடைய உறுதியான கருத்து. அனைத்து வன்முறையும் அழிவைத் தருபவைதான். அழிவு என்பதற்குப் பல பயன்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். இப்படிப்பட்ட ஒரு அழிவுக்கு தற்போதைய சூழலில் ஒரு தேவை இருக்கத்தான் செய்கிறது. ஏனென்றால், இருக்கும் மாற்று வழிகள் இதைவிட மேலும் அழிவுகளைத் தருப வைகளாக இருக்கின்றன. வன்முறையைத் தவிர்ப்பது என்பது, நம்மீது நிகழ்த்தப்படும் நியாயமற்ற வன்முறையை ஒத்துக் கொள் வதாகக்கூட முடிந்து விடலாம். இந்த நிலையில், வன்முறையைத் தவிர வேறு வழியில்லை. எப்படி இருந்தாலும், வன்முறை என்பது அடிப்படையிலேயே மனிதத் தன்மையற்றது. இந்தக் காரணத்தை மட்டும் முன்வைத்து வன்முறையை நாம் முழுமையாகத் தவிர்ப்பது என்பது, தற்கால சமூகச் சூழலில் சாத்தியமில்லை.

பேட்டி அடுத்த இதழிலும்...



படிப்பகம்

www.padippakam.com

# சாதி = அரசு = ஆட்சி

**சட்டத்தின் அதிகார சக்தி சாதியத்தின் அதிகார சக்தியாக மாற்றப்பட்டது. சாதியம் எவற்றையெல்லாம் மறுத்ததோ, யாரையெல்லாம் ஒடுக்கியதோ, அவற்றையெல்லாம் சட்டத்தின் அதிகார சக்தி மறுக்கிறது - ஒடுக்குகிறது.**

■ **யாக்கன்**

உணர்ச்சிமயமான இந்திய மக்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றலையுடையதாக இந்திய அரசமைப்புச்சாசனம், இன்று வரையிலும் நீடித்து வருகிறது. விதவிதமான அச்சுறுத்தல்களையும், சிக்கல்களையும் சந்தித்துவந்த போதிலும் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக இந்திய மக்களை அதுதான் வழி நடத்திக் கொண்டிருக்கிறது. ஒடுக்கப்பட்ட இனங்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும்கூட, இந்திய அரசமைப்புச்சட்டம் வெறுப்பூட்டக் கூடியதாக இருக்கவில்லை. மாறாக, அவர்களுக்கும் நம்பிக்கையூட்டும் திறனை அது பெற்றிருப்பது, வியப்பைத் தரும் உண்மையாகும். அதற்குக் காரணம், இந்திய அரசமைப்பு, அறிவார்ந்த அறிவியல் தன்மையுடையது என்பது மட்டுமல்ல; சமூக நீதியின்பால் அதற்கிருக்கும் பெரு விருப்பமும் அக்கறையுமேயாகும்.

பெரும் சமூக முரண்களைக் கொண்ட, அறியாமை மிகுந்த இந்திய மக்களைத் தாயுள்ளத்துடன் அரவணைத்துக் காக்க அது முயன்றிருக்கிறது. சாதி, சமய, இன, மொழி, பாலின வேறுபாடுகளையெல்லாம் கடந்து, தனது குடிமக்கள் அனைவரையும் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக்கி, சமப்படுத்துகிறது அது. நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், தனி மனித கண்ணியம் போன்றவை குடிமக்கள் அனைவருக்கும் வாய்க்க உறுதியளிக்கிறது. மேற்கண்ட மிக உயர்ந்த மதிப்பீடுகளைக் கண்டடைய இந்திய அரசமைப்பு, இந்திய மக்களுக்கு வழங்கியிருக்கும் வழிமுறைதான் மக்களாட்சியாகும். எவராலும் ஒரு போதும் மாற்ற முடியாதபடி, மக்களாட்சி வழிமுறையை உறுதி செய்திருப்பது, இந்திய அரசமைப்பின் கூடுதல் சிறப்பாகக் காண முடியும்.

அத்தகைய மக்களாட்சி, அரசமைப்புச்சட்டத்தின் உயர்ந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் நம்பிக்கையளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறதா என்பதே நம்முன் எழும் கேள்வி! இந்துப் பார்ப்பன வேத மரபுகளால் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட சாதியத்தையும், அதன் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் மாற்றியமைக்கும் திறனுடையதாக இந்தியாவின் மக்களாட்சி வடிவமைக்கப்படவில்லை. அத்தகைய நோக்கத்துடன் அது உருவாக்கப்படவும் இல்லை. மாறாக, இந்தியாவின் மக்களாட்சி, அரசியல் காரணிகளால், அரசியல் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதாகும்.



விடுதலையை நெருங்கிக் கொண்டிருந்த நாட்களில், இந்தியாவின் அரசியல் மற்றும் சமூகச் சூழ்நிலைகள் பெரும் கொந்தளிப்புடன் இருந்தன. அரசியல் உரிமைகளுக்காக அனைத்து இந்திய மக்களும், தங்களின் இன, சாதி, மத, மொழி அடையாளத்தை உயர்த்திப் பிடித்தனர். வெள்ளை ஆதிக்கத்தை ஒன்று சேர்ந்து எதிர்த்த இந்திய மக்கள், சுதந்திர இந்தியாவின் அரசியல் பலன்களை பங்கிட்டுக் கொள்ள போட்டியிட்டனர். அது, பெரும் உள்நாட்டுப் போர் போலிருந்தது. சமூகத்தளத்தில் தங்களிடையே நிலவும் அனைத்து ஏற்றத் தாழ்வுகளையும் அரசியல் வாய்ப்புக்களாலும் லாபங்களாலும் சரி செய்து கொள்ள முடியும் என்று நம்பினர். அந்த நம்பிக்கைதான் இந்திய மக்களை அரசியல் வெறிபிடித்தவர்களாக்கியது. நூறாண்டு காலமாக காங்கிரஸ் கற்றுக் கொடுத்த பாடம் அது. மக்களின் சமூக, பொருளாதார பிரச்சனைகளைப் பின்னுக்குத் தள்ளி, வெள்ளையரை விரட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மாயையில் தேசமக்களை மூழ்கடித்தது. இன்று வரை அதே 'அரசியல் உளவியல்' ஆட்சியாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வருகிறது.

விடுதலைக்குப் பிறகு உருவான அரசியல் பதற்றத்தையும் அதிகரித்து வந்த பிரிவினை முழக்கங்களையும் கட்டுப்படுத்தி, மக்களிடையே தேசிய அரசியல் ஒற்றுமையை வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாயம், அரசமைப்பு அவையின் சட்ட அறிஞர்களுக்கு உருவாகியது. 'செழுமையான மக்களாட்சியை' உருவாக்குவதன்மூலமே, நாட்டின் அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வைக் கொண்டுவர முடியும் என்று அவர்கள் நம்பினர். மக்களாட்சி நடைமுறையைத் தவிர, வேறு எந்த வகை ஆட்சிமுறையையும் அரசமைப்புச் சட்ட அறிஞர்கள் தேர்ந்தெடுத்திருந்



படிப்பகம்

www.padippakam.com

தாலும், இவ்வளவு பெரிய இந்தியா உருவாகியிருக்காது. உருவாகியிருந்தாலும் இத்தனை காலம் அது நீடித்திருக்காது.

ஆயினும் 'செழுமையானது' என்று அரசமைப்புச் சட்ட அறிஞர்கள் கருதிய இந்திய மக்களாட்சி, கெடுவாய்ப்பாக பெரும் குறைவுடையதாகவே இருந்தது. அரசியல் தளத்தில் மக்களைக் குவிமய்யப்படுத்துகிறபோது, அம்மக்களிடையே நிலவும் சமூகப் பிரச்சனைகளும், ஏற்றத்தாழ்வுகளும் நீர்த்துப் போகும் என்று அரசியல் தலைவர்களும் அரசமைப்புச் சட்ட அறிஞர்களும் நம்பினார்கள். கல்வியறிவற்ற பாமர ஏழைகள் நிரம்பி வழியும் இந்தியாவில், அரசியல் நோக்கங்களுடைய 'அரசியல் மக்களாட்சி' வெற்றிபெற முடியாது என்பதை அவர்கள் அப்போது உணரவில்லை. ஆனால், சமூகப் பொருளாதார மக்களாட்சியை உருவாக்குவதே புரட்சியாளர் அம்பேத்கரின் உண்மையான உறுதியான லட்சியமாக இருந்தது. சமூக, பொருளாதாரத் தளத்தில் மக்களாட்சியைக் கண்டடைவதற்கு நாடாளுமன்ற மக்களாட்சி உதவமுடியாமல் போகுமானால், அதற்குப் பொருளே இல்லை என்று கருதினார் அம்பேத்கர்.

அரசமைப்புச்சட்டத்தின் 14ஆவது பிரிவு வகுத்தளிக்கும் 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான், நாடாளுமன்ற மக்களாட்சியில், 'ஒரு மனிதர், ஒரு மதிப்பு' என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால், சமூகப் பொருளாதாரத் தளங்களில் அக்கொள்கை மிதிபடுகின்றது. இத்தகைய பிறழ்வுகளுக்கு, அரசமைப்பு அவை அறிஞர்களே காரணமாக இருந்திருப்பதை அம்பேத்கர் விளக்குகிறார்.

மக்களாட்சியை விரும்பவில்லை அல்லது அதை அலட்சியப்படுத்தினார்கள் என்பது உறுதியாகிறது. அரசியல் தளத்திலும்கூட, தேர்தல் காலங்களில் வாக்களிப்பதைத் தவிர, மக்களாட்சியில் மக்களின் பங்கேற்பு எதுவுமில்லை. தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் போக்குகளைப் பற்றி எழுதத் தேவையில்லை. இத்தகைய பெரும் பிழைகளுடையதாக இந்திய மக்களாட்சி வடிவமைக்கப்பட்டிருப்பது தற்செயலானது அல்ல! மாறாக, சமூகப் பொருளாதாரத் தளங்களில் வதைபட்டுக் கொண்டிருக்கும் மக்களை, போலியான அரசியல் சமத்துவத்தின் மூலம், புதை குழிக்குள் மூழ்கடிக்கும் வஞ்சக வேலைத்திட்டமாக இருக்கிறது அது.

பன்னெடுங்காலமாக இந்தியச் சாதிய சமூகத்தில், அரசியல், பொருளாதாரத் தளங்களில் அதிகாரம் பெற்றிருந்தவர்களுக்கே, இந்திய மக்களாட்சியும் அதிகாரத்திற்கு வர வாய்ப்பளித்தது. அரசமைப்புச் சட்டம் வகுத்துத் தந்த 'ஒரு மனிதர், ஒரு மதிப்பு' என்ற கோட்பாடு, அதற்கே பயன்பட்டது. அரசியல் மாற்றத்தையோ, ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு மீளும் வாய்ப்பையோ அது தரவில்லை என்பது நிரூபணமானது. அரசமைப்புச்சட்டத்தின் குறைபாடுகள், ஏற்கனவே பலவீனமாக வடிவமைக்கப்பட்டிருந்த மக்களாட்சி நெறிமுறைகளை மேலும் வலுவிழக்கச் செய்தன. மக்களாட்சிப் பணியாளர்களாகக் கருதப்பட்டவர்கள், தாங்கள் சார்ந்த சாதியின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டதன் விளைவாக, 'சாதி - அரசு அதிகார வர்க்கம்' ஒன்று பேராரவாரத்துடன் உருவாகியது. அவ்வர்க்கத்திற்கு அதே சாதி உணர்வாளர்களாக இருந்த ஆட்சியாளர்கள் துணை போனதால், மக்களாட்சி நெறிமுறைகளை அரசமைப்புச் சட்டத்தின் மூலம் மக்கள் பெற்றிருந்த உரிமைகளைத் தின்று விழுங்கும் கரையான்களாக 'சாதி - அரசு அதிகார வர்க்கம்' மாறியது. கெடு வாய்ப்பாக, அக்கரையான்களுக்கு மக்கள் உரிமைகளைத் தின்னக் கொடுத்தவர்கள், ஆட்சியாளர்கள் மட்டுமல்ல; இந்திய அரசமைப்புச் சாசனமும்தான்.

**❝ இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அதிகார சக்தியை ஆட்சியாளர்கள் மட்டுமே பெற்றிருக்கவில்லை. பெருமளவிலான சட்ட அதிகார சக்தியை அதிகார வர்க்கம்தான் பெற்றிருக்கிறது. ❞**

''ஒரு மனிதர், ஒரு மதிப்பு என்ற கொள்கையே மக்களாட்சியின் ஆன்மா'' ஆகும். வருத்தத்திற்குரிய செய்தி என்னவென்றால், அரசியல் கட்டமைப்பு தொடர்பாக மட்டுமே இக்கொள்கைக்குச் செயல் வடிவம் கொடுக்க முயன்றுள்ளது இந்திய மக்களாட்சி. 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற விதியைக் கைக் கொள்ளுவதன் மூலம் இம்முயற்சி நடைபெறுகிறது. இந்த விதி, ஒரு மனிதர் ஒரு மதிப்பு என்ற கொள்கையை எல்லா தளத்திலும் உண்மையாக்கி விடும் என்று அரசமைப்பு அவை அறிஞர்கள் நம்புகிறார்கள்.

இந்தியாவின் மக்களாட்சி, இந்திய சமூக, பொருளாதாரக் கட்டமைப்புகளைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. மாறாக, அதை வளர்த்தெடுப்பவர்களின் விருப்பப்படியே அது வளரட்டும் என்று விட்டுவிட்டார்கள். காரணம், ஒரு பழமைவாதக் கருத்து அவர்களை ஆட்டிப் படைத்தது. மக்களாட்சி அமைப்பிற்குத் தேவைப்படுவதெல்லாம், அரசை அதன் குடிமக்களுக்குப் பொறுப்பாக்கக் கூடியதும், மக்களை அரசு கொடுங்கோன்மை செய்வதைத் தடுக்கக் கூடியதுமான அரசமைப்புச்சட்டம் மட்டுமே! இந்திய மக்களாட்சி, 'ஒரு மனிதர்; ஒரு மதிப்பு' என்ற தன் கொள்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், அரசமைப்புச் சட்டம், சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதை அவர்கள் உணரவில்லை'' என்கிறார்.

இதன் மூலம், அரசமைப்பு அவை சட்ட அறிஞர்கள், சமூகப் பொருளாதாரத் தளங்களில் சமத்துவத்தை உருவாக்கும்

எந்தவொரு சட்டத்திற்கும் 'அதிகார சக்தி' ஒன்று உண்டு. அதிகார சக்தியற்றது சட்டமாக இருக்கவியலாது. சட்டத்தின் அதிகார சக்தியைப் பயன்படுத்தும் மனிதர்களே ஆட்சியாளர்களாகவும் அதிகாரிகளாகவும் மாறுகிறார்கள். பரந்து விரிந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அதிகார சக்தியை ஆட்சியாளர்கள் மட்டுமே பெற்றிருக்கவில்லை. பெருமளவிலான சட்ட அதிகார சக்தியை அதிகார வர்க்கம்தான் பெற்றிருக்கிறது. சட்டத்தின் அதிகார சக்தியே ஆட்சி எனப்படுகிறது. ஆட்சி என்பது நிர்வாகமாக நெகிழ்ந்து செயலாற்றி, தன் எல்லைக்குட்பட்ட அனைத்தையும் கட்டுப்படுத்துகிறது.

சட்டத்தின் அதிகார சக்திதான், நிர்வாகம் செய்யும் அதிகார வர்க்கத்திற்கு அடிப்படை. ஆயினும் அதிகார வர்க்கத்திற்கு, அது போதுமானதாக இருப்பதில்லை. எனவேதான், அவசரச் சட்டம், உத்தரவு, விதிகள், போன்ற புதிய புதிய அதிகார சக்திகளை அதிகார வர்க்கம் உருவாக்கிக் கொள்கிறது. அதற்கு அரசமைப்புச் சட்டம் அனுமதியும்



படிப்பகம்

www.padippakam.com

வழங்குகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பாகம் 3, பிரிவு 12 (3) பின்வருமாறு பேசுகிறது: 'சட்டம் என்பதில் அவசரச் சட்டம், ஆணை, துணைவிதி, ஆட்சி அதிகாரம், ஒழுங்குமுறை, அறிவிப்பு, பழக்கவழக்கம், ஆகியவை இந்திய சட்ட அதிகார சக்தி என்று கொள்ளப்படும்.'

அதன்படி மீப்பெரு அதிகார சக்தியை ஆட்சியாளர்கள் பெறுகிறார்கள்; அதிகார வர்க்கம் பெறுகிறது. அத்தகைய பரந்து விரிந்த அரசமைப்புச்சட்டத்தின் அதிகார சக்தியை 'சாதி உணர்வுடைய' - அரசு அதிகார வர்க்கம் பெற்றதன் விளைவாக, 'சட்டத்தின் அதிகார சக்தி' சாதியத்தின் அதிகார சக்தியாக மாற்றப்பட்டது. சாதியம் எவற்றையெல்லாம் மறுத்ததோ, யாரையெல்லாம் ஒடுக்கியதோ, அவற்றையெல்லாம் சட்டத்தின் அதிகார சக்தி மறுக்கிறது; ஒடுக்குகிறது. அதற்கேற்ற வகையில், எண்ணற்ற அரசாணைகளை, ஒழுங்கு விதிகள் அறிக்கைகளை, அவசரச் சட்டங்களை 'சாதி - அரசு அதிகார வர்க்கம்' உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது.

இந்த நவீன சட்டமுறைச் சாதியம்தான், இந்தியாவில் மக்களாட்சியென அழைக்கப்படுகிறது. இந்த வெட்கக்கேடான மக்களாட்சிக்கு, உலக நாடுகள் மதிப்புத் தர வேண்டுமென இந்திய ஆட்சியாளர்கள் பேசித் திரிவதை என்னவென்று சொல்வது?

சுதந்திர மாயையிலிருந்தும் மக்களாட்சிக் கவர்ச்சியிலிருந்தும், ஒடுக்கப்பட்ட இனங்கள் மீண்டு வரமுடியாமல் இன்று வரை தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. பித்தம் தெளிய எதைத் தின்பதென அம்மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சாதி - அரசு - அதிகார வர்க்கம், கடந்த அய்ம்பதாண்டுகளில் மூர்க்கமாக ஒரு வேலைத் திட்டத்தைச் செய்து முடித்திருக்கிறது. அது எதுவெனில், குடியரசு இந்தியாவில் பேரளவில் பெருகிக் கிடந்த பொருளாதார வாய்ப்புகளை, பார்ப்பன - உயரடுக்கு இடைநிலைச் சாதியினரிடம் கொண்டு போய் சேர்த்ததேயாகும்.



ஏற்கனவே, அநீதியான நிலவுடைமை - பொருளியல் ஏற்றத் தாழ்வுகளைப் போற்றி வளர்த்த சாதிய இந்தியாவில், நவீன மக்களாட்சி நடைமுறையிலும் பொருளாதார வாய்ப்புகளும் சமமாகப் பங்கிடப்படவில்லை. நாட்டின் வளங்களை சமப்பங்கீடு செய்வதற்கான கட்டாயத்தை இந்திய அரசமைப்புச் சட்டமும் வலியுறுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தியப் பொருளாதாரத்தை என்ன செய்வது என்ற பார்வையே அரசமைப்புச்சட்டத்திற்கு இல்லை.

சட்டவரைவுக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய புரட்சியாளர் அம்பேத்கர், 'அதை அவர்கள் அப்படியே விட்டு விட்டார்கள்' என்கிறார். ஒன்றை அது இருந்த நிலையிலேயே விட்டுவிடுவது என்பது, அது எங்கு இருந்ததோ, அங்கேயே இருக்கச் செய்வதுதான். காலனியாட்சி கால இந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பின் பெரும்பகுதி, பார்ப்பன மற்றும் மேலடுக்குச் சாதியினைச் சேர்ந்த மற்றும் பண்ணை நிலவுடைமையாளர்களின் பிடியில் இருந்தது. எந்திரமயமாக்கலின் போதும், நவீன பொருளியல் வாய்ப்புகள் உருவாகியபோதும், பார்ப்பன, மேலடுக்குச் சாதியினரின் பிடி தளரவில்லை. சாதியத்தால் பொருளியல் சுழற்சியிலிருந்து விரட்டப்பட்ட மக்களின் நிலையில் மாற்றம் நிகழவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டமோ, நாடாளுமன்ற ஜனநாயகமோ, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவில்லை. அவர்களுக்கு கிடைத்ததெல்லாம் சொற்பமான ஒதுக்கீடுகள் மட்டுமே!

நாற்பத்திரெண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் 1976 இன் மூலம், அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரை திருத்தம் செய்யப்பட்டது. அத்திருத்தம்தான் இந்தியாவை 'இறையாண்மை சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு' என்கிறது. 'சோசலிசம்' என்ற சொல் அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையாய் சேர்க்கப்பட்டதன் பின்னணி மோசமானது. மக்களாட்சி நெறிமுறைகளை 'அவசரநிலை அறிவிப்பின்' மூலமாக குழிதோண்டிப் புதைத்துவிட்டு, இந்தியாவை சோசலிசக் குடியரசாக அறிவித்தார் இந்திரா காந்தி. இந்திய ஜனநாயகத்தின் மீது தனியொரு நபராக இந்திரா காந்தி நடத்திய தாக்குதல்களை, அடுத்த இதழில் நாம் விரிவாகக் காண்போம். சோவியத் ரஷ்யாவுடன் இணைந்து நின்றபோது, இந்திராகாந்தி கொண்டுவந்த 20 அம்சத்திட்டத்தின்படி, பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். வங்கிகளை நாட்டுடைமை ஆக்கியது போன்ற அவரது நடவடிக்கைகள் நாட்டின் 'பொது பொருளாதாரக் கட்டுமானங்களை' அரசின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தன. பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆனாலும் இந்தியாவை மக்கள் சோசலிச நாடாக சித்தரிக்க இந்திரா காந்தி நடத்திய 'அரசியல் நாடகம்' அது என்பது அடுத்த அய்ந்தாண்டுகளிலேயே மக்களுக்கு விளங்கியது. இந்திராகாந்தியின் சீர்திருத்தங்கள், உண்மையில் சோசலிசத்தை நோக்கி நாட்டை அழைத்துச் சென்றனவா? நமது நாடு 'சோசலிச குடியரசு' தானா?

'சோசலிசம்' என்ற சொல்லுக்கு உற்பத்திக் காரணிகளையும், மூலதனங்களையும், பகிர்மானத்தையும் மக்களின் (அரசின்) பொறுப்பில் வைத்திருப்பது என்று பொருள் கொள்ளலாம். வருமானத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் ஏற்றத் தாழ்வுகளைக் களைவது என்பதை வலியுறுத்துவதுதான் சோசலிசமாகும். ஆனால், இந்தியா அப்பட்டமான முதலாளித்துவ ஜனநாயக நாடாக முரண்பட்டு நிற்பது ஏன்?

- இருள் விலகும்



படிப்பகம்

www.padippakam.com


# முன்பதிவுக்கு முந்துங்கள் !

பெரியாரியல் - தொகுதி 1
பெரியாரியல் - தொகுதி 2

ஆசிரியர் : **வே. ஆனைமுத்து**

**அரிய, புதிய விளம்பரங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது**
**இரண்டு தொகுதிகளும்**

விற்பனை விலை உரு. 200/-
முன்பதிவுக்குக் கடைசி நாள் : 26.4.2006

முன்பதிவு விலை உரு. 125/-
நூல் வெளியீட்டு நாள்: 6.5.2006

**தமிழீழத் தமிழரை, இலங்கை மலையகத் தமிழரை**
**நீங்களும் பாருங்கள், நீங்களும் பேசுங்கள்**

ஆசிரியர் : வே. ஆனைமுத்து

**கூடுதல் விவரங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது**

விற்பனை விலை உரு. 140/-
முன்பதிவுக்குக் கடைசி நாள் : 26.4.2006

முன்பதிவு விலை உரு. 80/-
நூல் வெளியீட்டு நாள்: 6.5.2006

மடல் / பணம் / வங்கிமுறி விடுத்திட முகவரி : வே. ஆனைமுத்து (V. ANAIMUTHU)
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி : 2852 2862 கைபேசி : 94448 - 04980


# குழந்தைகளையும் விட்டுவைக்காத காவல் துறை

**கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசியிலுள்ள ராயர் கல்வி நிலையம் என்ற தனியார் பள்ளியில், 8 ஆம் வகுப்பு படித்து வந்த நாச்சிமுத்து (வயது - 13) என்ற தலித் மாணவன் 7.2.2006 அன்று மர்மமான முறையில் இறந்துள்ளார். தலித் மாணவனின் மர்மச்சாவுக்குக் காரணமானவர்களை கைது செய்யக் கோரியும், விதிமுறைகளை மீறி செயல்படும் இப்பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யக் கோரியும், உரிய மறு நீதி விசாரணை நடத்தக்கோரியும், ஒரே மகனை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு இழப்பீடு நிவாரணமாக, 5 ஏக்கர் நிலம் வழங்கக் கோரியும் - 19.2.2006 அன்று வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் நடந்தது. இதற்காக 'விழுதுகள்' அமைப்பு, காவல் துறையிடம் அனுமதி கோரியிருந்தது. போராட அனுமதி மறுத்த காவல் துறை, அவினாசி வட்டம் முழுவதும் 144 தடை ஆணை பிறப்பித்தது.**



**விழுதுகள் அமைப்புக்கு எதிரான பிரச்சாரத்தையும், அவினாசிக்கு போராட வரும் தலித் மக்களையும் கைது செய்வதாக அனைத்து கிராமங்களிலும் ஒலிபெருக்கி மூலம் காவல் துறையினர் பிரச்சாரம் செய்தனர். இதையும் மீறி நீதி கேட்டுப் போராட அவினாசி வந்த விழுதுகள் செயல்வீரர்களை 300க்கும் மேற்பட்ட போலிசார் கிராமங்களிலேயே வழிமறித்து விரட்டியடித்தனர். தலித் மக்கள் வந்த வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டன. விழுதுகள் அமைப்பாளர் எம். தங்கவேல் மற்றும் குழந்தைகள், பெண்கள், விழுதுகள் செயல் வீரர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர். சிறைபிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள், போலிஸ் வேனில் அழைத்துச் சென்றபோது தாக்கப்பட்டனர். மீண்டும் 24.2.2006 அன்று சிறீராம் என்ற 6 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன், அதே பள்ளியில் மர்மமாக இறந்துள்ளான். இவ்விரண்டு மர்ம சாவுகளுக்கும் விழுதுகள் தொடர்ந்து நீதி கேட்டுப் போராடி வருகிறது.** •



படிப்பகம்

www.padippakam.com

# BABA SAHEB DR. B.R. AMBEDKAR 116TH BIRTHDAY SOUVENIR



- Baba Saheb Dr. B.R. Ambedkar Birth Day Souvenir of 'Periyar Era' to be published on 15.4.2006
- Baba Saheb Dr. B.R. Ambedkar 116th birth day Souvenir of 'Periyar Era' will contain thought provoking articles, poems, historical anecdotes and data in English, Hindi, Tamil and possible regional languages written by eminent writers, thinkers, journalists, judges, politicians and social activists from all parts of the country.
- Rare collection of photographs of Baba Saheb Dr. B.R. Ambedkar in colour on foreign art paper will be included
- 'Periyar Era' is an English Monthly journal published by us for the last 12 years propagating and highlighting the Periyarist, Ambedkarist ideals and messages.

**Mechanical Details** Full Pages Height 24 cm Width 18 cm **The volume** will be a prestigious colourful document of not less than 200 pages with a lot of materials of research and readership value.

## ADVERTISEMENT TARIFF

| | | |
|---|---|---|
| Maplitho Paper | | |
| Multi colour Full page | : | Rs. 5,000 |
| Foreign art paper | | |
| Multi colour full page | : | Rs. 10,000 |
| Wrapper - Multi colour - Foreign art board | | |
| (2nd Page) First Inside Page | : | Rs. 20,000 |
| (3rd Page) Last Inside Page | : | Rs. 20,000 |
| (4th Page) Last outside Page | : | Rs. 30,000 |

### REQUEST / APPEALS

- Kindly send articles to reach the editor 'Periyar Era' by 15.3.06 at the latest. Field workers and activists may approach eminent Ambedkarists for articles in consultation with the editor • Friends, colleagues and well wishers may try to book as many advertisements as possible. Our effort to uphold Ambedkar may have to be placed on a strong foundation by this souvenir effort • Cheques, Drafts, Donations may be sent in the name of 'PERIYAR ERA', Chennai-5

**We earnestly solicit your wholehearted support for this noble venture. - Editor, 'Periyar Era'**

For all details please contact : The Editor 'PERIYAR ERA' (English Monthly Magazine)
19, Murugappa Street, Chepauk, Chennai - 600 005 • Ph. 044 - 2852 2862, Cell : 9444804980

# வீர வணக்கம்



**தமிழகத்தின் சிறந்த மனித உரிமைப் போராளியும், சுற்றுப்புறச் சூழல் ஆர்வலரும், டாக்டர் அம்பேத்கர் மய்ய அறக்கட்டளையின் உறுப்பினராகவும் இருந்து வந்த தோழர் சி. நெடுஞ்செழியன் அவர்கள், 1.3.2006 அன்று இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதழ் அச்சேறும் தருணத்தில் இச்செய்தி கிடைத்ததால், இவருடைய பணிகள் குறித்த விரிவான செய்திகள் அடுத்த இதழில் இடம்பெறும்.**

## புகழ்பெற்ற தலித் மக்களின் முகவரி



இந்த நாட்டின் தொல்குடியினரான தலித் மக்கள், நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறார்கள். ஆங்காங்கே ஒரு தலைமையில், சிறு சிறு குழுக்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அதனால் இவர்கள் சமூக விடுதலையையும், அரசியல் விடுதலையையும் வென்றெடுக்க முடியாமல் போகிறது. இவர்கள் அனைவரையும் ஒரே நேர்க்கோட்டில் இணைத்து, தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து - சமூக விடுதலை, அரசியல் அதிகாரம் பெற பாலமாக ஒரு கருவி தேவைப்படுகிறது.

ஆகவே, தொலைநோக்குப் பார்வையோடு, 'தலித் பிரபலமானவர்களின் முகவரி' என்ற நூல் தொகுப்பை வெளியிட இருக்கிறோம். பிரபலமானவர்கள் தங்கள் ஒப்புதலை அளித்த பிறகே, அவர்கள் பெயர்கள் இந்நூலில் இடம் பெறும். தலித் அமைப்புகள், தலித் அரசியல் கட்சிகள், தன்னார்வக் குழுக்கள், மனித உரிமை இயக்கங்கள், எஸ்.சி./எஸ்.டி. தொழிற்சங்கம் போன்றவற்றின் நிர்வாகிகள், சட்டம், மருத்துவம், பொறியியல், கலை, இலக்கியம், பத்திரிகை, வர்த்தகம், விளையாட்டு போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும் தலித் பிரமுகர்கள் தங்களின் பெயர், படிப்பு, பணி, பொறுப்பு, முகவரி, தொலைபேசி எண் போன்றவற்றைத் தெளிவாக எழுதி, எங்கள் முகவரிக்கு 31.3.2006-க்குள் அனுப்பி, எங்கள் முயற்சிக்கு ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி : ஆணழகன் து. சீனிவாசன்
6, 3ஆவது தெரு, கே.கே. நகர், மணவாள நகர்
திருவள்ளூர் - 602 002 ▪ பேசி : 2764 0423



படிப்பகம்

www.padippakam.com

# M.E.T. கல்வியியல் கல்லூரி
# (B.Ed.) CO - EDUCATION

13/142 - B, மொகல்ஸ் கார்டன், பொய்கை அணை ரோடு
செண்பகராமன்புதூர், குமரி மாவட்டம் - 629 304 • பேசி : 04652 - 571277




M.E.T. கல்வியியல் கல்லூரிக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் அங்கீகாரம் (AFFILIATION) வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

APPROVED BY NCTEF. TN / SEC / SRO / NCTE / 2005 - 2006 / 3815 DATED : 03.11.2005 TAMIL NADU GOVT. N.O.C. G.O. (Ms.) No.13 Dated : 06.01.2006 M.S. University Affiliation Order No : MSU / CD / FA / 2006 Dated : 02.02.2006

## B.Ed. மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

நடப்பு கல்வி ஆண்டு - 2006 (ஜனவரி - டிசம்பர்)

**Chairman**

Cell : 94433 - 41882, 94438 - 45103, Ph : 04652 - 570778

படிப்பகம்

www.padippakam.com

"...புத்தர் அறிவுச் சுதந்திரத்திற்காகவும், சமூக சுதந்திரத்திற்காகவும், பொருளாதாரச் சுதந்திரத்திற்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டார். புத்தர் ஆண்களுக்கிடையில் மட்டும் சமத்துவம் வேண்டுமென்று கூறவில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் சமத்துவம் வேண்டுமென்று கூறினார். புத்தருடைய போதனைகள், மக்களுடைய சமூக வாழ்வில் ஒவ்வோர் அம்சத்தையும் உள்ளடக்கியதாயிற்று. அவருடைய கோட்பாடுகள் நவீனமானவை. புத்தருடைய முக்கிய நோக்கமானது, மனிதர்கள் இறந்த பிறகு 'முக்தி' தருவது குறித்தல்ல; பூமியில் வாழும்போது மனிதர்களுக்கு விடுதலை என்பதாகும். சமத்துவம் என்பதுதான் பவுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். புத்தர் என்னுடைய பேராசான் ஆவார்."

– புரட்சியாளர் அம்பேத்கர்



விடுதலை இயக்க வேர்களும் விழுதுகளும் - 33

■ ஏபி. வள்ளிநாயகம்

கடவுளையும், மதத்தையும் மனிதர்கள்தான் கற்பித்தார்கள். மானுடத் தார்மீகத்தை விரட்டியடித்த ஒரு சின்னக் கும்பல் - தங்களின் ஆதிக்கத்திற்காக அவ்வாறு கற்பித்தது. ஒரு குறிப்பிட்ட சமூக நிலைமையில் அவர்களின் தேவையையும், ஆக்கிரமிப்பையும் நிறைவு செய்வதற்காகவே கடவுளும் - மதமும் திணிக்கப்பட்டன. ஆனால் மதமும், கடவுளும் புகுத்தப்படாத காலம் - சாக்கியர்களின் காலமாக இருந்தது. சாக்கியர்கள் தங்கள் மானுட மதிப்பீட்டை நேர்மையில் இணைத்துக் கொள்ளும் முதிர்ந்த, தேர்ந்த அறபடைப்பாளிகளாகவே விளங்கினர். சாக்கியர்கள், நிச்சயமான உயர்ந்த ஓர் அமைப்பினை நோக்கித் தங்கள் இனக்குழு செல்கிறது என்பதை உறுதி செய்தனர். சாக்கியர்களின் வரலாறு நெடுக, பொருள் முதல்வாதத்தின் பதாகையில் முன்னேற்றம் என்பது பொறிக்கப்பட்டிருந்தது.

சாக்கியர்கள் நாகரிகத்தை வளர்த்தனர். அது கலை - இலக்கியத்தையும், மருத்துவத்தையும், கணிதத்தையும் வளர்த்தது. அறிவு என்பது சாக்கியர்களைப் பொறுத்தவரை, இயற்கையைப் புரிந்து கொள்வதுதான். ஆனால், கருத்து முதல்வாதிகளைப் பொறுத்தவரை அறிவு என்பது பரம்பொருளைப் புரிந்து கொள்வதே. இது இயற்கை உண்மைக்கு மாறானது; மாயையானது. உண்மையானதும் நிரந்தரமானதும் இதை உணர்தல் மட்டும்தான். சாக்கியர்களின் காலம், தத்துவத் தளிர் நடையின் அற்புதமான ஆகர்சிக்கும் தன்மை கொண்ட காலமாக இருந்தது. தத்துவம் - கோட்பாடு ரீதியில் விசயங்களை ஆழமாக ஆராய்ந்து அறிவியல் கண்ணோட்டத்தில் தங்களுடைய



படிப்பகம்

www.padippakam.com

சொந்த அறிவு நிலையை உயர்த்திக் கொண்டார்கள். சமகால வரலாற்று உணர்வு, கருத்தியல் வரலாற்றை நிர்ண யிக்கும் சக்திகளின் திசைவழி ஆகியவை பற்றிய தெளிவுடன் இயங்கக் கடமைப் பட்டிருந்தார்கள்.

மானுடத்திற்கு அறம் உன்னதமானது. அதன் உயரத்திற்குமேல், உயரம்கூடிய உன்னதம் மிக்க வேறெதுவுமில்லை. அறம் முன்னிலைப்படுத்தப்படுவதும், அதை தொழிற்படுத்துவதும் மனித மாண்புகளுக்காகத்தான். சாக்கியர்களுக்கு கடந்த கால சுவாசத்திற்கும் நிகழ் கால சுவாசத்திற்கும் நிகழ்ச்சி நிரலாக அறமே இருந்தது. அவர்களின் மானுட அர்த்தம் நோக்கிய முன்னெடுப்பில் லோகாயதம், சாங்கியம் போன்றவைகளே அணிவகுத்திருந்தன. சாக்கியர்கள் தேர்வுக்குரிய தத்துவத் தகுதிகளைக் கொண்டவர்கள் என்பதால், தங்களுக்குள் மனிதாம்சத்தையே வரவேற்கும் திறன் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் மூலாம்பரத் தத்துவ மொழியின் சாயலும் தனித்தன்மையும் - மேலும் வளர்ச்சி நிலைக்கு வந்து சேரும் விதத்தில் பவுத்தம் தத்துவமயமாக்கம் ஆனது.

தத்துவங்களில் முன் வரிசையில் நிற்பது பவுத்தம்தான். கிரேக்கத்தின் மிக மூத்த எபிகுரஸ் தத்துவம் தொடங்கி, உலக அளவிலான தத்துவ இயலைச்சற்று ஆழ்ந்து பார்த்தோமானால், பவுத்த தத்துவ இயல் மிகவும் ஆழமான, அகலமான, அற்புதமான தத்துவ நெறியைக் கொண்டிருப்பதை அறிய முடியும். லோகாயதம், சாங்கியம் அது சார்ந்த தத்துவ இயல்களைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால், அனேகமாக பொருள் முதல்வாதம் பேசும் தத்துவங்களில்கூட, கருத்து முதல்வாதம் இலைமறைக்காயாக இருப்பது தெரியவரும். பொதுவுடைமையின் ஆசான்களான காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் மார்க்சியம் இதில் விதி விலக்கு. சாக்கியர்கள், ஒரு தலைமுறையிடமிருந்து இன்னொரு தலைமுறைக்கு - தங்கள் தத்துவ அனுபவங்களைத் தொடருதல் என்பது நிகழ்ந்தே வந்திருக்கிறது. அனுபவங்களைத் தங்கள் உடல் வெளியிலும், மன வெளியிலும் தேக்கி வைத்ததின் வீரியமே - பவுத்தத்தில் தங்களைக் கரைத்துக் கொண்டதற்கு ஏதுவாகிப் போனது. அவர்களது நிலவெளிக்கான மானுடவியலான பவுத்தம், அவர்களின் பாரம்பரியம் சார்ந்துதான் உதயமானது.

## மானுடத்தின் நேர்மறையும் - எதிர்மறையும்

| | சாக்கியம் (நேர்மறை) | ஆரியம் (எதிர்மறை) |
|---|---|---|
| 1. | புத்தம், தம்மம், சங்கம் என்ற சமூக ஜனநாயகக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது. | பார்ப்பனியம் - இறைவன், பார்ப்பனன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற செங்குத்து அடுக்குமுறையைக் கொண்ட பிறவிப் பேதத்தை அடிப்படையாகக் கொண்டது. |
| 2. | மனிதர்களின் மனத்தெளிவு, அவர்களின் உயர்விற்கு அடிப்படையானது. | இறையச்சம் - இறைவழிபாடு மனிதர்களுக்கு உயர்வானது. |
| 3. | சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் அடிப்படைத் தத்துவங்கள். | உலகைப் படைப்பது, காப்பது, அழிப்பது இறைவனின் அம்சம். ஏற்றத் தாழ்வே அடிப்படையானத் தத்துவம். |
| 4. | மறுபிறவி, ஆத்மா, மோட்சம் - நரகம் போன்ற கற்பனைகளுக்கு இடமில்லை. | ஆத்மா அழியாதது. இறையச்சம் இல்லா வாழ்க்கை மறுபிறவியைத் தருகிறது. இறையச்சம் உள்ள வாழ்க்கை, சொர்க்கத்தில் இறைவனிடம் அடைக்கலம் ஆகிறது. |
| 5. | மனிதரின் வாழ்விற்கும் தாழ்விற்கும் அவர் ஆற்றும் செயல்களும், அவரவர் அமைத்துக் கொள்ளும் சூழலும் முழுக்காரணமாக அமைகிறது. | மனித வாழ்வின் லட்சியம் வேதங்கள், புராண, இதிகாசங்கள், மநுதர்மங்கள் ஆகிய விதிகளின்படி, இறைவனைத் - துதிபாடுதல் மற்றும் ஏற்று வாழ்தல். |
| 6. | சக மனிதரின் துன்பத்திற்குத் தன்னாலான துயர் நீக்கும் வழிமுறைகளை, உதவிகளை செய்ய வேண்டியது அவசியமாகும். | மனிதரின் நிகழ்காலத் துன்பத்திற்குக் காரணம், அவரவர் முற்பிறவியில் செய்த பாவம் - புண்ணியம் ஆகியவையே. எனவே, இப்பிறவித் துயரை இறைவனிடம் கெஞ்சுதல் மூலம் மட்டுப்படுத்திக் கொள்ளலாம். |
| 7. | ஒவ்வொரு செயலுக்கும் ஓர் எதிர்வினை உண்டு. | மனிதரின் செயலுக்கு இறைவன் தீர்ப்பு வழங்குவான். |
| 8. | மனிதருக்கு பொருளீட்ட, கருத்து வெளியிட, சுயமரியாதை வாழ்க்கை வாழ உரிமை உண்டு. | இறைவனின் படைப்புக்கு தகுந்தாற் போல் வாழ்வியல் வளம் நிர்ணயிக்கப் படும். இறைவனின் கருணையே மனிதரின் தகுதியை முடிவு செய்யும். |
| 9. | மனிதரின் உழைப்பு, எண்ணங்கள் மனிதரின் வளர்ச்சிக்கு ஆதாரமானவை. | இறைவழிபாடும் ஆகம விதிகளும் மனிதரின் வளர்ச்சியை இறுதி செய்கின்றன. |
| 10. | மனிதர் சமூகத்திலிருந்து கிளைத்தவர் என்ற அறிவியல் கோட்பாடு, பவுத்தத்துடன் ஒன்றிப் போகிறது. | மனிதரைப் படைத்தவன் இறைவன் என்ற கோட்பாடு, அறிவியல் கோட்பாட்டை நிராகரிக்கிறது. |
| 11. | ஆண் - பெண் பேதம், வர்க்கப் பேதம், சாதி பேதம் இங்கு இல்லை. | ஆண் - பெண் பேதம், சாதி - வர்க்க - வர்ண பேதம் அடிப்படைக் கூறுகள். |
| 12. | பொருள் முதல்வாதம். சமூக அறிவியல். | கருத்து முதல்வாதம். சமூக மூடநம்பிக்கை. |
| 13. | மானுடத்தின் அறிவு, அன்பு, உண்மை அழகூட்டும் மார்க்கம். | மனிதரை ஒதுக்குவது - ஒடுக்குவது - ஒதுங்குவது அடிப்படையான செயல்பாடுகள். ஒரு வர்ணம் சுகம் காண, ஏனைய மக்களிடையே பிரித்தாளும் சூழ்ச்சி கொண்ட ஓர் கொடிய மதம். |



படிப்பகம்


www.padippakam.com

சாக்கிய இனக்குழு கட்டுமானத்தின் வெட்டவெளிச்சமான பவுத்தத்தின் தாயும் - தந்தையுமானவர் புத்தர். மானுட வரலாற்றின் புகழ்மிக்க பக்கங்களைப் புரட்டுகின்றபோது, மகத்துவமிக்க கம்பீரத்தோடு நம்முன் புத்தர் வருகிறார். கி.மு. 6 - 5 நூற்றாண்டுகளில் கால் வைத்து வாழ்ந்தவர்தான் புத்தர். இத்துணைக்கண்டம் முழுவதும் - ஆசியாவிலும் ஏன் இந்த மானுட உலகம் முழுவதும் பரவிய ஓர் இயக்கத்தின் - தத்துவத்தின் தலைசிறந்த ஞானியாக விளங்கியவர் புத்தர்.

வரலாற்றில் இம்மாதிரியான ஓர் இயக்கம், மானுடவியலின் அடிப்படையில் வேறு எங்கும் - என்றும் காணப்பட்டதில்லை. புத்தத் தத்துவம் அல்லது பவுத்தம், தொடக்க காலத்தில் உலகத்தை அணுகிய முறை - சாக்கிய இனக்குழு மக்கள் அத்தத்துவ இயக்கத்திற்கு அளித்த மதிப்பு; அதன் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தையும் இன்றைக்கு பவுத்தக் கோட்பாடுகள் என்று சொல்லப்படும் கருத்துகளை - காரியங்களை வைத்து மதிப்பிடவே கூடாது. பவுத்தம் என்று அர்த்தப்படுவதற்கும் ஆரம்ப காலத்தில் இருந்ததற்கும், ஒட்டும் உறவும் இல்லை என்று கூறினாலும் அது மிகையாகாது. பவுத்தத்தை பார்ப்பனியத்திற்கு வழங்குவதான நிலை, பார்ப்பன - பார்ப்பனிய ஊடுருவலால் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பவுத்தத் தெறிப்பு இன்னும் சாக்கிய இனக் குழுக்களின் வாரிசுகளாக வீறு பெற்றிருக்கும் தலித் மக்களிடம் தங்கியுள்ளது. தலித் மக்களின் மனங்களில் இருக்கும் படிமம் பவுத்தமே ஆகும். பவுத்தத்தை அபூர்வமான மானுட சக்தியாகவும், புதிய உயிராகவும் நிரப்பிக் கொள்ள வேண்டிய கடமையே தலித் மக்களுக்கு காத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தர், இம்மண்ணின் பூர்வ குடியான சாக்கிய இனக்குழுவைச் சேர்ந்தவர். சாக்கியக் குடியில் தனியுரிமை - தனியுடைமை இல்லை. புத்தருடைய உள்ளத்தில் நிறைந்திருக்கும் கொள்கையும் அதுவே. புத்தர், தன் இனக்குழு சமுதாயத்தின் வழிநின்று மானிடர் அனைவரும் சமம் என்பதைக் கொண்டார். அவருடைய காலகட்டத்தில் இருந்தவர்களுக்கும் (சாக்கியர்களுக்கும்) வந்தேறியவர்களுக்குமான (பார்ப்பனர்களுக்கும்) தோன்றிய முரண்பாடுகளும் மோதல்களும் - அவருடைய உள்ளத்தில் பிரதிபலித்ததின் எதிரொலிதான் பவுத்தம்.

அன்றைய சாக்கியப் பழங்குடியரசுகள் பல்வேறு கணங்களின் (குலங்களின்) தொகுப்புகளாக விளங்கின. ஒவ்வொரு கணத்திற்கும் ஒரு தலைவர் இருந்த போதிலும், குடியரசின் பொதுத் தலைவர் சுழற்சி முறையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்ந்தெடுக்கப்படுவார். கணத் தலைவர்களில் ஒருவர்




இவ்வாறு தேர்வு செய்யப்படுவார். தவிர்க்க முடியாமல் போர் என்றால் அனைவரும் ஆயுதம் தரிக்கக்கூடிய நிலை இருந்ததேயொழிய, போருக்கென தனியான ராணுவ அமைப்போ, இனக்குழு நிர்வாகத்திற்கென பிரபுத்துவ தலைமையோ இல்லை. நிர்வாகம் மற்றும் வழக்கு விசாரணைகள் முதலியன 'சந்தாகாரம்' எனப்படும் பொது அவையில் விவாதித்தே முடிவெடுக்கப்பட்டது. சாக்கியப் பழங்குடியினரின் இத்தகைய பொது அவை ஒன்றிற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் புத்தரின் தந்தை சுத்தோதனர்.

சாக்கிய இனக்குழுச் சமுதாயம் சமத்துவம் மிக்கவையாகவும், தனியுரிமை - தனியுடைமை வேட்கை அறியாததாகவும், இனக்குழு மக்களின் கருத்து ஒருமிப்பு அடிப்படையில் செயலாற்றக்கூடிய புராதனச் சமூக ஜனநாயகம் கொண்டதாகவும் விளங்கியது. சுரண்டலின் மூலமான சொத்துகளையும், அவமதிப்பின் மூலமான ஏற்றத் தாழ்வுகளையும் நிலைநிறுத்தக் கூடிய கருத்துகளும் மதிப்பீடுகளும் எதுவும் இல்லாதவையாகவும் விளங்கின. சாக்கியர்களின் இனக்குழு சமூக அமைப்பு, புராதனப் பொதுவுரிமை - பொதுவுடைமைச் சமூகங்களாகவே விளங்கியது.

மக்களுக்கான தலைமையும், வழிமுறைகளும், வெளிப்பாட்டு முறையும் - பார்ப்பனர்களுக்கும் சாக்கியர்களுக்கும் முற்றிலும் வேறுவேறானவை. பார்ப்பன மரபு தலைவர்களையும், சாக்கிய மரபு தலைவர்களையும் ஒருபோதும் பொதுமைப் படுத்திவிட முடியாது. பார்ப்பன மரபில் போரைத் தலைமையேற்று வழி நடத்திச் செல்வது அரசனின் முதற்கடமையாகும். அரசன் இல்லாதவர்கள் போரில் வெற்றி பெற இயலாது; எதிரிகளை (சாக்கியர்களை) வெல்ல முடியாது. பார்ப்பனிய அய்தீகத்தின்படி, ஒருவன் அரசனாக அங்கீகாரம் பெறுவதற்கு கடவுளின் இசைவு வேண்டும். எல்லாம் வல்ல கடவுளே அரசனுக்கு மூலமானவன். அரசன் மக்களுக்குச் சமமானவன் அல்ல. மக்களுக்கான கருத்தியல் அடிப்படையில் செயல்பட வேண்டிய எவ்வித நிர்பந்தமும் இல்லாதவன். அரசன் என்பவன் பார்ப்பன வேத மதத்தை நிலை நிறுத்தக்கூடியவன். பார்ப்பனிய மநுதர்ம சாத்திரங்களின்படி ஆட்சி நடத்தக் கடமைப்பட்டவன்.

சமத்துவமும், புராதனச் சமூக ஜனநாயகமும் கூடிய பொதுவுரிமை - பொதுவுடைமை இனக்குழு குடியரசே சாக்கியர்களின் குடியரசு ஆகும். மக்களின் தலைவர் என்பவர் கண விரும்பி / குல விரும்பி - இனக்குழுத் தோழர் ஆவார். தேர்ந்தெடுக்கப்பட்ட இனக் குழுவின் தலைவர் 'ராஜா' 'மன்னர்' என அழைக்கப்பட்டாலும், பார்ப்பனிய மரபு முடியரசுக்குரிய அதிகாரங்கள், ஆடம்பரங்கள், பரம்பரை வாரிசுரிமைகள் எதுவும் சாக்கிய மன்னருக்குக் கிடையாது. இத்தகைய மக்கள் அரசியல் மாண்பில் கரைந்த சாக்கிய இனக்குழு



படிப்பகம்

www.padippakam.com

விற்கு, சுழல்முறையில் தலைவர் பதவிக்கு வந்த சுத்தோதனர், மாயாதேவியைத் தன் துணைவியாக்கிக் கொண்டார். பார்ப்பனர்களின் வரையறைபோல சாக்கிய இனக்குழுக்களின் அரசு என்பது கட்டமைக்கப்படவில்லை. அரசின் தலைவர் என்பவர் கடவுளுடன் முடிச்சிப் போடக்கூடியவர் அல்லர். அவர் இனக்குழுவின் ஏகோபித்த ஒத்திசைவுடன் மக்கட்பணிக்கு அமர்த்தப்படுபவர். அவருக்கு வழிகாட்ட சாக்கிய நெறிமுறைகள் இருந்தன. இனக்குழுவின் கருத்தொருமிப்பின் அடிப்படையிலேயே செயல் முறைமைகள் மிளிர்ந்தன. தலைவனுக்கென்று தனிமரியாதையும் தனித்தொரு வாழ்வும் - வளமும் சாக்கிய அரசியலில் கிடையாது. சாக்கிய இனக்குழு இயல்பு வாழ்வின் சமத்துவ அறமாண்புகளை வளர்த்தெடுப்பதே - தலைவரின் முதலும் கடைசியுமானப் பணியாகும்.

இத்துணைக் கண்டத்தின் வடகிழக்கு மூலையில் இருந்த தேசம் சாக்கியர் இனக்குழு தேசமாகும். விவசாய இனக்குழுக்களைக் கொண்ட இத்தேசத்தின் தலைநகரமாக விளங்கியது கபிலவஸ்து ஆகும். சாக்கிய இனக்குழுவின் முன்னோடியான கபிலரை நினைவு கூர்ந்த கபில வஸ்துவின் தலைவரும் - தலைவியும் ஆன சுத்தோதனர் - மாயா தேவி இணையருக்குகோதமபுத்தர், கி.மு. 563 ஆம் ஆண்டு வைசாக பவுர்ணமி நாளில் பிறந்தார். சித்தார்த்தரின் பிறந்த நாள், அனைத்துச் சாக்கிய இனமக்களாலும் கொண்டாடப்பட்டது. சாக்கியப் பழங்குடியின் தலைநகரமான கபிலவஸ்து, ரோகிணி ஆற்றங்கரையிலிருந்த நகரமாகும். சாக்கியர்களின் கருத்துப் பரிமாற்ற கபிலபுரமாக அது விளங்கியதால், அந்நகரில் கோதமர் பிறந்த செய்தி வட புலத்தில் சாக்கிய உலகம் முழுவதும் ஆனந்தமாய் எதிரொலித்தது. ●

- தொடரும்

# தனித்துவம் வாய்ந்த அறிஞர்

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியப் பதிவுகளில், தேவநேயப் பாவாணரின் பெயர் முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் 1902 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7 ஆம் நாள் சங்கரன் கோயில் அருகேயுள்ள பெரும்புதூரில் பிறந்தார். அவரது பெற்றோர் ஞானமுத்து - பரிபூரணம் இணையர் ஆவர். அவர்கள் அவருக்குதேவநேசர் எனப் பெயரிட்டனர். ஆம்பூரிலும், பாளையங்கோட்டையில் உள்ள சி.எம்.எஸ். பள்ளியிலும் பள்ளிப் படிப்பை முடித்தார். மிக இளம் வயதிலேயே தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமை பெற்று, அவற்றில் கவியும் இயற்றத் தொடங்கினார்.

1919 முதல் 1921 வரை சியோன்மலை எனும் ஊரில் உள்ள பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவரது திறன்களை உணர்ந்த தமிழ்ப் பண்டிதர் மாசிலாமணி, அவருக்கு 'தேவநேசக் கவிவாணன்' எனும் பட்டத்தை அளித்தார். இதுவே பின்னர் 'பாவாணர்' என செழுமைப் பெற்றது. 1924 ஆம் ஆண்டில் மதுரை தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் இவர் மட்டுமே தேர்ச்சி பெற்றார். பின்னர் 1928 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தின் புலவர் (பி.ஓ.எல்) தேர்விலும் வெற்றி பெற்றார். 1952 ஆம் ஆண்டு தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். பின்னர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் திராவிட மொழிகளில் ஆய்வு செய்வதற்காக, இளநிலை ஆசிரியராக சேர்ந்தார். 1974 இல் இலக்கியத் தமிழ் வேர்ச்சொல் அகரமுதலி தயாரிப்பிற்கு இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவ்வகரமுதலி, கலைக் களஞ்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வேர்ச்சொல் அகரமுதலியாகும். தமிழின் வளமையையும் பழமையையும் உள்ளடக்கிய - ஒரு முழுமையான தமிழ் வேர்ச் சொல் அகரமுதலியை உருவாக்க வேண்டும் என்பதே பாவாணரின் குறிக்கோள்.




அம்மாதிரியான ஓர் அகரமுதலியை அவர் தொகுக்கவும் செய்தார். அகரமுதலியின் பன்முகப் பயன்களை வலியுறுத்திய அவர், வேர்ச் சொல் நுட்பங்களின் அடிப்படையில் தமிழ் மொழியை நிலைப்படுத்த வேண்டும் என நினைத்தார்.

அய்ம்பது ஆண்டுகளாக அவர் நடத்திய மொழியியல் ஆய்வுகளின் விளைவாக, தலைசிறந்த படைப்புகள் கிடைத்தன. அவற்றுள் 'ஒப்பியல் மொழி' நூல், 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் 1964 முதல் 1980 வரை தொடர்ந்து வெளிவந்த 'வேர்ச்சொல் கட்டுரைகள்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. அவர் எல்லா மொழிகளும் ஒரே மொழியிலிருந்து பிறந்தவையே என்பதில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார்.

மொழியியல் ஆய்வுகளில் மிகவும் மூத்தவரான பாவாணர், இலக்கியத் தமிழில் மட்டுமல்லாது வட்டார மொழியிலும் தேர்ந்தவராக இருந்தார். அவர் உருவாக்கிய பல தூய தமிழ்ச் சொற்கள், இன்று பேச்சு வழக்கில் இயல்பாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தனித்துவம் வாய்ந்த ஓர் அறிஞராக, சார்பற்று, துணிச்சலாக நிலவி வந்த தத்துவங்களைக் கேள்விக்குள்ளாக்கினார். தமிழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ் அகரமுதலி மீதான விமர்சன ஆய்வு (ஆங்கிலத்தில்), வடமொழி வரலாறு, திருக்குறளில் தமிழ்ப் பண்பாடு - உரை போன்றவை அவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை.

அவர் எழுதியுள்ள 35க்கும் மேற்பட்ட நூல்களில் பல வகையான செய்திகளும் அடங்கியுள்ளன. பாவாணர், வெண்பா தொகுப்பு உட்படப் பல குறிப்பிடத்தக்க பாக்களையும் இயற்றியுள்ளார். அவர் இசையிலும் - குரலிசை, கருவி இசை இரண்டிலும் தேர்ச்சிப் பெற்றவராக விளங்கினார். இசைப்பாடல்கள் குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார்.

1979 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு அவருக்கு 'செந்தமிழ்ச் செல்வர்' பட்டம் அளித்தது. அவர் 1981 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தாலும், அவர் விட்டுச் சென்றவை இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிடுவதில் அஞ்சல் துறை பெருமிதம் கொள்கிறது. ●






படிப்பகம்

www.padippakam.com

■ பூவிழியன்

# அத்துமீறுவது எப்போது?

ஓர் உயிரைப் படுகொலை செய்வதைவிட, அதை சித்திரவதை செய்வது பல நூறு படுகொலைகளுக்கு ஒப்பானது. ஒடுக்கப்பட்ட சேரி மக்களின் உழைப்பைச் சுரண்டுவதற்காக அவர்களை அடிமைகளாய் நடத்துவது, வன்கொடுமை வடிவத்தின் உச்சநிலையே. நாகை மாவட்டம், குன்னம் பஞ்சாயத்திற்குட்பட்ட கிராமம் பெரம்பூர். இக்கிராமத்திலிருந்து விழுப்புரம் மாவட்டம் கொத்தாம்பாக்கம் கிராமத்திற்கு செங்கல் சூளை வேலைக்குச் சென்ற சேரி மக்கள், சாதி வெறிபிடித்த தியாகராஜ கவுண்டரால் கொத்தடிமையாக நடத்தப் பட்டுள்ளனர்.

''ஏண்டா மற்ற இரண்டு குடும்பமும் வேலைக்கு வரவில்லை? நீங்கள் தான் அவர்களை கேரளாவிற்கு அனுப்பினீர்களா? பிச்சைக்கார பறப் பயல்களா, என்று அடித்தார்கள். பிறகு ஒரு வீட்டில் இரவு முழுவதும் வைத்து பூட்டி விட்டார்கள். மறுநாள் விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கொத்தாம்பாக்கம் சூளைக்கு கல் அறுக்க அழைத்துச் சென்று விட்டார்கள். அழைத்துச் சென்ற அன்றைய நாளிலிருந்து எங்களை நினைக்கின்ற போதெல்லாம் அடிப்பதும், உதைப்பதும் அவர்களுக்குப் பொழுதுபோக்கானது.



பேபி தன் குழந்தையுடன், அருள்மொழி, சுப்ரமணியன், ராசேந்திரன்

மேலும், இந்த அடிக்குப் பயந்து வேலை செய்யாமல் தப்பித்து ஓடிவிடுவோம் என்பதற்காக, இரவு நேரங்களில் புளியமரத்தில் சங்கிலியால் கட்டிப்போடுவதையும், மரக் கிளைகளால் அடிப்பதையும் தொடர் நடவடிக்கையாக வைத்திருந்தார்கள். இதனால் எங்கள் குழுவில் இருந்த ராஜேந்திரன் என்பவர், 5 நாட்கள் வேலை செய்து விட்டு அடி பொறுக்க முடியாமல் யாருக்கும் தெரியாமல் எப்படியோ தப்பித்து ஊருக்குச் சென்றுவிட்டார்.

மேலும், ஒவ்வொரு நாளும் வேலை முடிந்தவுடன் கூலியாக ரூ. 2 மட்டுமே கொடுப்பார்கள். ஒரு நாள், எங்களைக் கட்டிப்போட்டு அடித்து விட்டு, சீர்காழியில் உள்ள ராஜேந்திரன் வீட்டிற்கு போன் செய்து ரூ. 40,000 கொடுத்து இவர்களை அழைத்துச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். இதே போல, 1.2.2006 அன்று இரவு 6.30 மணி அளவில் என்னைக் கட்டிப்போடுவதற்கு முன்பு சாப்பிட கஞ்சி கொடுத்தார்கள். சாப்பிடுகிற அந்த நேரத்தில் ஆட்கள் இல்லாததைப் பயன்படுத்திக் கொண்டு உயிரைக் கையில் பிடித்தபடியே தப்பித்து, எனது ஊரான சென்னியநல்லூருக்கு வந்து சேர்ந்தேன்'' என்று 15 நாட்களாக தொடர் வன்முறைகளுக்கும், அடி உதைகளுக்கும் உட்படுத்தப்பட்ட தலித் தொழிலாளிகளிலிருந்து தப்பித்து வந்த சுப்ரமணியன், தங்கள் மீதான ஒடுக்குமுறைகளைப் பற்றி கண்ணீர் மல்க சொல்லி முடித்தார்.



பா. ரவிச்சந்திரன்

இத்தகவலை அறிந்த தலித் விடுதலைக்கான மனித உரிமை அமைப்பின் மாநில அமைப்பாளர் பா. ரவிச்சந்திரன், தன் அலுவலகத்தில் இருந்து ஒரு மீட்புக் குழுவை 3.2.2006 அன்று இரவே தயார் செய்தார். தப்பித்து வந்த ராஜேந்திரன், சுப்ரமணியன் ஆகியோரை அழைத்துக் கொண்டு மறுநாள் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் இது தொடர்பான அரசு அதிகாரிகளை சந்தித்து, புகார் மனுவைக் கொடுத்தனர். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு அருள்மொழி, அவரது மனைவி பேபி, குழந்தை மணிகண்டன் ஆகியோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

''தற்போது மீட்கப்பட்ட இம்மக்களின் வாழ்நிலையை கருத்தில் கொண்டு, தமிழ் நாடு கொத்தடிமை விடுப்புச் சட்டம் 1976 இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, அவர்களுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை அரசின் வாயிலாக மேற்கொள்கின்ற நடவடிக்கைகளிலும், எமது அமைப்பு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், கொத்தடிமையாக்கிய சாதி வெறி பிடித்த தியாகராஜனை கைது செய்வதற்கும், அவருடைய சொத்துகளை அரசு முடக்குவதற்குமான நடவடிக்கையில் இந்த அமைப்பு தொடர்ந்து ஈடுபடும்'' என்றார் பா. ரவிச்சந்திரன்.

இது போன்ற கொத்தடிமையாக்கக்கூடிய நடவடிக்கைகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டுமென்றால், சட்டத்தின் தண்டனையை வலுவாக்க வேண்டும். அத்துடன், குற்றவாளிகளைப் பிணையில் வெளிவராத அளவிற்கு தண்டனை வழங்க வேண்டும். மேலும், கொத்தடிமையாக்குவதற்கு வாய்ப்புகள் எந்தெந்த தொழில்களில் இருக்கின்றதோ, அந்தத் தொழில்களை அடையாளம் கண்டு, அவற்றை ஒழிக்க அரசு முயல வேண்டும். சாதி வெறியர்களின் அடக்குமுறைகளுக்கு ஆட்படுகின்ற ஒடுக்கப்பட்ட சேரி மக்கள், அடக்குமுறையிலிருந்து அத்துமீறுகின்ற பொழுதுதான், அவர்களின் உழைப்பு மதிக்கப்படும்; அவர்களுடைய விடுதலையும் உறுதி செய்யப்படும். ஆனால், அடக்கப்பட்ட மக்கள் அத்துமீறுவது எப்போது? ●



படிப்பகம்

www.padippakam.com

# மிரட்டும் பெரியார்!

தன்மானத் தலைவர் தந்தை பெரியார் மீதான அவதூறுகளை, எதிரிகளைக் காட்டிலும், அவர்களின் ஏவலாட்களே திட்டமிட்டு, ஒரு தொழிலாகவே செய்து வருகின்றனர். இவர்கள் முன்வைக்கும் பொய்களை நாம் தொடர்ந்து அம்பலப்படுத்தினாலும், அதற்கு எவ்வித மறுப்பையும் தெரிவிக்காமல், ஆங்கில ஏடுகளில் இந்தக் கட்டுக் கதைகளை வெட்கமின்றிப் பரப்பி வருகின்றனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, 'புதிய கோடங்கி' யில் வெளிவந்த தனது கட்டுரையை, ரவிக்குமார் Seminar - பிப்ரவரி 2006 இதழில் வெளியிட்டுள்ளார். பெரியார் கொள்கைகள், வட இந்தியாவையும் ஆக்கிரமிப்பதைக் கண்டு அஞ்சுகிறார்கள் போலும்!




விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளரும், 'தாய்மண்' இதழின் ஆசிரியருமான தோழர் தொல். திருமாவளவன், பெரியாருக்கு எதிரான சூழ்ச்சிகளைப் புரிந்து கொண்டு, தற்பொழுது தமது உரை வீச்சுகளில் அம்பேத்கர் கருத்துகளுக்கு இணையாகப் பெரியார் கொள்கைகளையும் - முன்னெப்போதைக் காட்டிலும் வீரியத்துடன் முழங்கி வருவது கண்டு, அவதூறுவாதிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். இறுதியில், 'பிராமின் டுடே' இதழில் சரணடைந்துள்ளனர். இவ்விதழில், ரவிக்குமாரின் சிறப்புப் பேட்டி வெளிவந்திருக்கிறது; அதிலும் கட்டுக் கதைகளுக்குப் பஞ்சமில்லை. அவ்வேடு 'பிராமணர்களும் தலித்துகளும்' (அதிலும் தலித்துகள் கீழேதான்) என்றொரு புதிய கூட்டணியை முன்மொழிந்து, தனது சதித் திட்டத்தை அரங்கேற்றியுள்ளது. ராஜாஜியைவிட, எல்லா வகையிலும் ஆயிரம் மடங்கு தனது திறமையால் உயர்ந்து நிற்கும் அம்பேத்கரை, பார்ப்பனர்கள் இனி 'பிராமணராக' ஏற்றுக் கொள்வார்களா? சாதியால் மட்டுமே உயர்ந்த ராஜகோபாலாச்சாரியை, ராஜகோபால் பறையராக அங்கீகரிப்பார்களா? ஏவலாட்களும் பதில் சொல்ல வேண்டும்.

அடுத்து, கீழ்வெண்மணி படுகொலை குறித்து பெரியார் அமைதி காத்ததாக ஒரு செய்தி திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது. அண்மையில் வெண்மணி குறித்து வெளிவந்த 'ராமய்யாவின் குடிசை' ஆவணத் திரைப்படத்திலும் பெரியார் விடுத்த அறிக்கை, இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. எனவே, இவ்விதழிலும் அடுத்த இதழிலும் - 'பெரியார் பேசுகிறார்' பகுதியில் இவ்வறிக்கை இடம் பெறுகிறது. ●

## உரிமை விளக்கம்

(விதி 3 காண்க)

| | | |
|---|---|---|
| 1. இதழின் பெயர் | : | 'தலித் முரசு' |
| 2. வெளியிடப்படும் காலம் | : | திங்களிதழ் |
| 3. வெளியிடுபவர் பெயர் | : | புனித பாண்டியன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 203, ஜெயம் பிரிவு<br>சித்ரா அடுக்ககம்<br>9, சூளைமேடு நெடுஞ்சாலை<br>சென்னை - 600 094 |
| 4. வெளியிடப்படும் இடம் | : | 203, ஜெயம் பிரிவு<br>சித்ரா அடுக்ககம்<br>9, சூளைமேடு நெடுஞ்சாலை<br>சென்னை - 600 094 |
| 5. அச்சிடுபவர் | : | ஒய்.எஸ். ராஜ் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 46, விசாகத் தோட்டம்<br>சைதாப்பேட்டை<br>சென்னை - 600 015 |
| 6. அச்சகத்தின் பெயர் | : | அரிஜன முழக்கம் |
| 7. ஆசிரியர் பெயர் | : | புனித பாண்டியன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 203, ஜெயம் பிரிவு<br>சித்ரா அடுக்ககம்<br>9, சூளைமேடு நெடுஞ்சாலை<br>சென்னை - 600 094 |
| 8. உரிமையாளர் | : | டாக்டர் அம்பேத்கர் மய்யம் |

மேற்கூறிய அனைத்துத் தகவல்களும் உண்மை என உறுதி அளிக்கிறேன்.

(ஒ-ம்) புனித பாண்டியன்
கையொப்பம்

தலித்திய முன்னோடி
கே. டானியலின் ஆறு நாவல்கள்

கே. டானியல் படைப்புகள்




பஞ்சமர் O கோவிந்தன் O அடிமைகள்
கானல் O பஞ்சகோணங்கள் O தண்ணீர்

வல்லிய தாளில், கெட்டிக் கட்டில், நேர்த்திமிகு அச்சில்.
பக்கம்: 1144, விலை: ரூ. 640. வி.பி.பி. உண்டு
அஞ்சலில் பெற தொலைபேசியிலும் உறுதி செய்யலாம்
குறைந்த படிகளே அச்சிடப்பட்டுள்ளன. தேவைக்கு முந்துங்கள்

வெளியீடு
அடையாளம்
1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310.
04332 273444 email:admin@adaiyalam.com



படிப்பகம்

www.padippakam.com

# மிதந்து வரும் அபாயம்



■ அ. முத்துக்கிருஷ்ணன்

இரவு பகலாக அந்தக் கப்பலின் மீது விமானங்கள் இறங்குவதும், அங்கிருந்து ஏதோ சரக்குகளைச் சுமந்து புறப்படுவதுமாக இருந்தது. மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டனர் - அந்தக் கப்பலின் மாலுமிகளும், அதிகாரிகளும். அவர்கள் நாட்டு விமானங்கள் மட்டுமின்றி, அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பல நாடுகளைச் சேர்ந்த விமானங்களும் அந்தக் கப்பலின் மீது வந்தமர்ந்து கிளம்பியது. அந்தக் கப்பல் ஏறக்குறைய 50 விமானங்கள் நிறுத்தும் அளவுக்குப் பரப்பளவு கொண்டது. இந்த நடவடிக்கையின் பொழுது, அது அரேபிய வளைகுடாப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது.

பஞ்சத்தின் கோரப்பிடியில் சிக்கித் திணறும் அரேபிய - சகாராப் பாலைப் பகுதி மக்களுக்கு அந்த விமானங்கள் உணவு தானியங்களை ஏற்றிச் சென்றதா? நைரோபி, சோமாலியா நிலப்பரப்பு மக்கள் தங்குவதற்கான துரித இருப்பிடங்கள் அமைப்பதற்கான தளவாடங்களை ஏற்றிச் சென்றதா? இல்லை, ஏதேனும் ஓர் ஆப்பிரிக்க நாட்டில் திடீரெனப் பரவத் தொடங்கிய கொள்ளை நோயைத் தடுப்பதற்கானத் தடுப்பூசி மருந்துகளை ஏற்றிச் செல்லப்பட்டனவா? இப்படியாக நம் எண்ணங்கள் பல தடங்களில் ஓட, மீண்டும் மீண்டும் அதற்கான பதில் 'இல்லை' என்ற ஒற்றைச் சொல் மட்டுமே!

பிறகு அப்படி என்ன மனிதகுல சேவையை அந்த நடவடிக்கை செய்தது? ஜெர்மனியை முற்றாகத் தாக்கி அதைச் செயலிழக்கச் செய்திடவேண்டும்; வரலாற்றில் மீண்டும் அந்த நாடு தலை தூக்கியதாகப் பதிவுகள் ஏற்பட்டு விடக் கூடாது என்ற வன்மம் தலைக்கேறிய பிரான்சின் பிரதமர் ஜார்ஜஸ் கிளெமென்சியேயின் (Georges Clemenceau, 1841 - 1929) பெயர் சூட்டப்பட்ட பிரான்ஸ் கப்பல் படைக்குச் சொந்தமான கப்பல் கிளெமென்சியே. வளைகுடாப் போரில் அமெரிக்காவுக்கு நேசக்கரம் நீட்டி, மனம் திறந்து உதவிய நாடுகளில் ஒன்று பிரான்ஸ்.

> "பிரேசில், கனடா, கஜகஸ்தான், போலந்து, வட அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஜிம்பாப்வே நாடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை, இந்தியா தொடர்ந்து குவித்து வருகிறது. 70-க்கும் மேற்பட்ட கழிவுப் பொருட்களை பல லட்சம் டன்கள், நம் மண்ணில் இறக்குமதி செய்துள்ளோம். இதனால் கடந்த 20 ஆண்டுகளில் இந்தியா தனது 10 சதவிகித மழைக் காடுகளை இழந்துள்ளது."

பத்து லட்சம் மைல்களுக்கு மேல் பயணித்துள்ள கிளெமென்சியே, உலகின் எல்லா பெருங்கடல்களையும் 50 முறை வலம் வந்துள்ளது. 36 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கப்பல் ஓய்வு பெற்றது. போர் முடிந்த பிறகு 1997 வாக்கில் அணு குண்டுகளைச் சுமந்து செல்லும் விமானங்களைக் கையாளுவதற்கான வசதிகள் படைத்த புதிய கப்பல் வரவழைக்கப்பட்டவுடன், கிளெமென்சியே செயலிழந்ததாக அறிவிக்கப்பட்டது. அந்தக் கப்பலில் இருக்கும் ஆபத்தான நச்சுத் தன்மையுடைய கழிவுகளை, எப்படிப் பாதுகாப்பாகக் கையாளுவது என்ற நேர்மையான செயல்முறைகளைப் பற்றி யோசிக்காமல், யார் தலையில் அந்தக் கப்பலைக் கட்டலாம் என்று திட்டம் தீட்டியது பிரான்ஸ் அரசு.


மேற்குலக நாடுகளைப் பொறுத்த வரை, அவர்களின் குப்பைத் தொட்டியாக இருக்கவே இருக்கின்றன மூன்றாம் உலக நாடுகள். எல்லா வசதிகளையும் பணக்கார நாடுகள் அனுபவிக்க, அதன் அவலத்தை ஏழை நாடுகள் சுமக்க வேண்டுமாம்! நம் ஊரை, நாட்டை அவர்களைப் போலவே தூய்மையாக வைத்திருக்க நமக்கு உரிமை இல்லையா? மேலை நாடுகளில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்காகப் போராடினால், அது அங்கு நாட்டுப் பற்றாகக் கருதப்படுகிறது. நம் நாட்டில் அப்படிப் போராடுவோர், 'வளர்ச்சிக்கு எதிரானவர்கள்' என முத்திரை குத்தப்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

கிளெமென்சியே செயலிழந்தால் நமக்கென்ன கவலை? அந்தக் கப்பல் முதலில் துருக்கிக்கும், அடுத்து கிரீஸ் நாட்டுக்கும் அனுப்பப்பட்டது. விழித்துக் கொண்ட அந்த நாட்டு மக்களும், அரசாங் கங்களும், தங்கள் கரைகளை கிளெமென்சியே நெருங்க விடாமல் திருப்பி அனுப்பினர். காரணம், அந்தக் கப்பலில் உள்ள ஏராளமான நச்சுக் கழிவுகள்தான். கிளெமென்சியேவில் ஆஸ்பெஸ்ட்டாஸ், பயன்படுத்தப்பட்ட பெயிண்ட், பழைய நெகிழி, அமோனியா பேட்டரிகள் உள்ளன. இதில் ஆஸ்பெஸ்ட்டாஸ் மிகவும் ஆபத்தான நிலையில் அந்தக் கப்பல் முழுவதும் விரவிக் கிடக்கிறது. இந்தக் கழிவுகள் சூழலை மாசுபடுத்துவது மட்டுமின்றி, பல நிரந்தர பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.



இதுபோன்ற தீவிர நச்சுத்தன்மை கொண்ட கழிவுகளை, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்வது தொடர்பாக, உலக நாடுகள் ஒன்றுகூடி பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டன. அந்த ஒப்பந்தம் 'பேசல் ஒப்பந்தம்' என்று அழைக் கப்படுகிறது. ஒரு நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் அல்லது அவர்களின் தொழிற்சாலைகளிலிருந்து வெளி யேறும் கழிவுகளை, அந்த நாட்டு எல்லைக்குள்ளேயே கையாள வேண்டும். இதைக் கையாள பல அறிவியல் பூர்வ மான நடைமுறைகளும் அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நச்சுக் கழிவுகளை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்வதற்கு பேசல் ஒப்பந்தப்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.


தற்பொழுது கிளெமென்சியேவை பனாமா நாட்டு நிறு வனமான எஸ்.டி.அய்.சி. விலைக்கு வாங்கியுள்ளது. அந்த நிறுவனம் கிளெமென்சியேவை இந்தியாவிலுள்ள குஜராத் கடற்கரையிலுள்ள 'அளங்'கில் வைத்து உடைக்கத் திட்ட மிட்டுள்ளது. கிளெமென்சியேவை 10 லட்சம் யூரோக்களுக்கு எஸ்.டி.அய்.சி. வாங்கியுள்ளது. இந்தக் கப்பலை உடைத்தால் 80 லட்சம் யூரோக்களுக்கு மேல் லாபம் கிடைக்கும்.

கப்பல் உடைக்கும் தொழில் இந்தியா, பங்களாதேசம் மற்றும் சீனாவில் கடந்த பத்தாண்டுகளில் வெகுவாக வளர்ந்து வருகிறது. ஆனால், மனிதர்கள் பணிபுரியக் கூடிய சூழல், இந்தக் கப்பல் உடைக்கும் தொழிலில் இல்லை. இங்கிலாந்தில் தொழிற்சாலைகள் நிர்ணயிக்கப்பட்ட தொடக்க காலங்களில் (20 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி), அங்கு கப்பல் உடைப்புப் பணிகள் நடைபெற்றன. அந்தத் தொழிலைப் பற்றி புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் சார்லஸ் டிக்கன்ஸ் தனது குறிப்பொன்றில் இவ்வாறாகப் பதிவு செய்திருக்கிறார்: ''ஏழைகள் இங்கு பணிபுரிவது, அவர்களின் வாழ்வின் கோரங்கள் நிறைந்த, அவலங்களின் உச்சம். இவர்களின் ரத்தங்களிலிருந்து ஊற்றெடுக்கிறது கப்பல் உடைக்கும் தொழிலின் பூதாகர லாபங்கள். வறுமையில் உழலும் மனிதர் கள் வேறு பிழைப்பின்றி மரணம் தங்களைத் தழுவாமல் இருக்க, இந்தச் சூழ்நிலைகளில் பணிபுரிகிறார்கள். இந்த வறுமை மட்டுமே இந்தத் தொழில் நிலைப்பதற்கான அடிப்படை.''

பல வெளிநாட்டுப் பொறியாளர்கள் 'அளங்' கப்பல் உடைக்கும் தளத்தைப் பார்த்துவிட்டு, அங்கு அடிப்படை வசதிகள்கூட இல்லை; அங்கு நச்சுக் கழிவுகளை நீக்க முடியாது என்ற தங்களின் அறிக்கைகளை விரிவாக அளித்துள்ளனர்.

''நான் கப்பலின் அதிகப்படியான வெப்பம் உள்ள பகுதிகளில் பணிபுரிந்துள்ளேன். வெப்பம் 300 முதல் 400 வரையிலான நீராவி எந்திரங்களை இயக்கும் பொறுப்பு என்னுடையது. என்ஜினிலும், வெப்ப நிர்மாணம் ஆகியவற்றிலும் பணிபுரிந்தேன். இங்குதான் கப்பலில் அதிகப்படியான ஆஸ்பெஸ்ட் டாஸ் இருந்தது. ஆனால், அவர்கள் கப்பலில் ஆஸ்பெஸ்ட் டாஸ் இல்லை என்று எப்படிக் கூற முடியும்? கப்பற்படை அப்படி பொறுப்பற்று பதிலளித்ததில், எனக்கு வியப் பில்லை. எனக்கு கிளெமென்சியேவை என் சட்டைப் பையைப் போல நன்கு தெரியும். கப்பலில் இப்பொழுது 45 டன் ஆஸ் பெஸ்ட்டாஸ் மட்டுமே உள்ளது என்று பிரான்ஸ் அரசாங்கம் கூறிவருவது சுத்தப்பொய்'' - இப்படி ரத்த சாட்சியம் அளிப் பவர், எட்டியென் லீ குயில்சர். இவர் ஆஸ்பெஸ்ட்டாஸ் நோயாளிகள் சங்கத்தின் பிரடன் கிளைத் தலைவர்.

62 வயதாகும் இவர், மிகவும் முதிர்ந்த முகத்தோற்றத் துடன் காணப்படுகிறார். தனது 55ஆவது வயதில்தான் தனக் கிருக்கும் நோயை அவர் அறிந்து கொண்டார். அது, சிகிச்சை அளிக்க முடியாத உடலை அரிக்கும் நோய்; மெல்ல மெல்ல நுரையீரலில் ஆஸ்பெஸ்ட்டாஸ் இழைகள் படிந்து நுரையீரல் புற்றுநோய்க்கு அழைத்துச் செல்லும். 1999 இல் இவ்வமைப் புத் தொடங்கப்பட்டு, இப்பொழுது இதில் 1200 உறுப்பினர் உள்ளனர். இதில் 1150 பேர் கடும் நோயுடையோர். இவர்களுக்கு



## ஆஸ்பெஸ்ட்டாசின் கேடுகள்

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் ஆஸ்பெஸ்ட் டாசின் பயன்பாடு தொடங்கியது. மேற்கத்திய நாடுகள், அய்.நா. சபை, சர்வதேச தொழிலாளர் ஆணையம் உட்பட ஏராளமான அமைப்புகள் - இதன் தீமைகள் குறித்து தொடர்ந்து தங்கள் கவலைகளை வெளிப்படுத்தி வரு கின்றன. 1970லிருந்து பல நாடுகள் இதனைத் தடை செய்து வருகின்றன. ஆஸ்பெஸ்ட்டாஸ் இழைகளை சுவாசித்தால் உருவாகும் நோய்களின் பட்டியலும், இது குணப்படுத்த முடியாத நோய் என்பது பற்றிய தகவல்களும், புகையிலை எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு சமமாய் உலகம் முழுவதும் செய்யப் படுகின்றன. 'தொழில்சார் நோய்கள் கூட்டமைப்பு' இந்தியா வில் ஆஸ்பெஸ்ட்டாஸ் பயன்பாட்டைத் தடை செய்யப் பரிந் துரைத்துள்ளது. ஆனால், நடைமுறையில் நம் அரசாங்கம் தொகுப்பு வீடுகளுக்கு ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரையை இன்றள வும் பயன்படுத்தி வருகின்றது. கிராமத்தின் பள்ளிக் கூடங்கள், சத்துணவுக் கூடங்கள், பஞ்சாலைகள் என தமிழ கத்தில் எத்திசையில் பயணித்தாலும் ஆஸ்பெஸ்ட்டாஸ் விரவிக் கிடக்கிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

நிவாரணம் பெற்றுத் தருவதற்காக, என் வாழ்வின் கடைசி நிமிடங்களைச் செல விடுகிறேன் என்கிறார் எட்டியென்.

1970களில் ஆஸ்பெஸ்ட்டாசின் தீமைகளை உலகமே அறிந்தபொழுதும், அதை 1977இல்தான் பிரான்ஸ் அரசு தடை செய்தது. பிரான்சில் 2015இல் ஒரு லட்சம் பேர் ஆஸ்பெஸ்ட்டாசால் மரணம் அடைவார்கள். அரசாங்கம் முன்பே எச்சரிக்கையாக செயல்பட்டி ருந்தால் இவற்றைத் தவிர்த்திருக்கலாம். புகையிலைத் தொழில்களுக்கு அடுத்த படியாக, ஆஸ்பெஸ்ட்டாஸ் தொழிற்சாலைகள்தான் உலகம் முழுவதிலும் - கோடிக்கணக்கான டாலர்களை இழப்பீட்டுத் தொகையாக வழங்கி வருகிறது.

''பிரான்ஸ் உட்பட 26 நாடுகளில் ஆஸ்பெஸ்ட்டாஸ் தடை செய்யப்பட்டுள்ளது. இக்கப்பலை ஏன் பிரான்சில் வைத்து உடைக்கக்கூடாது? 'அளங்' ஏன் கப்பல் உடைக்கும் தளமாக இல்லாமல், கப்பல் கட்டுமானத் தளமாக மாற்றம் பெறக் கூடாது? நாம் இன்னொருவரின் பிரச்சனையை விலை கொடுத்து வாங்க வேண்டுமா? உலகக் கப்பல்களின் இறுதிச் சடங்குகளை நிகழ்த்தும் இடமா இந்தியா?'' - இப்படிப் பல கேள்விகளை உச்ச நீதிமன்ற கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜி. தியாகராஜன் முன்வைக்கிறார். அந்தக் கப்பலை இந்தியக் கடற்கரையிலிருந்து 220 மைல் தூரம் வரை நீளும் நமது வர்த்தக எல்லைக்குள் நுழைய விடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

''கிளெமென்சியே எப்படி பிரான்ஸ் அரசாங்கத்தின் சொத்தோ, அது போலவே அந்த விஷக்கழிவுகளும் அவர்களுக்குதான் சொந்தம். அந்தக் கழிவுகளை இந்திய மண்ணில் புதைக்க அனுமதிப்பது அநியாயமானது. இந்தியாவில் கப்பல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஒருங்கிணைக்கப்படாதவர்களாக, மிகவும் மலிவான ஊதியத்திற்கு அமர்த்தப் படுபவர்களாக அவர்களின் உழைப்பை - பன்னாட்டு நிறுவனங்களும், இந்திய முதலாளிகளும் திருடுகின்றனர்'' என்கிறார் சி.அய்.டி.யு. வின் தேசிய செயற்குழு உறுப்பினர் பி.கே. கங்கு.

பிரேசில், கனடா, கஜகஸ்தான், போலந்து, வட அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஜிம்பாப்வே நாடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை இந்தியா தொடர்ந்து குவித்து வருகிறது. 70-க்கும் மேற்பட்ட கழிவுப் பொருட்களைப் பல லட்சம் டன்கள் நம் மண்ணில் இறக்குமதி செய்துள்


கப்பல் உடைக்கப்படும் தளம்

## கப்பல் உடைக்கும் தொழிலாளர்களின் நிலை

ஊட்டக் குறைபாடுள்ள மிகவும் மெலிந்த உருவங்கள்தான் தங்கள் கைகளில் கற்காலத்தின் ஆயுதங்கள் போல் வழக்கொழிந்த கருவிகளோடு பணிபுரிகிறார்கள். குடல் குமுறுகிற, நாற்றமெடுக்கும் அந்தத் தளங்களில், நீண்ட நேரம் நிற்கவே முடியாது. அங்குள்ள காற்று - ஆஸ்பெஸ்ட்டாஸ் இழைகளும், துருக்கலந்த தூசும் நிறைந்தது. கப்பல் உடைக்கும் தளங்களில் பணிபுரிபவர்களுக்கு இந்தத் தொழில் புற்றுநோயை இணைப்பாக அளிக்கிறது.

வரைமுறைகளற்று கப்பலின் ஏதேனும் ஒரு மூலையிலிருந்து தொழிலாளர்கள் கப்பலை கிழித்து எறிகிறார்கள். இப்படி ஒரு திட்டமில்லாமல் அறிவியல் பூர்வமற்று கப்பல் உடைக்கப்படுவதால், எந்நேரம் எந்தத் தளம் பிய்த்துக் கொண்டு கீழே விழும் என எவருக்கும் தெரியாது. யாரின் தலை, யாரின் உடல் எப்போது பதம் பார்க்கப்படும் என்பது நிச்சயமற்றது. உயரமான தளங்களிலிருந்து திடீரென அவர்கள் விழுகிறார்கள். அவர்களின் உடல் காற்றில் மிதந்து இரும்புக் கம்பிகளின் குவியலுக்குள் சிக்கிக் கொள்கிறது. கை, கால்கள் முறிவது, முடமாய்ப் போவது, உயிரற்றுப் போவது இவைகளெல்லாம் தினசரி அலுவலின் ஒரு பகுதி. இதையெல்லாம் நீங்களோ, உங்களைச் சுற்றி பணிபுரிபவர்களோ பிரச்சனைகளாக்க இயலாது. இதையெல்லாம் கடந்து கப்பல் உடைக்கும் தளங்களில் நீங்கள் தொடர்ந்து எட்டு ஆண்டுகள்கூட பணிபுரிய இயலாது. அதற்குள் மரணம் உங்களை ஏதேனும் ஒரு வழியில் தனதாக்கிக் கொள்ளும்.


கப்பல் உடைக்கும் தளத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, எலும்பு முறிவால் ஏதும் செய்ய முடியாத நிலையில் உள்ள சத்ருகன் லெங்கா

அங்கு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, நான்கில் ஒருவருக்குப் புற்றுநோய் உள்ளது. எலும்பு முறிவு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு நாற்பது முதல் அய்ம்பது நோயாளிகள் வரை உறுதியாகக் கிடைக்கின்றனர். 1982இல் நாள் ஒன்றுக்கு சம்பளம் 25 ரூபாயாக இருந்தது. தற்பொழுது 8 மணிநேர வேலைக்கு ஊதியம் அறுபது ரூபாயாகக் கொடுக்கப்படுகிறது. கூடுதல் ஒரு மணி நேர வேலைக்குப் பத்து ரூபாய் கிடைக்கிறது. வயிற்றைக் கழுவக்கூட போதாத ஊதியம். அடிப்படை ஊதிய விகிதங்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், முதலுதவிகள், வீட்டு வசதி, குடிநீர், பாதுகாப்பு உடைகள், கண்ணாடிகள், கையுறைகள், கனத்த பூட்ஸ்கள் - இதையெல்லாம் கிலோ என்ன விலை என்று கேட்கிறார்கள் கப்பலை விலைக்கு வாங்கிய முதலாளிகள். முற்றிலும் முறைசாரா தொழிலாக ஒருங்கிணைக்கப்படாமல் திணறுகிறது இந்தத் துறை.

பீகார், ஒரிசா மற்றும் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து பஞ்சம் பிழைக்க அங்கு நாடோடிகளாய்ச் சென்றவர்கள்தான் - இங்கு பணிபுரிபவர்களில் பெரும் பகுதியினர் ஆவர். ■



படிப்பகம்

www.padippakam.com

ளோம். கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாதனது 10சதவிகித மழைக் காடுகளை இழந்துள்ளது. பல்லுயிர்ப் பெருக்கம் சிறிது சிறிதாக அரிக்கப்பட்டு, ஒற்றைப் பணப்பயிர்கள்கோலோச்சுகின்றன. நம் நீர் நிலைகள் நெகிழிப் பைகளால் மூச்சுத் திணறுகின்றன. நாம் உண்ணும் காய்கறிகள், வரலாறு காணாத அளவுக்கு பூச்சிக் கொல்லிகளைத் தங்களுள் உறிஞ்சி வைத்துள்ளன. சுற்றுப்புறச் சூழல் சமச்சீர் நிலையைக் குலைக்கக்கூடிய பெரும் எண்ணிக்கையிலான திட்டங்களை, எந்தக் கூச்சமும் இன்றி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது அரசு.

**“கடலிலும், நிலத்திலும், கப்பலிலிருந்தும் வெளியேறும் கழிவுகள் கொட்டப்படுவதை உடனடியாக நிறுத்தினாலும், இன்னும் 20 ஆண்டுகளுக்கு அந்த நச்சுத் தன்மை படிந்திருக்கும். ஆழ்ந்து கவலை கொள்ளத்தக்க தகவல் இது. இந்த நிலை உருவானதற்கு நம் கல்விக் கூடங்களும், ஊடகங்களும் பொறுப்பேற்க வேண்டும்.”**

1990 களிலிருந்து உலகமயத்தின் தொடக்கத்திற்குப் பிறகு, தொடர்ந்து நம் நாட்டில் பல கேலிக்கூத்துகள் அரங்கேறிய வண்ணம் உள்ளன. நம் நீர் நிலைகள் மாசுபடுவது, இயற்கை வளங்கள் தங்கு தடையற்றுக் கொள்ளை போவது, நம் கண் முன்னால் காடுகள் அழிக்கப்படுவது - இவையெல்லாம் தினசரி செய்திகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. நம் வாழ்க்கை முறை, நுகர்வு முறைகூட மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. நம் விழுமியங்கள் மாற்றப்படுகின்றன. தனி நபர்களை ஒவ்வொரு நொடியும் ஊடகங்கள் மூளைச் சலவை செய்து கொண்டேயிருக்கின்றன. உலகின் கழிவுக் கிடங்காக நம் நாட்டை வேகமாக மாற்றி வருகிறோம். குறுகிய கால நலன்களின் அடிப்படையில் இல்லாமல், நீண்ட கால பாதிப்புகளையும் கணக்கில் கொண்டுதான் நம் திட்டமிடல்கள் இருக்க வேண்டும்.

கடலிலும், நிலத்திலும், கப்பலிலிருந்தும் வெளியேறும் கழிவுகள் கொட்டப்படுவதை உடனடியாக நிறுத்தினாலும், இன்னும் 20 ஆண்டுகளுக்கு அந்த நச்சுத் தன்மை படிந்திருக்கும். ஆழ்ந்து கவலை கொள்ளத்தக்க தகவல் இது. சுற்றுப்புறச் சூழல் குறித்த விழிப்புணர்வற்ற மந்தைத்தனம் நம் மனங்களில் படர்ந்துள்ளது. இந்த நிலை உருவானதற்கு நம் கல்விக் கூடங்களும், ஊடகங்களும் பொறுப்பேற்க வேண்டும். உலகமே தங்கள் நிலப்பரப்புகளைப் பாதுகாக்க முனைப்போடு செயல்படும் நேரத்தில், நம் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் கிளெமென்சியேவுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கிறது.

நம்பிக்கை அளிக்கும் வகையில் பல சுற்றுப்புறச் சூழல் குழுக்கள், தங்கள் எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன. இப்பொழுது பலர் ஆதரவு தெரிவித்து களம் இறங்கியுள்ளனர். இந்தியாவில் நடந்து வரும் இந்த எதிர்ப்புகளைக் கணக்கில் கொண்டு பிரான்ஸ் அரசாங்கம், முதல் முறையாக அதன் நிலையில் சிறிய மாற்றத்தை அறிவித்துள்ளது. கிளெமென்சியேவிலிருந்து வெளியேறும் ஆஸ்பெஸ்ட்டாசை, தனது நாட்டிற்கே எடுத்துச் செல்ல ஒப்புக் கொண்டது. கப்பலிலிருந்து வெளியேறும் மொத்த அளவு ஆஸ்பெஸ்ட்டாசையும் பிரான்ஸ் அரசு திருப்பி எடுத்துச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக வாக்குறுதி அளிக்க வேண்டும் பிரான்ஸ் அரசு.

பிப்ரவரி 13 ஆம் தேதி நாடே உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்காக காத்துக் கிடந்தது. ஆனால், பிப்ரவரி 12 ஆம் தேதி வரை உச்ச நீதிமன்ற கண்காணிப்புக் குழு கேட்டுக் கொண்டதற்கிணங்க, பிரான்ஸ் அரசு கப்பலில் உள்ள பொருட்கள் பற்றிய பட்டியலை ஒப்படைக்கவில்லை. கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் அதிருப்திப்படவில்லை என அறிவித்தது உச்ச நீதிமன்ற பெஞ்ச். ஓய்வு பெற்ற கப்பல் படை அதிகாரிகள் நால்வர் கொண்ட குழுவை பரிந்துரை செய்ய மத்திய அரசாங்கத்திடம் கோரியுள்ளது. இந்த நால்வர் கொண்ட குழு என்ன செய்யப் போகிறது என்று பார்த்தால், இவர்கள் இனிமேல்



புது தில்லியில் 'கிரீன்பீஸ்' ஆர்வலர்கள் கிளெமென்சியே இந்தியாவில் நுழையக் கூடாது என எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்

தான் அந்தக் கப்பலுக்குச் சென்று பட்டியலைத் தயாரிக்கவிருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தை பிரான்ஸ் அரசாங்கத்தின் குமாஸ்தாக்களாக மாற்றியுள்ளார்கள். நாடே கவலையில் ஆழ்ந்திருக்கும் ஆபத்து குறித்து எழுதவும் விவாதிக்கவும் எதிர்ப்புத் தெரிவிக்கவும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அரிஜித் பசயத், கபாடியா தடை விதித்துள்ளனர். சர்ச்சைக்குரிய நேரங்களில் பேச்சுரிமை, எழுத்துரிமை பறிக்கப்படுமென்றால், இது யாருக்கான ஜனநாயகம்?

கடந்த ஆண்டு இதே போல் விஷமேறியக் கப்பல், டென்மார்க்கிலிருந்து இந்தியா வந்தது. இரு நாடுகளிலும் கடும் எதிர்ப்பு எழுந்தது. இதே போல் கப்பல் அரபிக் கடலில் காத்துக் கிடந்தது. டென்மார்க் அரசாங்கம் தன் தவறை உணர்ந்து கப்பலைத் திருப்பி தங்கள் நாட்டிற்கே எடுத்துச் செல்ல முடிவெடுத்தது. ஆனால், நம் உச்ச நீதிமன்றம் அந்தக் கப்பல் 'அளங்'கில் உடைக்கப்படலாம் எனத் தீர்ப்பு வழங்கியது. இதன் மூலம் இது எந்த நாட்டு நீதிமன்றம் என்ற குழப்பத்தையும் அது ஏற்படுத்தியது.

கிளெமென்சியே 'அளங்'கிலிருந்து 220 மைல் தூரத்தில் காத்து நிற்கிறது. அந்தக் கப்பலின் நுழைவாயிலில் ஒரு எச்சரிக்கைப் பலகை தொங்குகிறது. அதிலுள்ள வாசகம் இப்படிச் சொல்கிறது :

''கட்டுமானத் தளம் பொதுமக்களுக்கு அனுமதியில்லை - ஆஸ்பெஸ்ட்டாஸ் விஷமேறியக் கப்பல்.''



படிப்பகம்

www.padippakam.com

# மடல்கள்



■ நிர்வாண சாமியாரிடம் குழைந்து நிற்கும் குடியரசுத் தலைவர் படக்கவிதை, மானம் பிடுங்கித் தின்னக் கூடியதாய் அமைந்துள்ளது. தலித் க. சுப்பையாவின் பேட்டி, வரலாற்று புத்தகம் படிப்பது போல விறு விறுவென்றுள்ளது. உலகின் நண்பன் பிடல் காஸ்ட்ரோவின் பிம்பமே தனித்துவம் வாய்ந்ததுதான்!

கா.பா. ரேமண்ட் (எ) பவுத்தன்
*பூவிருந்தவல்லி*

■ கியூபா கண்டெடுக்கப்பட்டு 450 ஆண்டுகளாக ஓர் அடிமை நாடாகவே இருந்தது. கியூபா பிடல் காஸ்ட்ரோவை அணைத்துக் கொண்ட பிறகு, அது வரலாற்றில் இடம் பிடித்தது மட்டுமின்றி, அமெரிக்காவின் சிம்ம சொப்பனமாகவும் திகழ்கிறது. மருத்துவம், சுகாதாரம், கல்வி என அது ஆற்றும் பணிகளில் ஒரு சதவிகிதத்தைக்கூட அமெரிக்கா மற்ற நேச நாடுகளுக்குத் தந்தது இல்லை. கியூபா - உலகின் நண்பன் மட்டும் அல்ல; மற்ற எல்லா நாடுகளுக்கும் அது ஓர் அழகான முன்மாதிரி.

எச்.எஸ். முகம்மது ராபி
*ராமேஸ்வரம்*

■ 'அம்பேத்கர் சிந்தனையில் முகிழ்ப்பதே தலித் இலக்கியம்' - சரண்குமார் லிம்பாலேவின் விரிவான பேட்டி, இதுகாறும் தமிழ்ச் சூழலில் தலித் அறிவுஜீவிகள் அளித்து வந்த விளக்கங்களையும், குழப்பங்களையும் தீர்த்து வைத்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களிடம் சுயமரியாதை உணர்வை சுடர் விட்டு எரிய வைத்துள்ளது.

பி.கே. லட்சுமணன்
*அன்னதானப்பட்டி*

■ சீனாகூட முதலாளித்துவத்திற்கு கதவு திறந்து விட்ட போதிலும், 46 ஆண்டுக் காலம் பொருளாதாரத் தடை இருப்பினும், அதிரடிப் பாய்ச்சலில் அமெரிக்கக் கண்களில் விரலை விட்டு ஆட்டும் கியூபாவின் ஆட்சித் திறமைக்கு ஒரு 'சல்யூட்'. எத்தனையோ முறை நீர் வந்திருந்தாலும் ஆற்றில் புது வெள்ளம் வருவது கண்டால், நம் மனம் புத்துணர்ச்சி பெறுவது போல, தலித் முன்னோடிகள், சான்றோர்கள் பேட்டிகளை கேட்டறிந்த நமக்கு, வடதிசையில் நடந்ததை சரண்குமார் லிம்பாலே தலித் முரசில் பகிர்ந்து கொண்டது மிகவும் அருமை. மாட்டின் வயிற்றில் இறங்கிய கடப்பாறைக்கு பதிலடியாய், சாதி வெறிபிடித்த கயவனை நதியில் தூக்கி வீசிய ஆதவன் தீட்சண்யா கதையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

சு. ராவணன், *அரூர்*

## லட்சியத்தைப் பரப்புக!

கடந்த ஆறு திங்களாக 'தலித் முரசை' தொடர்ந்து படித்து வருகிறேன். வடிவமைப்பு, கருத்துச் செறிவான கட்டுரைகள், நிழற்படங்கள் என அனைத்துமே எடுத்துக் கொண்ட லட்சிய நோக்கத்தைத் தாண்டிச் செல்வது இல்லை. சமகால நிகழ்வுகளை, சிக்கல்களைப் பதிவு செய்து ஆய்வுக் கண்ணோட்டத்துடன் செய்திகளை வெளியிடுவதோடு, வரலாற்று வளர்ச்சிப் போக்கில் ஒடுக்கப்பட்டவர்கள் எப்படி ஒடுக்குமுறைக்கு ஆளானார்கள் என்பதையும், ஒடுக்கப்பட்டவர்களின் தத்துவம் பொருள் முதல்வாதமே என்பதையும் பல்வேறு வரலாறு, தத்துவப் பின்னணியில் ஆதாரங்களோடு பல கட்டுரைகளை இதழ்தோறும் வெளியிட்டு, மாபெரும் பணியினைச் செய்து வருகிறீர்கள்.

பத்தாண்டுகள் இதழ் நடத்துவது போல் நாம் நம்மை வெளிப்படுத்தி விளம்பரப்படுத்துவதிலும் தவறில்லை. பல பகுதிகளில், ஆர்வமுடையோரை களப் பணியாளர்கள் போல தயார் செய்ய வேண்டும். வாசகர் வட்டத்தின் எண்ணிக்கை அதிகமாதல் வேண்டும். கட்டுரையின் எழுத்து நடை, இன்னமும் எளிமைப்படுத்தப்பட வேண்டும். செய்திகளாகக் கொடுங்கள். இரண்டு மூன்று பக்கங்கள் இருப்பதே அதிகம் என்று கருதுகிறேன். மால்கம் எக்ஸ் கட்டுரை படித்தேன். சிறப்பாக இருக்கிறது. இனஇழிவிற்கு இசுலாமே மருந்து என்று பெரியார் சொல்லி இருந்தாலும், இன்றைய இந்திய, தமிழ்நாட்டு இசுலாமியர்கள் தலித்துகளின் சிக்கல்களை எவ்வாறு பார்க்கிறார்கள்? ஒடுக்குமுறைக்கு ஆளாகும் இவ்விரு பெரும் மக்கள் திரள், அதனைக் கூட்டாக எதிர்கொள்ள என்ன முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதையும் கவனப்படுத்த வேண்டும்.

மருத்துவர் அன்புமணி, *களமருதூர்*

■ பத்தாம் ஆண்டில் தடம் பதிக்கும் 'தலித் முரசு'க்கு வாழ்த்துகள். திரைப்பட நடிகைகளின் கவர்ச்சியையும், அந்தரங்க வாழ்க்கையையும் முக்கிய செய்தியாக்கி, எண்ணற்ற இளைய தலைமுறையைக் கெடுத்து வரும் பத்திரிகைகள் மலிந்துவிட்ட இந்நாளில், தீண்டாமைக் கொடுமைகளையும், 'இந்துத்துவ - பார்ப்பனிய சதிகளையும், அரசியல் மற்றும் ஆன்மீகவாதிகளின் அயோக்கியத்தனங்களையும், மத்திய - மாநில அரசுகள் நம் மக்களுக்குச் செய்து வருகின்ற அநீதிகளையும் அம்பலப்படுத்தி, ஒடுக்கப்பட்ட மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்யும் ஊடகமாக, பகுத்தறிவைப் புகட்டும் பல்கலைக் கழகமாக விளங்கும் 'தலித் முரசை' எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது.

எஸ். மனுவேல்ராஜ்,
*பாளையங்கோட்டை*

■ 'தலித் முரசு' பத்தாம் ஆண்டு சிறப்பிதழ் முகப்பு அட்டையில், அழகுக்கு அழகு சேர்ப்பது போல், பாலா எடுத்த மேலவளவு அன்னை படம் இடம் பெற்றுள்ளது. நடிகையரின் கவர்ச்சிப் படங்களை அட்டையில் போட்டுச் சமூகத்தை நாறடித்து வரும் இதழியல் உலகில், அழகியலுக்குப் புது இலக்கணம் வரைந்துள்ள தலித் முரசை வாழ்த்துகிறோம். தாய்வழிச் சமூகத்தின் தொல்மரபைத் தாங்கி நிற்கும் தங்களைப் போற்றுகிறேன். அரிய படங்களுடன் கூடிய 'கியூபா: உலகின் நண்பன்' - அ. முத்துக்கிருஷ்ணன் கட்டுரை அருமை. கல்வெட்டாய் நெஞ்சில் நிலைக்கிறது. தலித் சுப்பையாவின் நேர்காணல். சிதைந்த சேரிகளையும் அழகிய பாடலாக்கும் அற்புதம், அழகிய பெரியவன் போன்றோர்க்கே வாய்க்கும் போலும். பாராட்டுகள்.

தமிழேந்தி, *அரக்கோணம்*

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94, Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் பேசுகிறார்

# கீழ் வெண்மணிக் கொடுமைகளைத் தடுக்கும் வழிமுறைகள் என்ன? - I

ஜனநாயக ஆட்சி உள்ளவரை யோக்கியர் மறைந்து போக வேண்டியதுதான்; அயோக்கியர்கள் ஆட்டம் போட வேண்டியதுதான். இந்திய மக்கள் காட்டுமிராண்டிகள்; இந்திய தர்மம் குற்றப் பரம்பரையர்கள் தர்மமேயாகும். மநுதர்மவாதிகள் உள்ளவரை நாடு - ஒழுக்கம், நேர்மை, நாணயம், நீதி பெற முடியாது. வெள்ளையன் வெளியேறியவுடன் நாடு அயோக்கியர்கள் வசமாகிவிட்டது.

காந்தியார் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாகி(த்தான்) ஒரு மகானாக ஆவதற்கு எண்ணி என்றைய தினம் மக்களை சட்டம் மீறும்படித் (அயோக்கியர்களாகும்படி) தூண்டி விட்டாரோ, அன்று முதல் மனித சமுதாயம் ஒழுக்கத்தில் கீழ் நிலைக்குப் போய் விட்டது! சட்டம் மீறுதல் மூலமும் சத்தியாகிரகம் என்னும் சண்டித்தனம் செய்தல் மூலமும் காரியத்தை சாதித்துக் கொள்ள, மக்களுக்கு காந்தி என்று வழி காட்டினாரோ அன்று முதலே மக்கள் அயோக்கியர்களாகவும், காலிகளாகவும் முந்திவிட்டார்கள்.

'புழுத்துப்போன பண்டத்தின் மீது நாய் வெளிக்குப்போன' மாதிரி மக்களை அயோக்கியர்களாக ஆக்கிவிட்டு, ஜெயிலையும் உடம்பைத் தேற்றிக்கொள்ளும் ஓய்விடமாகப் பார்ப்பனர்கள் என்று ஆக்கினார்களோ, அன்று முதலே யோக்கியர்கள் எல்லாம் அயோக்கியர்களாக ஆகவேண்டியவர்களாகி விட்டார்கள். யோக்கியர்கள் மானத்தோடு வாழ இடமில்லாமல் போய்விட்டது.

எந்த மனிதனும் 'அயோக்கியனாக ஆனாலொழிய வாழ முடியாத' நிலை ஏற்பட்டு விட்டது. 'சட்ட விரோதமான குற்றங்களைச் செய்தவன்தான் ராஷ்டிரபதியாகவும், பிரதமராகவும், முதல் மந்திரியாகவும் மற்றும் மந்திரிகளாகவும், பெரும் பதவியாளர்களாகவும் ஆக முடியும்' என்ற நிலைமை ஏற்பட்டவுடன் - அரசியலில் யோக்கியர்களுக்கு இடம் இல்லாமலே போய்விட்டது. அயோக்கியர்களுக்கே ஆட்சி உரிமையாகிவிட்டது.

இந்த நிலையிலும் இந்தத் தன்மையிலும் நாட்டுக்கு 'சுதந்திரம்' கிடைத்து இருபது ஆண்டுகளில் நாட்டில் செல்வாக்குப் பெறாத அயோக்கியத்தனம், அக்கிரமம், கொள்ளை கொலைகாரத்தனம், நாச வேலைகள் என்பவைகளில் ஒன்றுகூட பாக்கியில்லாமல் செல்வாக்குப் பெற்று, தினசரியில் நடைபெற்று வருகின்றன. அவை எந்த அளவுக்கு வளர்ந்தன என்றால் : 1. காந்தியார் கொல்லப்பட்டார் 2. தலைவர் காமராஜரைக் கொல்ல முயற்சிகள் செய்யப்பட்டன 3. போலிஸ் அதிகாரிகள் கட்டிப் போட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தப்பட்டனர் 4. நீதி ஸ்தலங்கள், ரயில் நிலையங்கள் கொளுத்தப்பட்டன. ஜெயில் கதவு உடைக்கப்பட்டது. பல வாகனங்கள் (பஸ்கள்) கொளுத்தப்பட்டன. வழிப்பறிகள் நடந்தன. மற்றும் நிலங்களில் துர் ஆக்கிரகமாகப் பயிர்கள் அறுவடை செய்து கொண்டு போகப்பட்டன. விவசாயிகளின் வீடுகள் கொளுத்தப்பட்டன 5. கடைசி நடவடிக்கையாக நேற்று முன்தினம், தற்காப்புக்கு ஆக ஓடி ஒரு வீட்டிற்குள் ஒளிந்து கொண்ட ஆண், பெண், குழந்தைகள் உட்பட 42 பேர்கள் பதுங்கிக் கொண்ட வீட்டைப் பூட்டி விட்டுக் கொளுத்தி, 42 பேரும் கருகி சாம்பலாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவும் அரசியல் கட்சிக்காரர்களால் பட்டப் பகலில் வெட்ட வெளிச்சத்தில் வெளிப்படையாகவே செய்யப்பட்ட காரியங்களாகும்.

சட்ட விரோதமான, பலாத்காரமான, நாச வேலைகளான காரியங்களைச் செய்து, அதன் மூலம் பலன் பெறுவதற்கென்றே ஏற்படுத்திக் கொண்ட ஸ்தாபனங்களாலேயே, அவற்றின் பலனாகவே செய்யப்பட்ட, நடைபெற்ற காரியங்களாகும். இவைகளை அடக்கப் பயன்படும்படியான போதிய சட்டமில்லை; சட்டம் செய்வது மூலாதாரக் கொள்கைக்கு விரோதமாக இருந்து வருகிறது.

சட்டத்திற்கும், நீதிக்கும் சம்பந்தமில்லாத நீதிஸ்தலங்கள்தான் நிறைந்திருக்கின்றன. சட்டங்களின் யோக்கியதை இப்படி இருக்க - பழி வாங்கும், ஜாதி உணர்ச்சி கொண்ட, சுயநலத்தையே முக்கியமாய்க் கருதுகிற நீதிபதிகளே 100க்கு 90 பேர்களாக இருக்கிறார்கள்.



அமைச்சர்களும், ஆட்சியாளர்களும் இந்த நிலையை மாற்ற, அடக்க ஆரம்பித்தால் நமது பதவிக்கு ஆபத்து வந்து விடுமே என்று பயந்தவர்களாகவே இருந்து வருகிறார்கள் என்பது மாத்திரமல்லாமல் - அமைச்சர்கள் 'நாங்கள் செய்வதையெல்லாம் மாற்றி தங்களுக்கு அவமானம் உண்டாக்கும்படியான நீதிஸ்தலங்களும், நீதிபதிகளும் 'எங்களுக்கு மேலாக' இருப்பதால் - எங்களால் மக்கள் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஒன்றும் செய்ய முடியவில்லை' என்கிறார்கள். மற்றும் லஞ்சம், ஒழுக்கக்கேடு, நேர்மை அற்றத்தன்மை இல்லாத அதிகாரிகள் மிக மிக அரிதாகவே இருக்கிறார்கள்.

அவற்றைக் கண்டுபிடித்தால் சிபாரிசு வருகிறது. அதை அலட்சியம் செய்து நடவடிக்கை நடத்தினால், நீதிஸ்தலங்கள் பெரிதும் அவர்களை குற்றமற்றவர்களாக ஆக்கிவிடுகின்றன. ஜாதி காரணமாக, சிபாரிசு காரணமாக அரசாங்கத்தைப் பழிவாங்கும் காரணமாக - எப்படிப்பட்ட ஒழுக்கக் கேடான அதிகாரியும் நீதிஸ்தலங்களில் தப்பித்துக் கொள்கிறார்கள்.

*- அடுத்த இதழிலும்*



*கீழ்வெண்மணியில் 42 தலித் மக்கள் கொல்லப்பட்டதையொட்டி, பெரியார் விடுத்த அறிக்கை 'விடுதலை' 28.12.1968*

**"கடைசி நடவடிக்கையாக நேற்று முன்தினம், தற்காப்புக்கு ஆக ஓடி ஒரு வீட்டிற்குள் ஒளிந்து கொண்ட ஆண், பெண், குழந்தைகள் உட்பட 42 பேர்கள் பதுங்கிக் கொண்ட வீட்டைப் பூட்டிவிட்டுக் கொளுத்தி, 42 பேரும் கருகி சாம்பலாக்கப் பட்டிருக்கிறார்கள். இவ்வளவும் அரசியல் கட்சிக்காரர்களால் பட்டப் பகலில் வெட்ட வெளிச்சத்தில் வெளிப்படையாகவே செய்யப்பட்ட காரியங்களாகும்."**



படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

2006 (மார்ச் 18) பங்குனி 4 - சனிக்கிழமை

யூ.சி. பள்ளி விளையாட்டுத் திடலில்

கருத்தரங்கு
பரட்டை நினைவரங்கில்
காலை 10 மணி முதல் 5 மணி வரை

மாலை 6 மணி முதல் விடிய... விடிய... தலித் கலை விழா

உரைவீச்சு

ப. சிவகாமி இ.ஆ.ப.
பாரதி கிருஷ்ணகுமார்
கவிஞர் முகில்

# தலித் கலைவிழா



அரங்கில்
100 கலைஞர்கள் ஒரே மேடையில் நிகழ்த்தும்
இசைப்போர்
ஆட்டங்கள்
குரலிசை
உரைவீச்சு
விருது வழங்குதல்
வெளியீடு
நாடகம்

இன்னும் நிறைய விடிய... விடிய...

சாதிய சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட பாரம்பரிய தலித் கலைகளையும், தலித் தொழிற்கலைஞர்களையும் ஆண்டுக்கொருமுறை மேடையேற்றி மரியாதை செய்து விருது வழங்க...

தலித் மக்களின் மறைக்கப்பட்ட வரலாற்றையும் மறுக்கப்பட்ட அடையாளங்களையும் வெளிக்கொணரும் அரசியல் அரங்கமாக

## தலித் கலைவிழா

விடிய... விடிய... நடைபெறும்

விடுதலை விழாவிற்கு குடும்பத்தோடு வாருங்கள்

தலித் ஆதார மய்யம்
தமிழ் நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை - 16

தொலைபேசி : +91 - 452 - 23 02 199
0452 - 26 02 352
அலைபேசி : 9842917794



படிப்பகம்